386

386
1-365

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

# ஸ்ரீ கள்ளழகர் கோயில் வரலாறு.

SCRUTINY OFFICER
29 MAR 196




சுந்தரராஜ 'ஏகாந்த சேவை'

O22:38.21195.1C
N65
N1076
SCANNED
C

ஸ்ரீ :

ஸ்ரீ சுந்தரராஜ பரப்பிர்ம்மணே நம :



3
PUBLIC INFORMATION
C

# திருமாலிருஞ்சோலைமலை

# ஸ்ரீ கள்ளழகர் கோயில் வரலாறு.

ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தான வெளியீடு.

**1965**

இதன் விலை 75 புது காசு.

112076


# ஸ்ரீ கள்ளழகர் கோயில் வரலாறு.

## பொருளடக்கம்.


1. ஸ்தல புராணம்.
2. அழகர் கோயில் சரித்திரம்.
3. இலக்கியக் குறிப்புகள்.
4. கோயிலைப்பற்றிய சாசனங்கள்.
5. அழகர் மலையில் உள்ள மற்ற தெய்வங்கள்.
6. சிலைகளும், சிற்பங்களும்.
7. மற்றும் பார்க்கத் தகுந்தவை.
8. திருவிழாக்கள்.

386
1-65

# ஸ்ரீ கள்ளழகர் கோயில் வரலாறு

## 1. ஸ்தல புராணம்

கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில்சேர் மாலிருஞ் சோலை
தளர்வில ராகில் சேர்வது சதிரே.

—நம்மாழ்வார் திருவாய்மொழி

அழகர்மலை என்பது மதுரைக்கு வடக்கே 12 மைல் தூரத்தில் இருக்கிறது. இதில் அழகர் என்ற பெயர் கொண்ட திருமால் (மஹாவிஷ்ணு) கோயில் கொண்டிருப்பதால் இது அழகர்மலை என்று சொல்லப்படும். இதற்குத் திருமாலிருஞ்சோலை, உத்யான சைலம், சோலைமலை, மாலிருங்குன்றம், இருங்குன்றம், வனகிரி, விருஷபாத்ரி அல்லது இடபகிரி முதலிய பல பெயர்கள் உண்டு. இது கிழக்கு மேற்காகப் பத்து மைல் நீளமும் 1000 அடி உயரமும் உடையது. இதிலிருந்து பல சிறிய மலைகள் நாலா பக்கமும் பிரிந்து போகின்றன. இதன் தென்புறம் அடிவாரத்தில்தான் அழகர் கோயில் இருக்கிறது. இம்மலையில் பலவகை மரங்களும் செடிகளும் கொடிகளும் மிகவும் நெருக்கமாக வளர்ந்து பச்சைப் பசேலென்று கண்ணுக்கு குளிர்ச்சியான காட்சியைத் தந்து நிற்கின்றன. இதில் இயற்கையாகவே பல சோலைகள் அமைந்திருப்பதால் இதைச் சோலைமலை, திருமாலிருஞ்சோலை, வனகிரி முதலிய பெயர்களால் அழைக்

7-65



கிறார்கள். இச்சோலைகளில் பூக்களும் காய்களும் கனிகளும் மிகுதியாக உண்டாகிக் கண்ணுக்கும் மனத்திற்கும் இன்பம் ஊட்டும்.

ஸ்ரீ அழகருக்குக் கள்ளழகர் என்னும் திருநாமமுண்டு. இப்பகுதியில் வசிக்கும் கள்ளர் வகுப்பினருக்கு இவர் குல தெய்வமாகையால், இவருக்குக் கள்ளழகர் என்ற பெயர் உண்டாயிற்று. இதுவே சம்ஸ்கிருதத்தில் சுந்தரராஜர் என்று சொல்லப்படும். மஹாவிஷ்ணுவுக்கும் அவர் அவதாரமாகிய ராமர் முதலானவர்களுக்கும் அழகர் என்னும் பெயர் பழைய தமிழ் நூல்களிலேயே உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அழகர் என்பதற்கு அழகுடையவர் அழகானவர் என்று அர்த்தம். மதுரை நகரத்தில் உள்ள பழைய விஷ்ணு க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்திக்கும் கூடலழகர் என்னும் பெயர் ஏற்பட்டிருப்பதும் இதனால்தான். இன்னும் பல க்ஷேத்திரங்களிலும் விஷ்ணுவுக்கு அழகர் என்றும் சுந்தரராஜர் என்றும் திருநாமங்கள் உண்டு. இதனால் விஷ்ணுவை அழகர் என்று கூறும் வழக்கம் இருப்பது தெரியவரும்.

ஸ்ரீ கள்ளழகர் க்ஷேத்திரம் மிகவும் பழமையானது. இது எப்பொழுது தோன்றியது என்று சொல்ல முடியாத பழமை உடையது. மிகவும் பழைய தமிழ் நூல்களிலும் சம்ஸ்கிருத புராணங்களிலும் கூட இதன் பெருமை பேசப்பட்டிருக்கிறது. எல்லாக் கோயில்களுக்கும் தனியாக ஸ்தல புராணங்கள் இருப்பதுபோல இதற்கு இல்லை. இதன் பழமை ஸ்தல புராண காலத்திற்கும் முந்தியது என்று இதனால் தெரிந்து கொள்ளலாம்.

இங்கே உள்ள தீர்த்தம், தலம், மூர்த்தி ஆகியவை பற்றி வராக புராணம், பிரம்ம புராணம், வாமன புராணம், ஆக்நேய புராணம் முதலியவற்றில் மிகவும் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புராணங்களில் உள்ள செய்திகளைத் திரட்டியே இதற்குப் பிற்காலத்தில் ஒரு ஸ்தல புராணம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் பெயர் விருஷபாத்ரி மஹாத்மியம் என்பது. இந்த விருஷபாத்ரி அல்லது விருஷபகிரி மகாத்மியம், வியாஸருடைய சிஷ்யராகிய சூதன முனிவரால் நைமிசாரணியத்தில் இருந்த முனிவர்களுக்குக் கூறப்பட்டது.

ஸ்தல புராணம் ;—ஒரு நாள் நைமிசாரணிய வாசிகளான மஹரிஷிகள், காலையில் தங்கள் ஜபம், தபம், ஹோமம் முதலியவைகளைச் செய்துவிட்டுப் பக்தியோடு ஒன்ருகக் கூடி பதினெட்டுப் புராணங்களையும் வெளியிட்டவராகிய ஸ்ரீ பகவான் வேதவியாச முனிவரின் சிஷ்யரும், எல்லாப் புராணங்களின் ரகஸ்யங்களையும் நன்ருக அறிந்தவருமான சூத மகாமுனிவரை நோக்கி, " நீங்கள் முன்பு ஒருதரம் வராக புராணத்தை எங்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்த போது பாண்டியநாட்டில் உள்ள பழம்பதியாகிய விருஷபாத்ரியின் பெருமையைச் சுருக்கமாகச் சொன்னீர்கள். அதனை இப்பொழுது மறுபடியும் மிக விரிவாகச் சொல்ல வேண்டும் என்று பிரார்த்திக்கிருேம்", என்ருர்கள். பிறகு சூதமுனிவர் சொல்லலானுர் :—

" சௌனகாதி மஹாமுனிவர்களே ! ஸ்ரீ விருஷபகிரியின் பெருமையைச் சொல்லுகிறேன், கவனமாகக் கேளுங்கள். மலயபர்வதத்திற்கு (பொதியமலை) வடக்கே

பத்து யோஜனை தூரத்திலும், காவேரி நதிக்குத்தெற்கே ஆறு யோஜனை தூரத்திலும், வராஹ (பழனி) பர்வதத்திற்குக் கிழக்கே ஆறு யோஜனை தூரத்திலும் ஸ்ரீ விருஷபாத்திரி என்ற பிரசித்தமான மலை உண்டு. இந்த விருஷபகிரிக்கு மற்ற மலைகளை ஒப்பிடும்போது இது கம்பீரமான காளை போலவும் அவை கேவலம் பசுக்கள் போலவும் ஆகும்.யமதர்மராஜன் 'விருஷ' என்ற தர்ம ரூபத்தோடு தபசு செய்து, பகவானிடத்தில் இம்மலைக்கு விருஷபாத்ரி என்று பெயரிடும்படி வேண்டினன். இம்மலையின் சிகரத்தில் ஸ்ரீமந் நாராயணனது பாதச் சிலம்பிலிருந்து பெருகிவரும்படியான நதி ஒன்றுண்டு. அதனல் இதற்குச் சிலம்பாறு என்றும் நூபுரகங்கை என்றும் பெயர்கள் உண்டு. ஜன்மாந்தரங்களில் நாம் செய்த சகல பாபங்களையும் போக்கடித்துப் புண்ணியத்தைத்தருவதாலும் இகபர சுகங்களைத் தருவதாலும், இதற்கு ஈடான தீர்த்தம் வேறென்றுமில்லை. அன்றியும் நாம் விரும்புவதையெல்லாம் இது கொடுப்பதால் இதற்கு இஷ்டசித்தி என்றும் ஒரு பெயர் உண்டு.


திருமலையின் சிறப்பு :— நாற்புறங்களிலும் சிகரங்களோடு கூடினதும், சங்கு போன்றும் முத்துச்சிப்பி போன்றுமுள்ள காந்தியுள்ளதும், பலவித பக்ஷி ஜாலங்கள் நிறைந்ததுமாயுள்ள இம்மலையை மஹ ரிஷிகள் வணங்குகிருர்கள். இதில் பல ரிஷீஸ்வரர்களும் பிரம்ம நிஷ்டர்களும் இருக்கிருர்கள். பலவித தாதுக்களும் மூலிகைகளும் இருக்கின்றன. இதன் காந்தி ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விதமாய், நவரத்ன தேஜஸுடன் இருக்கும். சூரியனுடைய ஒளியும் சந்திர

னுடைய ஒளியும் இதில் பட்டு, பலவிதமாய்ப் பிரகாசிக்கும். இம்மலையில் ஸ்ரீமந் நாராயணனுடைய சாந்நித்யம் எப்பொழுதும் இருப்பதால் இதைச் சேவிப்பவர்கள் எங்கும் எதிலும் வெற்றியடைவார்கள்.


ஒரு சமயத்தில் தர்மதேவன் இப்பூமியிலுள்ள சகல க்ஷேத்திரங்களையும் தரிசித்துக்கொண்டு வரும்போது பூலோக வைகுண்டம்போல் விளங்கும் இச்சோலை மலையை அடைந்து, பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் தவம்புரிந்தான். அப்போது அவர் ஸ்ரீமந்நாராயணனை சுந்தரராஜரைத் தரிசித்துப் பரிசுத்தம் அடைந்தான். பிறகு அத்தர்மதேவன் கேட்டுக்கொண்டபடியே, ஸ்ரீ சுந்தரராஜர் தன்னை அவர் அங்குப் பூஜிப்பதற்காக, நூபுரகங்கைக் கரையில் ஒரு ஆலயம் கட்டி வழிபடுமாறு அநுக்கிரகம் செய்தார். பிறகு தர்மதேவன் அங்கு இரவில் சந்திரன் அதிக அழகாகக் கலைகளைப் பரப்பி விளங்குவதைக் கண்டு, அந்த சந்திரன் வடிவாகவே ஒரு விமானத்தைச் செய்வதற்கு, தேவதச்சனை விஸ்வ கர்மாவை அழைத்தான். உடனே மந்தார மரங்கள் நிறைந்த நூபுரகங்கா நதிக்கரையில், ஓர் அரசமரத்தடியில், விஸ்வகர்மா சோமச்சந்த விமானத்தை நிர்மாணித்தான். அதன் அழகைக்கண்டு தர்மதேவன் மிகவும் பிரமித்து நின்றான். மீண்டும் தர்மதேவன் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்து அவ்விமானத்தின் கீழ் என்றும் எழுந்தருளியிருக்குமாறு வேண்ட, ஸ்ரீமந் நாராயணனும் அப்படியே மிகவும் சந்தோஷத்துடன், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் அதில் எழுந்தருளினர். பிறகு தர்மதேவன் வேண்டுகோளின்படி அவர்

அங்கேயே இருந்து மனிதர்களுடைய குறைகளைப் போக்கி அவர்களுக்கு அநுக்கிரகம் செய்தவண்ணம் இருக்கிறார்.

சிலம்பாற்றின் வைபவம்:—திருமாலுடைய திருவடி சிலம்பிலிருந்து உற்பத்தியாகி இம்மலையில் பெருகிவரும் சிலம்பாற்றின் பெருமை அளவிட முடியாதது. பிரகலாத னுடைய பேரனான பலிச்சக்கரவர்த்தி என்பவன் பெரிய தவங்களைச் செய்து மூன்று உலகங்களையும் (சுவர்க்க, மத்திய, பாதாளம்) பெற்று யாராலும் மரணமடையாம லிருக்கும்படி வரத்தையும் அடைந்தான். இதனால் தேவர்கள் தம் பதவியையும் போகங்களையும் இழந்து, அவற்றைத் திரும்பவும் தமக்கு வாங்கித்தரும்படி, மஹா விஷ்ணுவை வேண்டினார்கள். அவர் தேவர்களுக்கு அபயமளித்து, அவர்கள் வேண்டியபடியே செய்வதாக வும் அதற்காகக் காசியமுனிவருக்கு புத்திரனாய்ப்பிறந்து வாமனன் என்னும் குட்டை உருவம்தாங்கி, பலிச்சக்ர வர்த்தியிடம் மூவுலகங்களையும் யாசகமாகப் பெற்றுத் தருவதாக வாக்களித்தார். அப்படியே அவர் பிறந்து பலிச்சக்ரவர்த்தியின் யாகசாலைக்குச் சென்று அவனி டம் மூன்றடி மண் வேண்டுமென்று கேட்டார். அவனும் கொடுத்தேன் என்று சொல்ல, அதைத் தன் கையில் நீர்வார்த்துக் கொடுக்கவேண்டுமென்று வாமனர் கேட்க, அவனும் கையில் தாரை வார்த்தவுடன் அவர் பிரமாண்டமான ஓர் உருவமாக வளர்ந்து மூன்றுலகங் களையும் தனது இரண்டு அடிகளால் அளந்துகொண் டார்.பிறகு மூன்றாவது அடி இடத்தை எங்கே அளந்து கொள்வது என்று அவர் அவனைக் கேட்க, அவன் என் தலையில் அளந்துகொள் என்று சொல்ல பகவானும்



பொய்கைக்கரைப்பட்டித் தெப்பம்.



கல்யாண மண்டபம் (விஜயநகர ராஜப்பிரதிநிதிகளால் கட்டப்பட்டது)

அப்படியே அவன் தலையில் பாதத்தை வைத்து அவனைப் பாதாளத்திற்குள் அமிழ்த்திவிட்டார். இந்த பிரமாண்டமான அவதாரத்திற்குத் திரிவிக்ரம அவதாரம் என்று பெயர். இந்த அவதாரத்துடன் திருமால் மூன்றடி மண்ணை அளப்பதற்குத் தன் காலை மேலே தூக்கிய போது, பிரம்மாவானவர், தன் பிதாவின் பாதத்தைக் கண்ட அளவில் அதை தன் கமண்டல நீரினால் கழுவிப் பூசிக்க, அந்த நீர் ஆகாயமார்க்கமாகக் கீழே இறங்கி வந்தது. அப்போது திரிவிக்ரம பகவானின் பாதங்களில் இருந்த இரத்தினப் பொற்சிலம்பு அசைந்து, அதிலிருந்து நீர்த்துளிகள் இவ்விருஷபகிரி மீது விழ. அதுவே சிலம்பாறுகப்பெருகிற்று. இந்நதி, மலைஉச்சியிலிருந்து பெருகிக் கீழே இறங்கும்போது சூரிய ஒளியால் பல இடங்களில் பலவிதமான வர்ணங்களுடன் பிரகாசிக்கும். நவரத்தினங்களுடைய நிறங்களும் இதில் தெரியும். இப்படி அது மலையிலிருந்து இறங்கிவரும் போது பல சோலைகளை வளர்த்து, அழகரது திருவடியை வருடிக்கொண்டு பாய்கிறது. இதனால் அது திருமாலின் திருவடிக்குப் பணிவிடை செய்யும் மஹாலக்ஷிமியைப்போன்றது. இது முனிவர்களாலும் ரிஷிகளாலும் சேவிக்கப்பட்டு, யாவருடைய இஷ்டங்களையும் பூர்த்திசெய்வதால் இஷ்டசித்தி எனப்படுகிறது. மரீசி முதலிய முனிவர்கள் இதில் மூழ்கி அழுக்கற்றவர்களாய் விஷ்ணு சாயுஜ்ய பதவியை அடைந்தார்கள். பிறகு தர்மதேவன், இதில் மூழ்கி விஷ்ணு சாலோக்கியப் பதவியை அடைந்தார். பிரம்மதேவன் நீராடி, விஷ்ணு சாமீப்யப்பதவி பெற்றார். சுதபஸ் என்ற முனிவர் இதில் ஸ்நானம் செய்து விஷ்ணு சாரூப்யம் அடைந்தார்.

இந்த சுதபஸ் என்பவர் இதில் மூழ்கி மந்திரங்களை ஜபித்துக்கொண்டு தன்னை மறந்திருந்தபோது தூர் வாசர் முதலான சில முனிவர்கள் வந்து, கரையில் காத்துக்கொண்டு இருந்தார்கள். நெடுநேரமாகியும் சுதபஸ் வெளியே வராததாலும், தங்களுக்குரிய உப சாரங்களைச் செய்யாததாலும், தூர்வாசர் கோப மடைந்து, அவரை மண்டுக (தவளை)மாகும்படி சபித் தார். இதனையறிந்த சுதபஸ், தன் குற்றத்திற்கு வருந்தி மன்னிப்பு வேண்ட, தூர்வாசாதி முனிவர்கள், நாங்கள் பனிரண்டு வருஷம் வராக பர்வதத்தில் வசிக்கப்போகி ரோம், நீரும் எம்முடன் வந்து அங்கு தங்கினால், அம் மலை மண்டுக பர்வதம் என்னும் பெயரால் அழைக்கப் பட்டு அங்கு மண்டுக தீர்த்தம் என்னும் ஒரு தீர்த்தமும் உண்டாகும். பிறகு நூபுரகங்கையும் ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாளும் அங்கேயே வந்து உம்மை அநுக்கிரகிப் பார்கள், என்று கூற, அவரும் அப்படியே அவர்களுடன் சென்று வராகமலையில் 12 வருஷம் தங்கி, நூபுரகங்கை யாலும் ஸ்ரீ அழகராலும் சாபவிமோசனம் அடைந்தார்.

இவ்வளவு பெருமையுடைய இந்தச் சிலம்பாற்றில் 12 நாள் ஸ்நானம் செய்பவர்கள் விஷ்ணு சாயுஜ்யத்தை அடைவார்கள். ஒரு தடவை மூழ்கினால் கோடி ஜன்மங் களில் செய்த பாபம் நீங்கிவிடும். ஐப்பசி மாதம் சுக்ல பக்ஷ துவாதசியன்று ஸ்நானம் செய்தால் சகல பாபங் களும் நீங்கும். விசேஷமாகச் செவ்வாய்கிழமைகளில் ஸ்நானம் செய்பவர்கள் தம் இஷ்டசித்தியை அடை வார்கள். இதைத் தரிசிப்பவர்களும் துதிப்பவர்களும் மோக்ஷமடைவார்கள்.

மலயத்துவஜனுக்கு அருளியது:— சந்திர வம்சத்தில் உதித்த இந்திரத்யும்நன் என்பவனுக்கு மலயத்துவஜன் என்ற ஒரு புத்திரன் இருந்தான். அவன் மேருமலேக்குத் தெற்கில் உள்ள எல்லா அரசர்களேயும் ஜெயித்து, மேருவில் தன் பெயரைப் பொறித்து, மதுரைக்கு வந்து அகஸ்திய முனிவரைத் தனக்கு மந்திரியாக்கிக்கொண்டு ஆயிர வருஷகாலம் அரசுபுரிந்து வந்தான். அவன் அகஸ்தியருடைய அருளால் ஒரு புஷ்பக விமானத்தைப் பெற்றுத் தினமும் அதில் பறந்துசென்று கங்கையில் மூழ்கி, கயாக்ஷேத்திரத்திலுள்ள மகாவிஷ்ணுவைத் தரிசித்து, மதுரைக்குத் திரும்பி வருவான். ஒருநாள் அவனுடைய விமானத்தின் நிழல் விருஷபாத்திரியின் மீது விழ, அந்நிழலேக்கொண்டே அங்கிருந்த பெரியோர்கள் அதனேக் கீழே இழுத்தனர். அப்போது ஸ்ரீ சுந்தரராஜர் அசரீரியாக அவனே நோக்கி, "இம்மலேயில் எனது பாதச்சிலம்பிலிருந்து பெருகிவரும் சிலம்பாறு கங்கையைவிடப் புனிதமாயிருக்கவும், நீ இதில் ஸ்நானம் செய்து உன் பாபங்களேப் போக்கிக்கொண்டு என்னேப் பூஜிக்காதது ஏன் ? நான் இங்கு ஒரு பிரம்மகற்பம்வரையில் வசித்திருக்கப்போகிறேன். தர்மதேவனும் பல முனிவர்களும் என்னேப் பூஜித்து நன்மையடைந்தனர். இனியும் பல பெரியோர்கள் பூஜிக்கப்போகிருர்கள். நீயும் அப்படியே செய்து என்னிருப்பிடத்தை அடைவாயாக" என்று இதமாகக் கூறினர். இதைக்கேட்ட மலயத்துவஜன் அப்படியே இம்மலேயில் தங்கி, அவர் சொன்னபடியே செய்துவந்தான். பிறகு அவன் சந்திரகேது என்னும் தன் மகனிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து, சந்நியாசம் பூண்டு முக்தியடைந்தான். சில காலத்திற்குப்

பிறகு சந்திரகேதுவின் மகனை குப்ஜ பாண்டியன் அரசனுனன். அவனுக்குப் புத்திரபாக்கியம் இல்லாத தால், ரிஷபாத்ரிநாதனை (சுந்தரராஜரை) வழிபட்டு தவம்செய்து வந்தான். அவன் தபசுக்கு மெச்சி, ஸ்ரீசுந்தரராஜர் பார்வதிதேவியை அவனுக்கு மகளாய்ப் பிறக்கும்படி அநுக்கிரகம் செய்தார். அவளும் அப் படியே அவனுக்கு மகளாய்ப் பிறந்து தடாதகாபிராட்டி என்னும் நாமத்தோடு விளங்கி அரசாண்டு, தன் திக் விஜயத்தில் சிவபெருமானுடைய அவதாரமாகிய சோம சுந்தரப்பெருமானிடம் தோல்வி அடைந்து அவரைக் கைப்பிடித்துத் திருக்கல்யாணம் செய்துகொண்டு மதுரையில் வசித்துவந்தாள்.

இம்மலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் ஒரு காலத்தில், மார்க்கண்டேயர், அம்பரீஷ மகாராஜர் முதலானவர்களுக்குத் திவ்விய தரிசனம் கொடுத்து அவர்கள் கேட்ட வரங்களையும் தந்தார். 350 வருஷ காலம் அவர்கள் சோலைமலையில் தங்கியிருந்து தவம் செய்து ஸ்ரீசுந்தரராஜரின் திவ்ய கல்யாணகுணங்களை யும் சௌந்தரியங்களையும் கூறித்துதித்த வண்ணம் இருந்தார்கள். அதனல் சந்தோஷமடைந்த பகவான் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் கருடவாகனத்தில் தேவர்கள், முனிவர்களுக்கிடையில் எழுந்தருளி, மார்க் கண்டேயருக்கு நித்தியத்துவத்தையும் (எப்பொழுதும் பகவானின் அருகில் இருந்ததால்) அம்பரீஷருக்கு முக்தியையும் கொடுத்தார், என்று ஸ்ரீ வாமன புராணத் தில் ஸ்ரீ விருஷபாத்ரி மகாத்மியம் என்னும் இதிகாச ஸ்தல புராணத்தில் ஜனகமகாராஜருக்கு வாமதேவரால் சொல்லப்படுகிறது.

மலயத்துவஜ பாண்டியன் திருப்பணி:— இனி விருஷ பாத்ரி மகாத்மியத்தில் கூறப்படும் மற்றொரு செய்தி யாவது: முன்னொரு காலத்தில் சந்திர வம்சத்திலுதித்த புரூரவஸ் என்ற சக்ரவர்த்தி தென்தேசத்தில் மணலூர் என்ற ஊரை உண்டாக்கி அதில் வசித்து வந்தான். இவனுக்கு நான்கு பராக்ரமசாலிகளான புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களுள் மூத்தவனாகிய இந்திரத் யும்னன் என்பவனுக்குப் பிள்ளைகள் இல்லாமல் போகவே அவன் புத்ரகாமேஷ்டி யாகம்செய்து மகா விஷ்ணுவைப்போன்ற புத்திரனை அடைந்தான். அவ னுக்கு மலையத்வஜன் என்று பெயரிடப்பட்டது. இம் மலையத்வஜன் சகல சாஸ்திரங்களிலும் சிறந்து விளங்கி குணசீலனாகவும் பலசாலியாகவும் பக்திமானாகவும் சூக்ஷ்ம புத்தியுடையவனாகவும் இருந்ததைக் கண்ட இந்திரத்யும்னன் அவனுக்கு பட்டாபிஷேகம் செய்து, தான் அழகர் மலையை அடைந்து ஸ்ரீ சுந்தரராஜனைப் பூஜித்துப் பரமபதம் பெற்றான். பிறகு ஒரு நாள் மலை யத்வஜன் கங்கையில் மூழ்கி கயாநாதரை பூஜித்துவிட்டு ஆகாசமார்க்கமாக வரும்போது விருஷபாத்ரியின் சாயையால் இழுக்கப்பட்டவனாய்ப் பிரமித்து நிற்க அசரீரியான ஸ்ரீமந் நாராயணனுடைய வாக்கினால் அம் மலையின் பெருமையையும் அதில் சதா பிரசன்னமா யிருக்கின்ற ஸ்ரீசுந்தரராஜரது வரலாற்றையும் அறிந்து, அவரை வழிபட்டு அவரது திவ்ய தரிசனத்தையும் அடைந்தான். பிறகு அவர் அநுக்கிரகித்தபடியே, நூபுரகங்கைக்கரையில் உள்ள ஜோதி விருக்ஷத்தினரு கில் சோமச்சந்த விமானத்தடியில் தங்கியுள்ள பகவா னுக்கு அர்ப்பசி மாதத்தில் விசேஷமான உத்ஸவம்

கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்தான். அல்லாமலும் அவர் கட்டளைப்படியே மண்டபங்கள், பிரகாரங்கள், உயர்ந்த கோபுரங்கள் இவைகளோடு கூடிய பெரிய கோயில் ஒன்றையும் கட்டி முடித்தான். அதில் சகலவித மான உத்ஸவங்களுக்கு வேண்டிய பற்பலவிதமான சுவர்ண விக்கிரகங்களையும் செய்துவைத்தான். பிறகு உத்ஸவங்களை யெல்லாம் கிரமப்படி செய்துமுடித்து, மதுரைக்குச் சென்று சிலகாலம் சுகமாக வாழ்ந்து வந் தான். அங்கு தன் புத்திரனுக்குப் பட்டாபிஷேகம்செய்து ராஜ்ய பாரத்தை அவனிடம் ஒப்படைத்து, மீண்டும் சோலைமலைக்கு வந்து சிலம்பாற்றின் தீரத்தில் தவம் செய்து ஸ்ரீசுந்தரராஜரைச் சேவித்து முக்தியடைந்தான்.

இப்படியாக ஆதிகாலம் முதல் தர்மதேவர், மகரிஷிகள், முனிவர்கள், தவஸ்விகள், யோகிகள், பக்தர் கள், பாகவதர்கள், தேவர்கள், கந்தருவர்கள், சக்ர வர்த்திகள் முதலான பல மகான்களால் வணங்கப்பட்டும் அர்ச்சிக்கப்பட்டும் வந்த இந்தச் சோலைமலையும் சுந்தர ராஜப்பெருமாளும், இன்றும் அளவற்ற மகிமை யோடே இருந்து சகலருக்கும் அநுக்கிரகம் பண்ணுவ தற்காக இருப்பதால், யாவரும் இக்கிடைத்தற்கரிய சேவையால் சகல பாபங்களையும் நீங்கிப் புனிதமடைந்து பகவத்கிருபையைப் பரிபூரணமாகப் பெற்று ஜன்ம மெடுத்ததன் பயனாகிய மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடை வார்களாக.

"திருமாலிருஞ் சோலையென்றேன் என்னத்
திருமால்வந்து என்நெஞ்சு நிறையப்புகுந்தான்"

—நம்மாழ்வார்.

386
1-65




தமிழ் இக்கியங்களில் உள்ள அழகர் மலையின்சிறப்பு: 2000 வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்ட மிகப் பெருமைவாய்ந்த பரிபாடல் என்னும் சங்ககால இலக்கியத்தில் இத்திருமலையை மக்கள் திருமாலின் திருமேனியாகவே கருதித் திசைநோக்கித் தொழுகின்றனர் என்று கூறப்படுகிறது. (இந்த வழக்கம் இப்போதும் இருந்து வருகிறது.) அன்றியும் இதில் கடலும் கானலும் போலவும், சொல்லும் பொருளும் போலவும், பிரியாது விளங்கும் கண்ணபிரானும் அவன் தமையனை பலராமனும் கோயில்கொண்டிருந்தனர் என்று அப்பாடல் கூறும். சங்க காலத்தில் (2000 வருஷங்களுக்கு முன்), இவ்விரு தெய்வங்களும் ஒரே இடத்தில் வைத்து வணங்கப்பட்டனர் என்பதற்கு இது ஒரு சான்று. சங்க நூல்களில் இவ்வழக்கம் இருந்ததற்கு இன்னும் பல சான்றுகள் உள்ளன. பிற்காலத்தில் இவ்வழக்கம் மறையவே, அழகர் மலையிலும் பலராமனுக்குக் கட்டப்பட்ட கோயில் மறைந்தது, கண்ணனாகிய திருமால் கோயில் ஒன்று மட்டும் அழியாது நிற்கிறது.


இனி, சங்ககாலத்திற்குச் சிறிது பிற்பட்ட சிலப்பதிகாரம் என்னும் நூலில் இம்மலையில் உள்ள திருமாலைப் பற்றியும் தீர்த்தங்களைப்பற்றியும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

தீர்த்தங்கள் :—இம்மலை சோழர் தலைநகரான உறையூரிலிருந்து பாண்டியர் தலைநகரான மதுரைக்குச் செல்லும் ஒரு வழியில் அமைந்திருப்பதாகச் சிலப்பதிகாரம் கூறும். இங்குள்ள திருமாலைத் தரிசித்துக்கொண்டு திருவரங்கத்திற்குச் செல்லும் அந்தணன் ஒருவன்

மதுரைக்கு வந்துகொண்டிருந்த கோவலன், கண்ணகி, கவுந்தியடிகளை வழியில் சந்தித்து இம்மலையின் பெருமைகளைப் பற்றிக் கூறுகிருன்:– "இடப்பக்கமாகவுள்ள காட்டுவழியே போனல் நீங்கள் திருமால்குன்றத்தையடைவீர்கள், அங்கே ஒரு சுரங்கவழி இருக்கிறது. அவ்வழியில் மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. அவை புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்பன. புண்ணிய சரவணத்தில் நீராடினல் இந்திரனல் எழுதப்பட்ட ஐந்திர வியாகரணம் என்னும் இலக்கண நூலறிவை நீங்கள் பெறுவீர்கள். பவகாரணியில் மூழ்கினல் பழம் பிறப்பைப்பற்றிய அறிவுண்டாகும். இட்டசித்தியில் ஆடினல் நினைத்தவை யெல்லாம் கைகூடும். இச்சுரங்கவழியில் நீங்கள் செல்ல விரும்பி, இப்பயன்களை அடையக்கருதினல், அம்மலையில் உள்ள திருமாலின் திருவடிகளை மனம், மெய், மொழி ஆகிய மூன்ருலும் தொழுது, அம்மலையை மும்முறை வலமாக வர வேண்டும். பிறகு அம்மலையில் உள்ள சிலம்பாற்றின் கரையில் ஒரு பெண் தெய்வம் உங்கள் முன்தோன்றி, இம்மைக்கும், மறுமைக்கும், இம்மை மறுமை இரண்டிற்கும் பேரின்பம் தருவது யாது?" என வினவுவாள். அவ்வினவிற்கு நீங்கள் விடையளித்தால், அத்தெய்வம் உங்களுக்குச் சுரங்கவாயிலைத் திறந்துவிடும். பிறகு அதன் வழியே சென்ருல், மற்ருெரு இரட்டைக்கதவுடைய வாயில் காணப்படும். அதனைக் கடந்து சென்றதும், மற்ருெரு தெய்வம் வந்து, "அழியாத இன்பம் எது?" என்று கேட்கும். அதற்குறிய விடையை அளித்தால், அவள் தானே உங்களை மேற்கூறிய மூன்று பொய்கை



குதிரை வாஹனத்தில் ஸ்ரீ சுந்தரராஜன்.



ஸ்ரீ சோமச்சந்த விமானம்

களுக்கும் அழைத்துச் செல்வாள். பிறகு வேத மந்திரங்களாகிய பஞ்சாட்சரம், என்னும் இரண்டில் ஒன்றை ஓதி, அப்பொய்கைகளில் மூழ்கினல், தவம் செய்தவர்களுக்கும் கிடைக்காத பலன்கள் உங்களுக்குக் கிட்டும். அவற்றை நீங்கள் விரும்பவில்லையானல், அத் திருமலையின் மீது, நின்ற திருக்கோலத்தோடு எழுந் தருளியுள்ள திருமாலின் திருவடிகளைத் தியானியுங்கள். அப்போது அவரது கருடக்கொடிகட்டிய கொடிமரம் உங்கள் கண்முன் தோன்றும். அவ்வளவில் உங்கள் பிறவித்துன்பம் கெடும். பிறகு நீங்கள் பரமபதம் அடைதல் உறுதி என்ற துணிவுடன் மதுரைக்குச் செல்லலாம்.''

இவ்வாறு சிலப்பதிகாரம் கூறுவதால் அக்காலத்தில் இம்மலைக்கும் இதிலிருந்த திருமாலுக்கும் உள்ள பெருமை நன்கு விளங்கும். அந்நூலில் சொல்லப்பட்ட மூன்று தீர்த்தங்களும் எவை என்று இப்போது தெரிய வில்லை, அவை பிற்காலத்திலும் (அதாவது, கி. பி. 13 14–வது நூற்றுண்டுகளிலும்) புகழோடு இருந்தன என்று தெரிகிறது. ஆனல் அதன் பிறகு எப்படியோ அவை அழிந்துவிட்டன. சிலம்பாறுமட்டும் ஒரு வேளை சிலப்பதிகாரம் கூறும் இட்டசித்தியாக இருக்கலாம்.

இம்மலை மிக இயற்கை அழகோடும், கடத்தற்கரிய வழிகள், அடைதற்கரிய குகைகள், தீர்த்தங்கள் முதலிய வற்றேடும் விளங்குவதால்,பழையகாலத்தில் யோகிகள், முனிவர்கள், முதலானவர்கள் இதில் இருந்து தவங் களைச் செய்துவந்தார்கள். பிறகு சரித்திர காலத்திலும், அதாவது 2000 வருஷங்களுக்கு முன்னும், பௌத்த

மதமும் ஜைன மதமும் இங்கு பரவியபோது, அம்மதங்களைச் சேர்ந்த துறவிகள் (சந்நியாசிகள்) இம்மலையில் வந்து தங்கித் தவம் செய்தார்கள். அப்படி பௌத்த பிக்ஷுக்களும் ஜைன முனிவர்களும் இம்மலையில் வந்து தங்கித் தவம் செய்ததற்கு அடையாளமாக, அவர்களால் உபயோகிக்கப்பட்ட குகைகளும், அக்குகைக்குள்ளும் வெளியிலும் அவர்கள் எழுதிவைத்த சாசனங்களும், காணப்படுகின்றன.

ஆழ்வார்கள் கருத்து ;—சங்க காலத்திற்குப் பிற்பட்டது ஆழ்வார்கள் காலம். ஆழ்வார்கள் பன்னிரண்டு பேர்களும் இன்றைக்கு 1000 வருஷங்களுக்கு முன்பிருந்தவர்கள். அவர்களுள் சிலர் 1500 வருஷங்களுக்கு முந்தியவர்கள் என்றும் எண்ண இடமுண்டு. இவ்வாழ்வார்கள் காலத்திலும் இம்மலை மிகவும் பிரபலமாக இருந்தது. இதனை அக்காலத்தில் தென் திருப்பதி என்றும் அழைத்து வந்தனர். இது பரந்தாமன் பள்ளி கொண்டுள்ள திருப்பாற்கடல்போல அவ்வளவு புனிதமானது என்று ஆழ்வார்கள் அவர்கள் பாசுரங்களில் புகழ்ந்து பாடப்பட்டிருக்கிறது. அல்லாமலும் எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்பதுபோல, எல்லாத் திருப்பதிகளுக்கும் இதுவே பிரதான க்ஷேத்திரம் என்று அவ்வாழ்வார்கள் வாழ்த்தி வணங்கியிருக்கிறார்கள். ஆழ்வார்கள் எல்லாம் இத்தலத்திற்கு வந்து மங்களாசாசனம் செய்திருக்கிறார்கள். அவர்களுள் ஆறுபேர் சோலைமலையைப்பற்றியும் ஸ்ரீ அழகரைப்பற்றியும் 123 பாசுரங்களைப் பாடியிருக்கிறார்கள். அவையெல்லாம் நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்று சொல்லப்படுகிற வைஷ்ணவர்களின் தமிழ் வேதத்தில் இருக்

கின்றன. அவை படிக்கப் படிக்க பக்தியும் இன்பமும் ஊட்டுவனவாய் இருக்கும். இவ்வாழ்வார்களுள் சிலரின் காலத்தை, கலியுகத்திற்கு முந்திய யுகங்கள் என்றும் சிலர் எண்ணுவதால், இந்த க்ஷேத்திரத்தின் பழமை மிகவும் அதிகமாகிறது.

பெரியாழ்வாரும் ஆண்டாளும்:— இந்த மலையில் ஆண்டாளுக்கு விசேஷமான ஆராதனைகளும் திருவிழாவும் நடக்கின்றன. இதற்குக் காரணம் ஆண்டாள், தன் தந்தையாகிய பெரியாழ்வாருடன் இவ்விடத்திற்கு வந்து பெருமாளைத் தரிசித்துப் பாசுரங்கள் பாடியதும், கடைசியாக அவர் ஸ்ரீ அழகரைக் கல்யாணம் செய்துகொண்டார் என்பதும்தான். மகாவிஷ்ணுவின் இரண்டு ரூபங்களாகிய ரங்கநாதரையும் அழகரையுமே ஆண்டாள் மணந்ததாக ஐதிக்கியம். இம்மலையின் அழகையும் பெருமையையும், ஸ்ரீசுந்தரராஜரின் மகத்துவத்தையும் பெரியாழ்வாரே ஆண்டாளுக்கு இங்கு நேரில் சொன்னதாகத்தெரிகிறது. இத்தலத்தின் பெருமையை, அவர்,

> "சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடும் சீர்
> சிலம்பாறுபாயும் தென்திருமாலிருஞ்சோலையே"
>
> "எல்லாவிடத்தும் எங்கும் பரந்து பல்லாண்டொலி
> செல்லாநிற்கும் சீர்த்தென் திருமாலிருஞ்சோலையே"
>
> "ஆவத்தனமென்று அமரர்களும் நன்முனிவரும்
> சேவித்திருக்கும் தென்திருமாலிருஞ்சோலையே"
>
> "குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை
> நிலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலையதே"

என்று பலவாறுகப் புகழ்ந்து பாடியிருக்கிறார்.

பெரியாழ்வாரது பக்திப் பெருமையையும் அவரது மகளும் பூமிதேவியின் அம்சமும் ஆகிய சூடிக்கொடுத்த நாச்சியார் என்று சிறப்புப் பெயர் பெற்ற ஆண்டாளது களங்கமற்ற பக்திச் சிறப்பையும் அறிந்த பாண்டிய மன்னன், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்த அவர்களை தன்பதிக்கு வரவழைத்து பல சிறப்புக்கள் செய்தான். "பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான்" என்று கூறி. எல்லா மக்களும் குதூகலத்தில் ஆழும்படி அரசன் அவரை யானைமேல் ஊர்வலம் செய்து அடிபணிந்தான். பிறகு இருவரும் அழகர்மலைக்குச் சென்றார்கள். அங்கே ஆண்டாள் தாம் கண்ட இயற்கைக்காட்சிகளில் எல்லாம் அழகரையே கண்டு தம் மனதைப் பறிகொடுத்தார்.

"கருவிளை யொண்மலர்காள்! காயாமலர்காள்! திருமால்
உருவொளிகாட்டுகின்றீர் எனக்கு உய்வழக்கொன்று உரையீர்
திருவிளையாடுதிண்தோள் திருமாலிருஞ்சோலை நம்பி
வரிவளையில் புகுந்து வந்திபற்றும் வழக்குளதே"

"துங்கமலர்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை நின்ற
செங்கண் கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல்
தொங்கிய வண்டினங்கள்! தொகுபூஞ்சுனைகாள்! சுனையில்
தங்குசெந்தாமரைகாள்! எனக்கு ஓர்சாண்சாற்றுமினே"

என்று பலவாறு அவர் அழகர்மேல் உள்ள காதலால் வருந்திப் புலம்புவது கவனிக்கத்தக்கது.

## 2. அழகர்கோயில் சரித்திரம்.

சரித்திரகாலம் :—புராணகாலத்தை விட்டுச் சரித்திர காலத்திற்கு வருவோமாயின், பாண்டியநாட்டில் அரசாட்சி தோன்றியது முதல் அழகர்கோயிலும் அதனையடுத்திருந்த அழகாபுரி என்னும் ஊரும்புகழ் பெற்றிருந்தன என்று தெரிகிறது. அப்பொழுதே அழகாபுரியைச் சுற்றியிருந்த கோட்டை மதிலுக்குள், அழகர்கோயிலும் அடங்கியிருந்ததாக அறிகிறோம். அவ்வூரும் கோயிலும் சமூக வாழ்க்கையிலும் சமய வாழ்க்கையிலும் ஒன்றாகி, வேறுபாடில்லாமல் விளங்கின. முதல் முதலில் இவ்விரண்டும் தருமதேவதையாலும் விஸ்வகர்மாவாலும் நிருமாணிக்கப்பட்டன என்றும், பிறகு இவை மலையத்துவஜ பாண்டியனால் புதுப்பிக்கப்பட்டன என்றும் பார்த்தோம். இம்மலையத்துவஜ பாண்டியன் தான், பாண்டிய அரசையும் வம்சத்தையும் ஸ்தாபித்த குலசேகர பாண்டியனது மகன். இவனது மகளே ஸ்ரீ மீனாக்ஷி என்னும் அங்கையற்கண்ணியாம் தெய்வம். மலையத்துவஜனுக்குப் பின் அரசு செலுத்திய பலரும் இவ்வூரையும் கோயிலையும் காப்பாற்றிவந்தனர். பெரியாழ்வார் பாசுரம் ஒன்றில் கோயிலைச்சுற்றி மதில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இம்மதிலின் பழமையும் நன்கு புலப்படும். இன்றும் இம்மதிலின் சிதைந்த பகுதிகள், அதன் பெருமையைக் காட்டி நிற்கின்றன, மலையடிவாரத்தின் தென்பகுதியில் தொடங்கி, அழிபாடுடையதாகக் காணப்படும் அப்பழைய ஊரைச்சுற்றி ஓர் பெரிய மதில் இன்றும் உளது. அதன் சுற்றளவு ஏறக்குறைய

1½ மைல் இருக்கும். அது முற்றிலும் கருங்கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பெற்றது. இதற்குள்ளேதான் பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் பஸ்கள் நுழைந்து கோயிலை அடைகின்றன.

பாண்டியர் திருப்பணி:—பல பாண்டிய மன்னர்கள் இக்கோயிலுக்குப் பலவகைத்திருப்பணிகளைச்செய்திருக்கிறார்கள். இராமாயண மகாபாரதங்களிலும், பழைய இலக்கியங்களிலும், கோயிலிலும், பிற இடங்களிலும் உள்ள பழைய கல்வெட்டுக்களிலும், பாண்டிய மன்னர்கள் செய்த திருப்பணிகள் குறிக்கப்பெற்றுள்ளன. இக்கோட்டைக்குள் பல பாண்டிய மன்னர்கள் பெரும் படைகளுடன் வசித்து வந்தார்கள் என்றும் தெரிகிறது. அங்குள்ள மிகப் பெரிய உறுதியான மதிலும் அதில் உள்ள உறுப்புகளும்,பெரிய வாசல்களும் இதனை நன்றாகக் காட்டும். ஆகவே அவ்வரசர்கள் இக்கோயிலுக்கு வேண்டிய எல்லாவித உதவிகளையும் அளித்து வந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. பாண்டியரே அன்றிப் பிற மன்னர் பலரும் இக்கோயிலுக்கு இப்படியே திருப்பணிகள் பல செய்திருக்கிறார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் சோழர், ஈழ அரசர், வாணர், ஹொய்சலர், விஜயநகர மன்னர், நாயக்க மன்னர் முதலியோராவர். இதன் பிறகு மகாராஷ்டிர மன்னர்களும் முகம்மதிய அரசர்களும் கூட இக்கோயிலை பராமரித்துவந்தார்கள்: கடைசியில் அது 1790-ஆம் வருஷம் கிழக்கிந்தியக் கம்பெனியின் கைக்கு மாறியது.

இக்கோயிலுக்கு முதல் முதலில் திருப்பணி செய்த பாண்டிய அரசன் மலையத்துவஜனே. பாண்டியர்கள்

சந்திர வம்சத்தவர் என்று சங்க நூல்களே கூறும். இராமாயண மகாபாரதங்களிலும் இவர்களைப் பற்றிப் பேசப்படுகிறது. ராமர் காலத்தில் அனந்தகுணபாண்டியன் என்பவன் கபாடபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்தானும். பாண்டியநாட்டை மிகப் பழங் காலத்தில் இரண்டு முறை கடல்கொண்டுவிட்டதென்றும், அப்போது பாண்டியர்கள் தம் நகரைச் சிறிது சிறிதாக வடக்கே மாற்றிக்கொண்டு வந்து, கடைசியில் கடலுக்கெட்டா உள்பகுதியில், இப்போதுள்ள மதுரையில் தலைநகரை அமைத்தார்கள் என்றும் பழைய நூல்கள் கூறும். இப்படி, முதலில் ராமாயண காலத்தில் கபாடபுரமும், பிறகு மகாபாரத காலத்தில் மணலூரும் கடைசியாக மதுரையும் பாண்டியர் தலைநகராக இருந்தன. இப்பாண்டியர்கள் மிகப் பழங்காலத்திலேயே கடல்கடந்து, ரோம், கிரீஸ், எகிப்து முதலிய மேனாடுகளுடன் வியாபாரம் செய்துவந்தார்கள். கி. பி. முதலாம் நூற்றூண்டில் ரோமர் மதுரையில் வந்து தங்கி வியாபாரம் செய்ததற்கு அடையாளமாக,ரோம நாணயங்கள் சில இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன.

திருமாலின் முதல் அவதாரமாகிய மச்சாவதாரத்தின் ஞாபகமாகப் பாண்டியர்கள் மீன்கொடியை வைத்திருந்தார்கள் என்று புராணங்கள் கூறும். ஆகவே பாண்டியர்கள் திருமால் பக்தியுடையவர்கள் என்று புலப்படும். ஆகவேதான் இவர்கள் பரம்பரையாக அழகர்கோயிலுக்குத் தொண்டுசெய்து வந்தார்கள்.

விஜயநகர அரசர் தொண்டு:—பாண்டியர்களுக்குப் பிறகு பத்தாம் நூற்றூண்டு முதல் சோழ அரசர்கள்

தென்னாட்டில் பலம் பெற்றிருந்த காலத்தில், அவர்களும் கோயில் திருப்பணிகள் பல செய்தனர். மறுபடியும் 12-ம் நூற்றாண்டிலிருந்து 14-ம் நூற்றாண்டு வரை பாண்டியர் கை ஓங்கிற்று. அப்பொழுதும் அவர்கள் தொடர்ந்து திருப்பணிகள் செய்துவந்தார்கள். அக்காலத்தில் இருந்த ஜடாவர்மன் சந்திரபாண்டியன் (1251-1270) ஸ்ரீ அழகர்கோயில் விமானத்திற்குப் பொன்வேய்ந்தான் என்று சாசனங்கள் மூலம் அறிகிறோம். பாண்டியர்கள் மறுபடியும் வீழ்ச்சியடைய சுமார் ஐம்பது வருடகாலம் (1324-1372) முகம்மதியர் படையெடுப்புகளால் தமிழ்நாடு குழப்பமான நிலையில் இருந்தது. பிறகு முகம்மதியரது பலத்தை ஒடுக்கிய விஜயநகர ராஜ்யம் தமிழ்நாட்டின் மீதும் ஆதிக்கம் செலுத்தலாயிற்று. விஜயநகர ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக நாயக்க மன்னர்கள் தமிழ்நாட்டை ஆண்டுவந்தார்கள். அப்போது பாண்டிய வம்சத்தினரைப் பெயருக்கு மட்டும் அரசராக வைத்து, விஜயநகர அரசர் மேலதிகாரம் செலுத்தி வந்தார். இப்பாண்டிய குலத்தினருள் வாணர் அல்லது வாணாதிராயர் என்ற பெயருடையோர் சுமார் 50 ஆண்டுகள் ஆட்சிபீடத்தில் இருந்தனர். அவர்களுள் மிக முக்கியமானவன், திருமாலிருஞ்சோலை நின்றான் மகாபலிவாணாதிராயன் உறங்காவல்லிதாசன் என்று ஒரு சாசனத்தால் அறிகிறோம். இவன் பெயரிலிருந்தே, இவன் ஸ்ரீ அழகரிடம் மிகவும் பக்திகொண்டவன் என்பது தெரிகிறது. இவன் அழகருக்குப் பல சொத்துக்களையும் நிபந்தங்களை (கட்டளை)யும், திருப்பணி (சீர்திருத்தம்)களையும் செய்துவைத்தான். இவன் திருமாலிருஞ்சோலையையே தனது தலைநகராகவும்

கோட்டையாகவும் கொண்டிருந்தான் என்று 'திருமாலிருஞ்சோலை நின்றான்' என்ற இவனது பட்டப்பெயரால் அறியலாம், இவனது வமிசத்தவரே ஸ்ரீ மீனுக்ஷி கோயிலில் இப்போதுள்ள பெரிய கோபுரங்களைக் கட்டியவர் என்று சொல்லப்படுகிறது.

இம்வம்சத்தவர் பலம் குறைந்ததும் சுமார் கி. பி. 1500-ல் விஜயநகர அரசர்களே மதுரை ஆட்சியை நேரில்ஏற்று நடத்திவந்தார்கள். விஜயநகரப்பேரரசரது இராஜப்பிரதிநிதியாக முதல்முதலில் பாண்டியநாட்டை ஆண்டவர் நரசநாயக்கர் என்பவர். இவரும் இவருக்குப் பின்வந்த சில இராஜப்பிரதிநிதிகளும் பேரரசருக்கு உண்மையாக உழைத்துவந்தனர். கி. பி. 1565-ல் தலைக்கோட்டை சண்டையில் விஜயநகர சாம்ராஜ்யத்தின் கடைசி மன்னர் முகம்மதியரால் தோற்கடிக்கப்பட்ட பின், பாண்டிய நாட்டில் இருந்த இராஜப்பிரதிநிதிகள் சுதந்திரமாக ஆட்சி செய்யத் தொடங்கிவிட்டார்கள். விஜயநகர ராஜ்யம் தோன்றியது முதல் ஒவ்வொரு மன்னரும் அல்லது அவரது பிரதிநிதியும் திருமாலிருஞ்சோலைமலைக்கோயில், கோட்டை, நகரம் ஆகியவற்றைத் தம் நேர்பார்வையில் வைத்துப் பரிபாலனம் செய்து வந்தார். இதற்கு கோயிலிலுள்ள பல சாசனங்களே சாட்சி. இவர்களுள் மிக முக்கியமானவர்களாகச் சொல்லத்தகுந்தவர், கிருஷ்ணதேவராயர், அச்சுததேவ மகாராயர், சதாசிவ மகாராயர். ராமராஜ திருமலைதேவ மகாராயர் முதலியோர். கிருஷ்ணதேவராயர் தான் முதல் முதலில் இக்கோயிலுக்கு சமயநல்லூர், சாத்தமங்கலம் என்னும் இரண்டு பெரிய கிராமங்களைத் தானமாகக் கொடுத்தார் என்று, அழகர் கோயிலிலுள்ள

பதினெட்டாம்படிக் கோபுரத்தின் அருகிலுள்ள சாசனம் ஒன்று தெரிவிக்கிறது. இக்கிராமங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு, ஆடி மாதத்தில் அழகருக்கு நடக்கும் தேர்திருவிழாவில் சில தருமங்கள் செய்யப்பட்டன. இம்மன்னர் அழகர் கோயிலுக்குப் பரிவாரங்களுடன் எழுந்தருளி மூன்றுநாள் தங்கியிருந்தார். மேற்கூறிய மற்ற மன்னர்கள் கொடுத்த மானியங்கள், செய்த திருப்பணிகள் முதலியவையும் கோயிலிலுள்ள கல் வெட்டுகளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. விஜயநகர மன்னர்களது ராஜப்பிரதிநிதியாக கடைசியில் இருந்த விசுவநாத நாயக்கர் (1535–1544) செய்த திருப்பணியை விவரிக்கும் கல்வெட்டு ஒன்றும் பதினெட்டாம்படிக் கோபுரத்தின் மேற்குப் பகுதியில் உள்ளது. இவனுக்குப் பிறகுதான் மதுரையில் நாயக்க மன்னரது தனிஆட்சி தொடங்கியது.

நாயக்க மன்னர் தொண்டு :— கி. பி. 1558 முதல் இராஜப் பிரதிநிதிமுறை அழிந்தது: கடைசி பான்டிய வமிச அரசனும் இறந்து விட்டான். நாயக்கவமிசத்தை மதுரையில் முதன் முதலில் ஸ்தாபித்து ஆண்ட அரசன் பெயர் விசுவநாதன் (1558–63). இவன் ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாளிடம் (அழகர்) அதிக பக்தி கொண்டவன். நாயக்க வம்சத்தில் இவனே மிகப்பெரிய அரசன். இவனது தளபதியாக இருந்த அரியநாத முதலியார் அழகர் கோயிலுக்கு, வேப்பங்குளம் குருந்தங்குளம் என்னும் இரண்டு ஊர்களைத் தானமாகக் கொடுத்தார். கோயிலில் அரியநாத முதலியார் கட்டளை என்ற நிபந்தத்தை நிறுவியவரும் இவரே. விசுவநாதருக்குப்பின்

ஆண்ட கிருஷ்ணப்ப நாயக்கர், முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர், முத்துவீரப்ப நாயக்கர் முதலியவர்களும் ஸ்ரீஅழகருக்குத் தானதருமங்கள் செய்தனர். 1623 முதல் 1659 வரை ஆண்ட திருமலை நாயக்கர் விஜயநகரத்தின் மேலதிகாரத்தை உதறிவிட்டுச் சுதந்திர அரசனாக ஆட்சி செலுத்தினார். இவர் திருமாலிருஞ்சோலைமலையில் ஒரு அரண்மனை கட்டினார். மற்றும் கோயிலில் யாகசாலைகளையும், பள்ளிஅறை, தந்தவிமானம், தந்தப்பல்லக்கு, முதலியவைகளையும் செய்து கொடுத்து, பிராகாரம், அபிஷேகமண்டபம், முதலிய பலவற்றை இவர் புதுப்பித்துக் காட்டினார். இவர் செய்த திருப்பணிகளும், நிபந்தனைகளும், மிகப் பலவாகும்.

முகம்மதியர் வருகை:— நாயக்க வமிசத்து இறுதி ராணியாகிய மீனாக்ஷி அம்மாளுக்குப் பின், 1736-ல், மதுரைமா நகரம் ஆர்க்காட்டு நவாப் ஆகிய சந்தாசாகிப் பின் கைக்கு மாறியது. அப்போது அவன் மதுரையில் உள்ள எல்லாக் கோயில்களையும் கைப்பற்றிக்கொண்டான். அழகர் கோயிலும் அவன் வசமாயிற்று. அது முதல் அழகர்கோயில் மிகவும் கஷ்டதசைக்குள்ளாயிற்று. 1757-ல் ஹைதர் அலி மதுரையைச் சுற்றியுள்ள ஊர்களைக் கொள்ளையடித்து, அழகர் கோயில் கலியாண மஹாலில் உள்ள விக்கிரகங்களை உடைத்துக் கோயிலில் இருந்த ஏராளமான பணத்தையும் சொத்தையும் கைப்பற்றிக்கொண்டான். பிறகு அவன் அழகாபுரி நகரையும் மதில்களையும் நாசமாக்கினான். அவனால் சிதைக்கப்பட்ட மதில்கள்தான் இன்றும் காட்சியளித்து வருகின்றன. மதிலுக்குள் இருந்த நாயக்கர் அரண்மனையையும்

அவன் இடித்துத்தள்ளினுன். யூசுப்கான் என்னும் பெரிய முகம்மதிய வீரன் ஹைதர் அலியைத் தோற்கடித்து திண்டுக்கல்லுக்கு விரட்டிய பிறகு, 1758-ல் அவன் ஸ்ரீ கள்ளழகர் கோயில் சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்துப் பரிகாரங்கள் செய்தான். பிறகு யூசுப் கானைச் சில துரோகிகள் பிடித்துக் கொன்றுவிடவே சில ஆண்டுகள் குழப்பமான நிலை ஏற்பட்டது. மீண்டும் 1780-ல் ஹைதர் மதுரை மீது படையெடுத்தான். இறுதியாக 1785-ல் மதுரை, கிழக்கிந்தியக் கம்பெனி வசமாகிப் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சி:—1801-ல் மதுரையின் முதல் கலெக்டர் ஹர்டிஸ் என்பவர் அழகர் தேவஸ்தானப் பாதுகாப்பை (தர்மகர்த்தா பொறுப்பை) ஏற்ருர். அவர் குழப்பமாக இருந்த இக்கோயில் நிர்வாகத்தை ஒருவாறு ஒழுங்குபடுத்தினுர். அவர் செய்த சீர்திருத்தங்களே இக் கோயிலின் பெரிய உரிமைச்சாசனம் என்று சொல்லத் தகும். பிறகு 1817-ல் இக்கோயில் நிர்வாகப்பொறுப்பு போர்டு ஆப் ரெவினியூ (நிலவரி வசூல் போர்டு) கைக்கு மாறியது. இறுதியாக 1865-ல் மதஸ்தாபனங்களை நடத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட கோயில் நிர்வாகக் கமிட்டி இதன் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டது. இக் கமிட்டி, அழகர் கோயிலின் தஸ்தாவேஜுகளைச் சரிவர ஆராய்ந்து பார்க்காமலும், அக்கோயிலுக்குரிய நிலங்களையும் கிராமங்களையும் ஸ்ரீ அழகர் பெயருக்கு எழுதி வைக்காமலும், கோயில் காரியம் செய்பவர்கள் பெயருக்கு எழுதிவைத்துவிட்டது. இது ஒரு பெரிய தவறு. இதுபோல இன்னும் சில தவறுகளையும் இக்கமிட்டி செய்துவிட்டது. அவற்ருல் கோயில் நிர்வாகத்தில்

மீண்டும் குழப்பம் ஏற்பட்டது. கோயில் சொத்துக்களைப் பிறர் அனுபவிக்கலாயினர்; சிப்பந்திகள் சரியாகக் கோயில் காரியங்களைக் கவனிக்கவில்லை; அவர்களை ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தவும் தஸ்தாவேஜுபூர்வமான அதிகாரம் இக்கோயில் கமிட்டிக்கு இல்லை. இதனால் கோயில் சொத்துக்கள் பல போய்விட்டன; கோயிலின் நித்திய நைமித்தியக் கட்டளைகள் நடப்பதும் கடினமாகிவிட்டது. இப்பொழுதும் கூட இக்கோயிலுக்குரிய நிலங்கள், கட்டிடங்கள் மூலம் வருமானம் வருஷத்திற்கு ஒன்றிரண்டு ஆயிரம் ரூபாய்களுக்கு மேல் இல்லை. சாசனங்கள் தஸ்தாவேஜுகள் மூலமாக இக்கோயிலுக்கு உரியவை என்று கருதப்படும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் மற்ற ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும், இப்பொழுது இல்லாமல் போய்விட்டன. அழகருக்குச் சொந்தமாயிருந்த அழகர்மலை கூட அவருக்கு இப்பொழுது சொந்தமாக இல்லை. இப்பொழுது அவருக்குச் சொந்தம் என்று சொல்லக்கூடியது பாழடைந்த அழகாபுரிக் கோட்டைக்குள் இருக்கும் இடம் மட்டும் தான். கோயிலை அரசாங்கம் நிர்வாகம் செய்தகாலத்தில் கோயிலின் வருமானம் எல்லாம் அரசாங்கப் பொக்கிஷத்தில் சேர்க்கப்பட்டது. இந்தியாவிற்கு அரசியல் துறையில் ஓரளவு சீர்திருத்தங்களும் சுதந்திரமும் அளிக்கப்பட்ட பிறகு, 1929-ல் ஏற்படுத்தப்பட்ட ஹிந்துமத பரிபாலன போர்டு இக்கோயிலின் நிர்வாகப்பொறுப்பை ஏற்று, இதுவரையில் நடத்தி வருகிறது.

## 3. இலக்கியத்தில் குறிப்புகள்.

புராணக் குறிப்புகள் :— இக்கோயிலும் அதன் கோட்டையும் அழகாபுரியும் பாண்டியர்கள் ஆண்டுவந்த மிகப் பழங்காலந்தொட்டே பிரசித்தி பெற்றிருந்தன என்று முன்பே கண்டோம். யுதிஷ்டிரர் தமது தீர்த்த யாத்திரையின்போது இங்கு வந்திருந்தார் என்று மகா பாரதம் வனபர்வத்தில் கூறப்படுகிறது. அந்தக் காலத்தில் இம்மலைக்கு விருஷபாத்ரிமலை என்று பெயர் இருந்தது. வாமன புராணத்தில் ஸ்ரீ அழகர் அல்லது சுந்தர ராஜரின் பெருமை, நூபுரகங்கையின் சிறப்பு முதலியன சொல்லப்படுகின்றன. பிரம்மாண்ட புராணம் குப்ஜ பாண்டியனுடைய செய்திகளையும் விருஷபாத்ரியின் மகாத்மியத்தையும் நூபுரகங்கையின் விசேஷத்தையும் கூறுகிறது. மற்றும் வராக புராணத்திலும் இம்மலையின் பெருமையும் இதிலுள்ள தீர்த்தங்களின் பெருமையும் விளக்கப்படுகின்றன. அர்ச்சுனன் இங்கு தீர்த்தயாத்திரை வந்ததாக ஆக்னேய புராணம் கூறும். ஹாலாஸ்ய மகாத்தியமும், ஹாலாஸ்ய (மதுரை) க்ஷேத்திரத்திற்கு வடக்கே சுந்தரராஜர் எழுந்தருளியுள்ள விருஷபாத்ரி, மிகப்பெருமை வாய்ந்ததென்று கூறுகிறது. இன்னும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஸ்தல புராணத்திலும், ஜகன்னாத க்ஷேத்திர மகாத்மியத்திலும், சனத்குமார சம்ஹிதை, பிரம்ம சம்ஹிதை, முதலிய புராணங்களிலும் இந்த க்ஷேத்திரத்தின் பெருமை சிறப்பாக சொல்லப்படுகிறது. இப்புராணங்களில் கூறப்படும் நிகழ்ச்சிகள் எக்காலத்தவையென்று யாராலும் உறுதியிட்டுக் கூற

முடியாதவை. அக்காலத்திலேயே அழகர்மலை அவ்வளவு புகழ் பெற்றிருந்தால், அதன் பெருமையைப்பற்றி யாரால் பேச முடியும்?

பிற்காலக் குறிப்புக்கள்:—இனி பிற்காலத்தில் எழுதப் பட்ட நூல்களில் இதைப்பற்றியுள்ள குறிப்புகள் பல வாகும். ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்ட கோதாபரிணயம் என்னும் நூலில், பெரியாழ்வார் தம் மகளாகிய கோதை அல்லது ஆண்டாளுடன் இத்திருமாலிருஞ்சோலை மலைக்கு வந்ததாகவும், தன் மகளுக்கு இங்கெழுந்தருளி யிருக்கும் பெருமாளின் பெருமையைச் சொன்னதாகவும் உள்ளது. இராமானுஜருடைய முதல் சிஷ்யரான கூரத் தாழ்வார் என்பவர், பகைவர் கொடுமையால் கண்ணி ழந்து, இவ்வழகரைப் பாடி மீண்டும் கண்ணைப் பெற்ற தாக அவர் எழுதிய சுந்தரபஹுஸ்தவம் என்னும் நூலில் காணப்படுகிறது. சைவமத நூலாகிய வடமொழி ஸ்கந்த புராணத்தில் இம்மலை பழமுதிர்சோலை என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இப்புராணம் எழுதப் பட்ட காலத்தில் இம்மலை முருகனுக்கும் திருமாலுக்கும் உரிய மலையாக இருந்ததென்று அறிகிறோம். தமிழில் எழுதப்பெற்ற கந்தபுராணமும், "முத்திதரு பேரழகர் திருமலை" என்று இதனைச் சிறப்பிக்கிறது. இதனையே பழமுதிர் சோலையென்றும் அது கூறுகிறது. வைணவப் பெருநூலாகிய நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில், பெரி யாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ் வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய அறுவர் இம்மலையையும் ஸ்ரீ அழகரையும் பற்றிப் பாடிய பாடல் கள் 123 இருக்கின்றன.

சமீபகாலக் குறிப்புகள் :-இனி 500 ஆண்டுகளுக்குக் கீழ்ப்பட்ட நூல்களில் அழகர்மலையைப்பற்றிக் கூறியிருக்கும் செய்திகளை நோக்குவோம். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் தம் திருப்புகழில் பல இடங்களில் இத்தலத்தைப் பழமுதிர்சோலை, சோலைமலை என்னும் பெயர்களால் அழைக்கிறார். இதை அவர் முருகப்பெருமான் கோயில்கொண்ட இடமாகவே வருணிக்கிறார். அவரது காலம் சுமார் 500 ஆண்டுகட்குக் கீழ்ப்பட்டது எனலாம். அழகர் அந்தாதி பாடிய அழகியமணவாளதாசர் அல்லது பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்பவர் திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியுள்ள அழகரைப் பற்றி அந்நூலில் விரித்துக் கூறியுள்ளார். இவர் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் மதுரையில் ஆண்ட திருமலைநாயக்கர் காலத்தவர் என்று சிலர் சொல்வார்கள். இவர் எழுதிய அஷ்டப்பிரபந்தம் என்னும் நூலில் மேற்கூறிய அழகரந்தாதி அடங்கியுள்ளது. 200 ஆண்டுகட்கு முன் இருந்த வேம்பத்தூர் சுவாமி கவி கலாருத்திரர் என்பவர் இவ்வழகரைப் பற்றி ஒரு பிள்ளைத்தமிழ் பாடியிருக்கிறார். வேம்பத்தூரைச் சேர்ந்த கவிகுஞ்சரமய்யர் என்பவர் அழகர் கலம்பகம் என்ற நூலை எழுதியிருக்கிறார். இதை எழுதியவர் அரிபத்தநாவலர் என்றும் கூறுவர். இம்மலையில் நான்மறை முழக்கமும் ஆழ்வார்களது பிரபந்தப்பாடல் ஓசையும் எப்பொழுதும் கேட்டுக்கொண்டே இருக்கும் என்று அந்நூல் கூறும். அன்றியும் இங்கு மலர்களும் பழங்களும் பூத்துக் கனிந்து குலுங்கிக்கொண்டிருக்குமாம். அவை மரகதப்பாறைகள் மீது உதிர்ந்து அவற்றை மறைத்துக்கொண்டிருக்குமாம். இம்மலையில் முருகனுக்கும் கோயில் இருந்த

தென்று அவர் கூறுகிருர். பல பட்டரைச் சொக்கநாதப் புலவர் என்னும் 17-ம் நூற்ருண்டுப் புலவர் அழகர் கிள்ளை விடு தூது என்ற நூலைச் சிறந்த இலக்கிய நயத்துடன் பாடியிருக்கிருர். இதை எழுதுவதற்காக அவர் காலத்தில் இருந்த நாயக்க மன்னன் அவருக்குச் சில மானியங்களை கொடுத்தானும். மற்றும் கவிகுஞ்சரபாரதி எழுதிய சோலைமலைக் குறவஞ்சி என்னும் நூலும் இம் மலையின் சிறப்பையும் அழகர் பெருமையையும், வருணித்துக் கூறுகிறது. அன்றியும் திவ்விய சூரி சரிதம், ஸ்ரீஹம்ஸ சரிதம், ஸ்ரீசுந்தரராஜ ஸ்தோத்திரம், நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி முதலிய பல நூல்களும் இதன் பெருமையைப் பற்றிப் பேசுகின்றன. கோயில் ஒழுகு என்னும் நூலில், ஸ்ரீரங்கத்தை முகம்மதியர் முதலிய படையெடுப்பாளர் தாக்கியபோது, இருமுறை ரங்கநாதர் இம்மலையிலுள்ள கோட்டைக்குள் பாதுகாவலுக்காகக் கொண்டு வந்து வைக்கப்பட்டார் என்ற செய்தி கூறப் படுகிறது. அப்போது அழகர் மலையில் உள்ள அழகிய மணவாளன் கிணற்றில்தான் ரங்கநாதர் பத்திரமாக வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

இவ்வாறு மிகமிகப் பழங்காலந்தொட்டு இவ்வழகர் மலையும் ஸ்ரீ அழகரும் புராணங்களிலும் தமிழ் நூல்களிலும் இடம் பெற்று வந்திருக்கின்றன. ஆகவே யாராலும் இந்த க்ஷேத்திரத்தின் பழமையையும் பெருமையையும் எளிதில் அறிந்து அளவிட முடியாது.

—✻—

# 4. கோயிலைப்பற்றிய சாசனங்கள்

இக்கோயிலில் உள்ள சாசனங்கள், தமிழ், தெலுங்கு, கிரந்தம், பிராமி, வட்டெழுத்து முதலிய பல எழுத்துக் களில் எழுதப்பட்டவை. ஆனால் அவற்றுள் தமிழில் எழுதப்பட்டவையே அதிகம். அரசாங்கத்தின் சாசன ஆராய்ச்சி இலாகா, இவற்றுள் 120 சாசனங்களின் பிரதிகள் எடுத்துவைத்து இருக்கிறது. இவை பல வம் சத்து அரசர்கள் காலத்தவை. பாண்டியர். சோழர், ஹொய்சலர், விஜயநகர அரசர், வாணர், நாயக்கர் முதலிய பலரது காலத்துச் சாசனங்கள் இங்குக் காணப் படுகின்றன. இவற்றுள் பிராமி எழுத்துக்களில் எழுதப் பட்டவை, கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்தியவை. கி.மு. 3-ம் நூற்றூண்டில் வாழ்ந்த அசோகர் காலத்தில் பிராமி எழுத்து உபயோகத்தில் இருந்தது. ஆகவே இங்குள்ள பிராமி சாசனம் ஏறக்குறைய அக்காலத்தைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். பஞ்சபாண்டவர் படுக்கை என்று சொல்லப்படும் ஒரு குகையில் பாறை யின் மீது எழுதப்பட்ட இச்சாசனத்தில் தமிழ்ச் சொற் கள் பிராமி எழுத்துக்களால் எதழுதப்பட்டுள்ளன. இது வரையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழைய சாசனங் களில் இது ஒன்று. இதில், இக்குகையை அமைப்பித்த ஜைன முனிவர்களின் பெயரும் அதில் வாழ்ந்தவர்களின் பெயரும் எழுதப்பட்டிருக்கின்றன.

அழகர் மலையின் அருகிலுள்ள ஆனைமலை, கழுகு மலை, அரட்டாபட்டி முதலிய இடங்களிலும் கி. மு. 3-ம்

நூற்றுண்டைச் சேர்ந்த, பிராமி, பாலி, வட்டெழுத்து முதலிய லிபிகளில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் பல இருக்கின்றன. இவற்றில் அக்காலத்தில் வாழ்ந்த ஜைனர்களைப் பற்றிய செய்திகள் உள்ளன.

அழகர் மலையைப்பற்றிய குறிப்புகள், தமிழ் நாட்டில் காஞ்சீவரம், உடுமலைப்பேட்டை, தாடிக்கொம்பு, காட்டழகர் கோயில் முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.

இந்தச் சாசனங்களினுல் இக்கோயிலுக்கு அளவு இல்லாத சொத்தும் பொருள்களும் இருந்தன என்று தெரிகிறது. வைகை நதிக்கு வடக்கிலும் இதற்குச் சொந்தமான பல சதுர மைல் விஸ்தீரணமுள்ள நிலம் இருந்தது. 45 சதுர மைல் பரப்புள்ள அழகர்மலை முழுவதும் இதற்குச் சொந்தமாக இருந்தது. கணக்கற்ற கிராமங்களும் நிலங்களும் இருந்தன. பல மடங்களும் இக்கோயிலை அடுத்து உண்டாயின. அவை ராமாயண, மகாபாரதம், புராணங்கள், பிரபந்தங்கள் முதலியவற்றைப் படிப்பதற்கும் சொல்லித் தருவதற்கும் கட்டப்பட்டு, பல மானியங்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தன.

இப்படி இங்கு உண்டான மடங்களில் மிகவும் முக்கியமானது ராமானுஜ மடம். இதை ஸ்தாபித்தது ஸ்ரீராமானுஜரே. இது ஸ்ரீராமானுஜபீடமாக இருந்தது. ஒரு ஜீயர் இம்மடத்திற்கு எப்பொழுதும் தலைவராக இருந்திருக்கிறுர். ஸ்ரீ ராமானுஜருக்குப் பின் இப்பீடத்தை அலங்கரித்த பிரசித்திபெற்ற ஜீயர் மணவாள மாமுனிகள். ராமானுஜகூடம் என்றும் ஒன்று தனியாக

இருந்தது. அதில் அழகர் ஆராதனைக்காகவும் ஜனங்களுக்குப் போஜனவசதிக்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவையன்றி, குலசேகரன் மடம், திருநாடுடையான் மடம், வாணாதரையன் மடம் முதலிய வேறு சில மடங்களும் இருந்ததாகச் சாசனங்கள் மூலம் தெரிகிறது. இன்னும் பல உற்சவங்களுக்காகவும் அபிஷேகம், ஆராதனை முதலியவைகளுக்காகவும் நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததும் சாசனங்களால் தெரிகிறது. முற்காலத்தில் இப்படி சித்திரைத்திருநாள், வைகாசித்திருநாள், ஆனி-விசாகம், ஆனி அனுஷம், ஆடிப் பிரம்மோத்சவம், அர்ப்பிசி தலை அருவி உற்சவம், கார்த்திகை கைசிகம், மார்கழித்திருநாள் திருஅத்யயன உற்சவம், திருஆழித்திருநாள் முதலிய உற்சவங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிற்காலத்திலும் இப்படி பல கைங்கரியங்களுக்காக நிபந்தனைகளை ஏற்படுத்திச் சாசனங்களில் எழுதியிருப்பதை இன்றும் நாம் ஸ்ரீ அழகர் கோயிலில் பார்க்கலாம்.

—*—

## 5. அழகர்மலையில் உள்ள மற்ற தெய்வங்கள்

ஸ்ரீ அழகர் மலையில், ஸ்ரீ கள்ளழகர் என்ற சுந்தரராஜப்பெருமாளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் இருக்கிறது. ஆனாலும் இம்மலையில் வேறு சில தெய்வங்களும் இருக்கின்றன, பல தெய்வங்களுக்கும் இதில் தனித் தனிக் கோயில்களும் உண்டு. ஸ்ரீ கணேசர், சுப்ரமண்யர். பைரவர். சிவபெருமானுடைய பல அம்சங்களான

மூர்த்திகள் முதலியவர் இங்கு கோயில்கொண்டிருக்கின்றனர். ஆகையால் இது சகல வைதீக மதத்தவர்களுக்கும் பொதுவான இடம் என்று சொல்லலாம். வைதிக மதத்தைச் சேராத பௌத்தர்களும் ஜைனர்களும் கூட இங்கு ஸ்ரீ அழகரே முக்கியமான தெய்வம் என்று ஒத்துக்கொண்டதாகத் திருமங்கையாழ்வார் தம் பாசுரத்தில் பாடியிருக்கிறார். 2000 வருஷங்களுக்கு முன் நக்கீரர் என்னும் புலவரால் எழுதப்பட்ட திருமுருகாற்றுப்படை என்னும் பாட்டு ஒன்றில், 'பழமுதிர்சோலை கிழவோனே' என்று இம்மலை முருகனுக்குரியதாகச் சொல்லப்படுகிறது. இதைக்கொண்டு அருணகிரிநாதர் முதலியவர்கள் முருகனுடைய ஆறுபடை வீடுகளில் இதை ஒன்ருகப் பாடியிருக்கிருர்கள்.

ஒவ்வொரு கோயிலிலும் கர்ப்பக்கிருஹத்திலுள்ள முக்கியமான தெய்வத்தைச் சுற்றியுள்ள பிரகாரங்களில் பரிவாரதேவதைகளும் இருக்கவேண்டுமென்பது ஆகம விதி. அதன்படியே இங்கும் ஸ்ரீ அழகரைச்சுற்றிப் பிரகாரங்களில் பல பரிவார தெய்வங்கள் இருந்தன. இன்றும் அப்படி சில தெய்வங்கள் அங்கு இருக்கின்றன. மேற்கூறிய தெய்வங்கள் அப்படி ஏற்பட்டவையாய் இருக்கவேண்டும். கோயிலுக்கு ஏழு பிராகாரங்கள் இருப்பதுதான் பெருமை. அப்படிப்பட்ட கோயிலையே உத்தமோத்தமமான கோயில் என்று சொல்லுவார்கள். ஏழுக்குக் குறைந்த பிரகாரங்கள் இருந்தால், அந்தக் கோயில்களை, உத்தம மத்தியமம் என்றும் உத்தம அதமம் என்றும் சொல்வார்கள். இந்த அழகர் கோயிலில் ஏழாவது பிராகாரத்திற்கு உரிய ஆதித்யர், க்ஷேத்ர பாலகர் (சிவன் அம்சம்) ஆகியவர்கள் இருப்பதினல்

இதில் முன்பு ஏழு பிராகாரங்கள் இருந்தன என்று அறியலாம். அப்படியே மற்ற ஆறு பிராகாரங்களுக்கும் உரிய பல பரிவார தெய்வங்களும் இப்பொழுது இக் கோயிலில் இருக்கின்றன. ஆனால் அவற்றில் சில தெய் வங்கள் சேதம் அடைந்தும் மற்றும் சில இடம் மாறியும் இருக்கின்றன. இவை பிற்காலத்தில் ஏற்பட்ட சண்டை கள் குழப்பங்கள் காரணமாக உண்டானவை என்பதில் சந்தேகமில்லை. இன்றும் ஸ்ரீ அழகர் கோயிலில் உள்ள முக்கியமான பரிவார தெய்வங்கள், க்ஷேத்ரபாலகர், வலம்பரிவிநாயகர், ஆழ்வார்கள், சுதர்சனம், யோகநர சிம்மர், ஆண்டாள், சரஸ்வதி, தசாவதாரங்கள், ஸ்ரீராமன், கிருஷ்ணன், மணவாளமாமுனி உடையவர், பதினெட்டாம்படி கருப்பணசாமி, அலங்கார விநாயகர் முதலியவை.

இங்கு முற்காலத்தில் இருந்து பிறகு அழிந்து போன கோயில்களில் முக்கியமானவை பலராமன், கிருஷ்ணன், ஸ்ரீநிவாசர், சுதர்சனர், சிவன், சுப்ரமண் யர், வேதாந்ததேசிகர், முதலியவர்களுடைய கோயில் கள். இவற்றிலிருந்த மூல விக்கிரகங்கள் என்ன ஆயின என்று தெரியவில்லை. ஆனால் இக்கோயில்களில் இருந்த உலோக விக்கிரகங்கள் மட்டும் பிரதான கோயிலுக்குள் எடுத்துச்சென்று பத்திரப்படுத்தி வைக்கப்பட்டன. சுதர் சனருடைய மூல விக்கிரகச் சிலை மட்டும் பழைய இடத்தி லிருந்து எடுத்து இப்போதுள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மற்றவை மறைந்துவிட்டன.

முக்கியமான சந்நிதிகள்:— இம்மலையிலுள்ள மூலவர் பெயர் ஸ்ரீபரமஸ்வாமி என்பது. இவரது சேவை கம்பீர

மாகவும் கவர்ச்சியாகவும் இருக்கிறது. ஸ்ரீபரமஸ்வாமி பஞ்சாயுதங்களோடு இங்கு காட்சியளிக்கிறார். ஸ்ரீதேவியும் பூதேவியும் இருபுறமும் நிற்க இவர் நின்ற திருக்கோலத்துடன் திவ்யாலங்கார சேவை சாதித்தவண்ணம் இருக்கிறார். மற்ற விஷ்ணு ஸ்தலங்களில் இருப்பதுபோல அல்லாமல் இங்கு மூர்த்தியின் கையிலுள்ள சக்ரமானது பிரயோக தோரணையில் இருக்கிறது. இவரது உற்சவ மூர்த்திக்குத்தான் அழகர் என்றும் சுந்தரராஜர் என்றும் திருநாமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பெயருக்கு ஏற்ப இவரது திவ்ய சௌந்தர்யம் ஈடும் எடுப்பும் இல்லாததாக விளங்குகிறது. இந்தியா முழுவதிலும் இதைப் போன்ற அழகான உற்சவ மூர்த்தி இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்த மூர்த்திக்கு நூபுரகங்கை நீராலேயே திருமஞ்சனம் செய்யவேண்டும். வேறு நீரால் அபிஷேகம் செய்தால், கருப்பாக மாறிவிடுகிறார். அபரஞ்சி என்னும் உயர்ந்த தங்கத்தினால் செய்யப்பட்ட வேறு விக்கிரகம் ஒன்றுள்ளது. இதைத்தவிர இந்தியாவில் இரண்டாவதாகத் திருவனந்தபுரத்தில் உள்ள உற்சவ மூர்த்தியும் இப்படியே அபரஞ்சியினால் செய்யப்பட்டது. இந்த இரண்டு இடங்களைத் தவிர, வேறெங்கும் அபரஞ்சியினால் செய்யப்பட்ட மூர்த்திகள் இல்லை. அழகர்கோயிலில் உள்ள இந்த உற்சவ மூர்த்திக்குத்தான் சோலைமலைக்கரசர் என்ற பெயர் திவ்வியப்பிரபந்தத்தில் சொல்லப்படுகிறது. சம்ஸ்கிருத புராணங்களில் இம்மூர்த்தி விருஷபாத்ரீசர் என்றும் விருஷபாத்ரீநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இந்த உற்சவரைத்தவிர, இக்கோயிலில் ஸ்ரீ சுந்தரபாஹு, ஸ்ரீ நிவாசர், நித்தியோத்ஸவர் என்ற வேறு உற்சவர்களும் உண்டு. அவை வெள்ளியினால் செய்யப்பட்டவை. இவற்றின்


கையில் உள்ள சக்கரங்களும் பிரயோகபாவனையில் இருக்கின்றன.

கர்ப்பக்கிரகத்திற்கு அடுத்துள்ள பிராகாரத்தில் வலம்புரிவிநாயகர் சந்நிதி இருக்கிறது. வலம்புரி விநாயகர் என்பது, தும்பிக்கையை வலப்பக்கமாக வளைத்து வைத்துக்கொண்டிருக்கும் உருவம் ஆகும். மற்ற எல்லா இடங்களிலும் விநாயகரின் தும்பிக்கை இடப்பக்கமாகத்தான் வளைந்திருக்கும். இங்கு மட்டும் அது வலப்பக்கமாகத் திரும்பி இருக்கிறது. இந்தச் சந்நிதியில் பக்தர்களுக்கு விபூதி பிரசாதம் கொடுக்கப் படுகிறது. இங்கு இவருக்கு விசேஷ பூஜைகள் நடக் கின்றன. விநாயக சதுர்த்தியன்று இவருக்கு நூபுர கங்கையிலிருந்து நீர் கொண்டுவந்து அபிஷேகம் செய்து, விசேஷ ஆராதனை நடக்கும். இங்கு வடக்குப் பிராகாரத்தில் உள்ள சேனை முதலியார் அல்லது விஷ்வக்சேனர் என்ற மூர்த்தியும் விநாயகர் போலவே, சேனை முதலியார், விஷ்வக்சேனர் என்ற பெயர்களுடன் தான் வைஷ்ணவர்கள் விஷ்ணு கோயிலில் வழிபடுவார் கள். இங்குள்ள விஷ்வக்சேனர் ஸ்ரீ ஜயதேவி என்னும் தேவியோடு இரண்டு கைகளுடன் காட்சியளிக்கிறார்.

பைரவர் அல்லது க்ஷேத்ர பாலகர் :— விஷ்வக்சேன ரைச் சேவித்தவுடன், சேவார்த்திகள் அதன் அருகில் அடுத்துள்ள பைரவர் அல்லது க்ஷேத்ரபாலகர் சந்நிதி யைத் தரிசிக்கவேண்டும். இங்கு பைரவர் நீளமான தந்தங்களுடனும் கோரைப் பற்களுடனும் திரிசூலத்துட னும், நாய் வாகனத்துடனும் சேவை சாதிக்கிறார். இங்கும் விபூதி பிரசாதம்தான் கொடுக்கப்படுகிறது.



அழகரின் கள்ளர் திருக்கோலம்.



திருக்கல்யாணம்.

பைரவர். சிவனுடைய ரத்தத்திலிருந்து தோன்றியவர் என்று சொல்லப்படுகிறது. சிவன் கோயிலில் இவருக்கு அதிக முக்கியத்துவம் உண்டு இவர்தான் சிவகணங் களுக்கு பிரதம சேனுதிபதி. கணபதியும், முருகனும் சிறு சேனைத்தலைவர்கள். சிவன் கோயிலை மேற்பார்வை செய்யும் சண்டிகேஸ்வரரைவிட இவருக்குத்தான் அதிக அதிகாரம் உண்டு. இவரைச் சிவனுடைய கோர (ரௌத்திர) ஸ்வரூபம் என்று சொல்வார்கள், இவரைச் சைவ மதத்தின் சில பிரிவினராகிய பாசுபதர், காளமுகர், காபாலிகர், லிங்காயத்துகள் (வீரசைவர்) ஆகியோர் பிரதான தெய்வமாக வணங்குகிறார்கள். தென்திருப்பதி என்னும் இந்தப் பெரிய வைஷ்ணவ ஸ்தலமாகிய அழகர்கோயிலில், சிவனுடைய அம்சமாகிய பைரவர் சந்நிதி இருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. வீரசைவ மதம் இங்குப் பரவியிருந்த காலத்தில் ஒரு வேளை அதற்கு இந்தக் கோயிலிலும் இடம் ஏற்பட்ட தற்கு இது ஒரு அடையாளமாக இருக்கலாம். ஒரு வீர சைவர் (லிங்காயத்து) சிலையும் இக்கோயிலில் இருப்பது இதற்கு மற்றொரு சாட்சி. இந்த வீரசைவரே இங்கு பைரவர் சந்நிதியை ஏற்படுத்தி இருக்கக்கூடும்.

இக்கோயிலில் உள்ள க்ஷேத்திரபாலகரைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. கோயிலில் அர்த்தஜாமபூஜை முடிந்ததும் கோயில் கதவைப் பூட்டிச் சாவியை க்ஷேத் திரபாலகர் சந்நிதியில் வைத்துவிட்டுப் போவது வழக்கம். மறுபடியும் அதை மறுநாள் காலையில்தான் எடுத்துக் கோயிலைத் திறக்கவேண்டும். ஒரு தடவை, கோயில்பட்டர், தன் சிறு குழந்தை ஒன்று கோயிலில் இருப்பதை மறந்துவிட்டு, அதைப் பூட்டிச் சாவியை

க்ஷேத்திரபாலகர் முன்னுல் வைத்துப் போய்விட்டார். பிறகு அவருக்குத் தன் குழந்தையின் ஞாபகம் வரவே, ஓடோடியும் வந்து அச்சாவியை எடுத்தார். உடனே க்ஷேத்திரபாலகர் அவரைத் தடுத்துச் சாவியை எடுக்க வேண்டாம் என்றும், குழந்தை மறுநாள் காலைவரை பத்திரமாக இருக்கும், கவலைப்படவேண்டாம் என்றும் சொன்னுர்.அதைக்கேட்காமல், அந்தப் பட்டர் கோயிலைத் திறக்கவேண்டுமென்று பிடிவாதம் செய்யவே, க்ஷேத்திரப்பாலகர் குழந்தையை எடுத்து வெளியே எறிந்தார். இதனுல் கோபம்கொண்ட பட்டர், க்ஷேத்திரப்பாலகரின் சக்தியில் ஒரு பாகத்தை இழுத்து, அதை வெளியே இருந்த ஒரு பாறையில் பதியவைத்தார். அந்தப் பாறையை இப்பொழுதும் பக்தர்களுக்குக் காட்டி, இது தான் க்ஷேத்திரப்பாலகர் கல் என்று அங்குள்ளவர் சொல்லுவார்கள். இந்த க்ஷேத்திரபாலகர் சந்நிதிக்கு முனையதரையன் திருமண்டபம் என்றும் பெயர் உண்டு. சிவபெருமான் விஷ்ணுவைக் குறித்துத் தவம்செய்து, க்ஷேத்திரபாலகராக இக்கோயிலில் இடம் பெற்ருர் என்று விருஷபாத்ரி மகாத்மியம் கூறுகிறது.

ஸ்ரீகல்யாண சுந்தரவல்லி:– இது மூலவர் சந்நிதிக்கு அடுத்தபடியாக முக்கியமான சந்நிதி. இது கோயிலின் தென்பிராகாரத்தில் இருக்கிறது. இதைத் தனிக்கோயில் தாயார் சந்நிதி என்றும் சொல்வார்கள். இவர்தான் மூலவர் பரமஸ்வாமியின் தேவி. இத்தாயாருக்கு ஆறு கால பூஜையும் உண்டு. இங்கு பக்தர்களுக்குக் கொடுக்கப்படும் பிரசாதம் மஞ்சள். இந்த மூலதேவதையும் மிகவும் அழகான சேவை சாதிக்கிருர். கல்யாணசுந்தர

வல்லி என்னும் பெயருக்கேற்ப இவர் அதிக சௌந்தர்யத்துடன் விளங்குகிருர்.

ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி:— வடக்குப் பிராகாரத்தில் கோதை அல்லது ஆண்டாள் சந்நிதி இருக்கிறது. கோதையின் உற்சவமூர்த்தி உட்கார்ந்திருக்கும் பாவனையில் இருக்கிறது. இது எங்கும் இல்லாத ஒரு அபூர்வ சேவை. தனது திருக்கல்யாண தினத்தன்று ஸ்ரீசுந்தரராஜர் ஸ்ரீதேவி, பூதேவி, கல்யாணசுந்தரவல்லி, ஆண்டாள் ஆகிய நான்கு தேவிமாருடன் இங்கு தரிசனம் அருளுகிருர். இந்த திவ்ய தரிசனம் இந்த க்ஷேத்திரத்தில் மட்டும்தான் கிடைக்கும். வேறெங்கும் கிடைக்காது. ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீ ரங்கநாதரையும் சுந்தரராஜரையும் தன் கணவனுக வரித்தார் என்று சொல்லப்படுகிறது. இச்சந்நிதியிலும் ஆறுகால பூஜை உண்டு. இங்கு மஞ்சள்பொடி பிரசாதம் கொடுக்கப்படுகிறது.

ஸ்ரீ சுதர்சனர்:— இந்தியா முழுவதிலும் இந்த சுதர்சனர் சந்நிதியைப்போல வேறெங்கும் இல்லை. இங்கே எழுதியிருக்கும் மந்திரங்கள், யந்திரங்கள் முதலியவை மிகவும் சக்தியுள்ளவை. இந்த மூர்த்திக்குப் பதினறு கைகள் இருக்கின்றன; ஒவ்வொரு கையிலும் ஒரு ஆயுதம் இருக்கிறது. இவருடைய ரௌத்ரரூபமும், மூன்று கண்களும், நீண்ட பற்களும் பார்க்கப் பயங்கரமானவை. இவர் ஷட்கோண யந்திரத்தின்மேல் இருக்கிருர். பின்புறம், இவர் ஜ்வாலா நரசிம்மராக, யோகீஸ்வரர்போல உட்கார்ந்து திரிகோண யந்திரத்துடன் தரிசனம் அளிக்கிருர்.

யோக நரசிம்மர்:— மேற்குப் பிராகாரத்தில் உள்ள இந்த மூர்த்தியை சேவார்த்திகள் அதிகம் சேவிக்கிறார்கள். இந்தப் பாவனையில் நரசிம்மர் அதிக கோபமாகவும், கடுகடுப்பாகவும் கம்பீரமாகவும் சேவை சாதிக்கிறார். இவரை இந்தப் பாவனையில் ஜ்வாலா நரசிம்மர் என்றும் சொல்வார்கள். இவருடைய தலையிலிருந்து கோபாக்நி மேலே கிளம்பிச் செல்வதற்காக, தலைக்கு நேராக மேலே ஒரு பெரிய துவாரம் இருக்கிறது. இந்தக் கோபாக்நியைத் தணிப்பதற்குத் தினமும் எண்ணெய், பால், தயிர் முதலியவற்றாலும், நூபுரகங்கை நீராலும் இவருக்கு அபிஷேகங்கள் நடக்கும். இதற்காக 100 வருஷங்களுக்கு முன்பு பச்சையப்ப முதலியார் ஏற்படுத்திய கட்டளை இன்றும் தவறாமல் நடந்து வருகிறது, இக்கட்டளையின் விவரங்கள் பதினெட்டாம்படிக் கோபுர வாசலில் உள்ள ஒரு கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கின்றன. வடக்குப் பிராகாரத்தில் மற்றும் ஒரு யோகநரசிம்ம மூர்த்தியும் இருக்கிறார். இன்னும் சில இடங்களிலும் நரசிம்மருடைய உருவங்கள் இக்கோயிலில் இருக்கின்றன.

இந்தக் கோயிலில் மற்றும் பார்த்தசாரதி, மண்டுக மகரிஷி, அஷ்ட புஜகிருஷ்ணர், நந்தன கிருஷ்ணர், சரஸ்வதி தசாவதாரம், திருப்பள்ளியறை நாச்சியார், ஆழ்வார்கள், ராமானுஜர், முதலியோருடைய சந்நிதிகள் பார்க்கத் தகுந்தவை. இங்குள்ள சாளிக்கிராமத்தின் தரிசனத்தையும் பக்தர்கள் தவறாமல் செய்யவேண்டும். இவை இங்கு நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. இவைகளுக்கு அபிஷேகம்செய்யப்பட்ட தீர்த்தம் தினந்தோறும் சேவார்த்திகளுக்குக் கொடுக்கப்படுகிறது. அழகர்மலையின் தெற்குக்கோடியில் உள்ள சதிரிளமடவார் சந்நிதி

இங்கு விசேஷமானது. பிரம்பி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, மஹேந்திரி, சாமுண்டி என்னும் சப்தமாதாக்களின் சந்நிதியே இது. இந்த சப்தமாதாக்கள், முறைமே பிரம்மா. மகேஸ்வரன், குமரன், விஷ்ணு, வராஹர், மஹேந்திரன், இந்திரன்என்னும் தமது புருஷர்களுடைய சக்திகளேயும், வாகனங்கள், ஆயுதங்கள் முதலியவற்றையும் வைத்திருப்பதாக ஐதிக்கியம். இவர்களுக்கு நித்திய பூஜை உண்டு. விசேஷமான சில பூஜைகளும் உண்டு.

இந்த மலையில் உள்ள தீர்த்தங்களுக்கும் ஸ்தலங்களுக்கும் அதிதேவதையாக இருப்பவள் ராக்காயி அம்மன். இவள் ஆங்கிரஸ முனிவரின் மகள். அமாவாசை அவளுக்கு விசேஷ நாள். அன்று அவளுக்குப் பூஜை நடக்கும். இவள் மூல ஸ்தானத்திற்கு வடமேற்குத்திசையில் வடபுறமாக விஷ்ணு கோயிலில் மூன்ருவது பிராகாரத்திருக்கும் பரிவாரதேவதை, சுந்தரராஜருக்கும் பதினெட்டாம்படி கருப்பணசுவாமிக்கும் அடுத்தபடி ராக்காயி அம்மனுடைய வைபவம்தான் இக்கோயிலில் பெரிதாக இருக்கிறது. கருப்பணசாமி என்னும் தெய்வம் கள்ளர்களுக்கு மிகவும் முக்கியமானது. இத்தெய்வம் வடக்கிலிருந்து கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் இதற்கு வடக்கு நோக்கி நின்றே பூஜைகள் செய்வார்கள். கருப்பணசாமியின் பல பேதங்கள், பெரிய கருப்பன், சிறிய கருப்பன், மண்டைக்கருப்பன், தோட்டிக்கருப்பன், கும்மட்டிக்கருப்பன், பழையகருப்பன் முதலியவை. இக்கருப்பண தெய்வங்களுக்குப் பிரதான தெய்வம் அழகர்மலையில் உள்ள பதினெட்டாம்படிக் கருப்பணசாமியே. இவருக்கு இங்கு கிருஷ்ணபுத்ரன்

என்றும் ஒரு பெயர் எண்டு. ஆனல் இவருக்கு இங்கே உருவம் இல்லை. இங்கு பதினெட்டாம்படி கோபுரக் கதவுகளையே இத்தெய்வமாக எண்ணிப் பூஜைகள் நடக்கும். மற்ற இடங்களில் இவர் கைகளில் ஒரு கொக்கியும் கத்தியும், கதாயுதமும், ஈட்டி முதலியவையும் இருக்கும். காலில் செருப்பு அணிந்திருப்பார். இவரது தரிசனம் பயங்கரமாகவும் யுத்தபாவனையிலும் இருக்கும். இவரது பக்தர்கள் இவருக்கு மேலே சொன்ன பலவிதமான ஆயுதங்களையும், தொட்டில், செருப்பு முதலியவைகளையும் நேர்த்திக் கடனுகக் கொடுப்பார்கள். அழகர்கோயிலில் உள்ள பதினெட்டாம்படி கதவுகளுக்குச் சந்தனம், குங்குமம், கற்பூரம் முதலியவை பூசி, மாலை, புஷ்பம் முதலியவற்ருல் அலங்கரித்துப் பூஜை செய்வார்கள். பொங்கல் வடை, தேங்காய் முதலிய நெய்வேத்தியங்கள் இவருக்குப் படைக்கப்படும். விபூதிப் பிரசாதம் எல்லோருக்கும் கொடுக்கப்படும். இதற்குப் பூசாரிகள், கோயில் பட்டர்கள் அல்ல, சந்நிதி பரிசாரகர்களே. குயவர் குலத்தைச் சேர்ந்த பூசாரி ஒருவர் தேங்காய்களை உடைத்து விபூதிப் பிரசாதம் கொடுப்பார். இப்பதினெட்டாம்படிக் கதவு பிரம்மோத்சவ காலத்தில் சக்கரத்தாழ்வார் வருவதற்காக மட்டும் வருஷம் ஒரு முறை திறக்கப்படும். சில சமயங்களில் ஏதாவது பிரமாணம்செய்ய விரும்புகிறவர்களுக்கு, அது திறக்கப்படும். ஆகையால் அழகர் கோயிலுக்குப் பிரதான வாசலாகிய இப்பதினெட்டாம்படி வாசல் சாதாரணமாக மூடப்பட்டே இருக்கும். இதற்கு வடக்கே உள்ள வண்டிவாசல் என்பதுதான் கோயிலுக்குள் போவதற்கும் வருவதற்கும் வழக்கமான வழி. பல வியாஜ்யங்கள், விவகாரங்கள் முதலியவை இப்பதினெட்டாம்படி வாசலில் பிரமாணம் செய்து, தீர்க்கப்படுவது

இப்பொழுதும் வழக்கமாக இருக்கிறது. தினந்தோறும் நூபுரகங்கையிலிருந்து அழகருக்குக் கொண்டுவரப்படும் அபிஷேகத் தீர்த்தம்,முதலில்இப்பதினெட்டாம்படியானிடம் வைக்கப்பட்டு, அத்தீர்த்தம் மிகவும் பரிசுத்தமாக நூபுரகங்கையிலிருந்தே கொண்டுவரப்பட்டது என்று பிரமாணம் செய்யப்படவேண்டும். பிறகுதான் அது அழகரது அபிஷேகத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இப்பதினெட்டாம்படியைப்பற்றி ஒரு கதை உண்டு. ஒரு சமயத்தில் மலையாளத்தைச்சேர்ந்த அரசன் ஒருவன் இவ்வழகர் மலையில் உள்ள சுந்தரராஜரைத் தன் தேசத்திற்கு எடுத்துக்கொண்டுபோய் வைத்துப் பூஜை செய்ய நினைத்தான். அழகாபுரிக்கோட்டை அதிக காவலுடன் இருந்ததால், அவன் அழகரை எடுத்துக்கொண்டுபோக முடியவில்லை. ஆகையால் அவன் ஒரு தந்திரத்தால் அழகரைக்கொண்டு போகவேண்டுமென்று எண்ணினான். ஆகையால் அவன் தன்னிடமிருந்த, மந்திரத்திலும் தந்திரத்திலும் கைதேர்ந்த 18 பேர்களை இவ்விடத்திற்கு அனுப்பி எபபடியாவது அழகரைக்கொண்டு வரும்படி சொன்னான். அவர்கள் இங்கே வந்து தம் மந்திர சக்தியால் ஒருவர் கண்ணிலும் படாமல், அழகர் விக்கிரஹத்தைக்கொண்டு போக முயற்சி செய்தார்கள் ஆனால் இது பலிக்கவில்லை. ஆகையால் அவர்கள் தங்களுடைய மந்திர சக்தியால் அழகருடைய கலைகளை (சக்தியை) இழுத்து, வேறொரு விக்கிரஹத்தில் வைத்து, தம் நாட்டில் அதை ஸ்தாபிக்க முயற்சி செய்தார்கள். ஆனால் அழகர் கோயிலில் இருந்த சில மந்திர தந்திர சாஸ்திர நிபுணர்களாகிய பட்டர்கள் இந்த சூழ்ச்சியைக் கண்டுபிடித்து, அந்தப் பதினெட்டுப் பேர்களையும்,

பிரதான கோபுரவாசலின் 18 படிகளின் கீழ்வைத்துப் புதைத்துவிட்டார்கள். பிறகு அந்தச் சூழ்ச்சிக்காரர்களுக்கு உதவியாக வந்த ஒரு தெய்வம், இனிமேல் தானும் அந்தக் கோபுரவாசலில் இருந்து காவல் காத்து கோயில் சொத்துக்களையெல்லாம் பத்திரமாகக் கவனித்துக்கொள்வதாகஒப்புக்கொண்டு, அதற்காகத் தனக்குத் தினந்தோறும் அழகரின் அர்த்தஜாம நிர்மால்ய நைவேத்தியங்களைக் கொடுக்கவேண்டுமென்று பட்டர்களைக் கேட்டுக்கொண்டது. அதன்படியேஇப்பொழுதும் அத்தெய்வத்திற்கு அங்கே நிர்மால்ய நைவேத்தியம் கொடுக்கப்படுகிறது. இத்தெய்வத்தைத்தான் பதினெட்டாம்படி சுவாமி என்று சொல்லுவது. இப்பதினெட்டாம் படி சுவாமியைப் பற்றி ஒரு தப்பான கதையும் வழங்குகிறது. அதாவது, இவரை மதுரைவீரன் என்று சிலர் சொல்வார்கள். மதுரைவீரன் என்பவன் நாயக்க அரசர் ஒருவரது படையில் இருந்த வீரன். அந்த அரசனுடைய மகள் அவனைக் காதலித்தாள். ஆகவே இருவரும் ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப்போய்விட்டார்கள். அவர்கள் இறந்துபோன பிறகு, அவர்களை ஜனங்கள் தெய்வமாக வைத்துக் கும்பிட்டார்கள், என்பது இக்கதை.

இந்தப் பதினெட்டாம்படி கருப்பண்ண சுவாமி, இம்மலையிலுள்ள அழகரின் காவல் தெய்வம் ஆகையால், அழகர் சித்திரை மாதத்தில் மீனாக்ஷி கல்யாணத்திற்காகப் புறப்படும்போது, அவர் மீதுள்ள நகைகள் இன்னின்னவை என்று இத்தெய்வத்தின் முன்பு படித்துக்காட்டுவார்கள். அழகர் திரும்பி வரும்போது அந்தப்பட்டியலைப்படித்து சரிபார்ப்பார்கள். கோயில் பண்டாரத்தின் (பொக்கிஷம்) சாவியையும் தினந்தோறும் இரவில் இந்த

தெய்வத்தின் முன் வைப்பார்கள். பட்டரைத்தவிர ஒருவரும் இந்தச் சாவியை மறுநாள் காலைவரை தொட மாட்டார்கள். அப்படித் தொட்டால், அத்தெய்வம் தண்டித்துவிடும் என்று யாவரும் பயப்படுவார்கள். இத் தெய்வத்தின்முன் ஒருவரும் பொய் சொல்லவும் துணிய மாட்டார்கள். ஆகையால், பெரிய வழக்குகள், வியாஜ் ஜியங்கள் முதலியவற்றில் உண்மையறிய வியாஜ்யக் காரர்களைக் கோர்ட்டார் கடைசி நேரத்தில் கூட இக் கருப்பண்ணசாமி சந்நிதியில் பிரமாணம் செய்யச் சொல்லி உண்மையைக் கண்டுபிடித்துக்கொள்வார்கள். இப்பொழுதும் இது சாதாரணமாக நடக்கிறது. முற் காலத்தில் ஆண்டாள் கூட இப்பதினெட்டாம்படியானை வியந்ததாகச் சொல்லப்படுகிறது.


—※—

## 6. சிலைகளும் சிற்பங்களும்

நமது புராதன நாகரிகம் படைத்த பாரத பூமியில் அதிநுட்பமான பலவிதக் கலைகள் மிகப் பழங்காலந் தொட்டே சிறந்திருந்தன. உலகத்தின் மற்ற பாகங்கள் நாகரிகம் அடையாத காலத்தில் நம்நாடு நாகரிகத்தில் மிக உன்னத நிலைமை அடைந்திருந்தது. இதற்குப் போதுமான சாட்சி, நமது மிகப் பழைய கோயில்களே. அவை இன்றளவும் நின்று நம் தொன்று தொட்டுவந்த நாகரிகத்தை உலகுக்குப் பறைசாற்றுகின்றன. நம் கோயில்கள் பலவிதமான கலைகளுக்கு இருப்பிடமாகவும் கலைக்களஞ்சியங்களாகவும் விளங்கிக்கொண்டிருக்கின் றன. இத்தகைய கோயில்களில் நம் அழகர்கோயிலும்

SRI

# Plan:-Forts of Algapuri and Hiranyan with Thirumalirunjolaimalai Temple (Alagar Kovil.)



Scale 1" = 6Chs.

(For details see next page.)

## EXPLANATION OF THE PLAN

1. Garbagriham and Somachchanda Vimanam-Within Nangal Kunram Prakaram.
2. Sri Kshetra Pala's Sannidhi - 'Munayadarayyan Thirumantapam'
3. Sri Valamburi Vinayaka's Sannidhi (do)
4. Aryan Vassal.
5. Aryan Mantapam with Sri Pakshiraja's Sannidhi–Once Gold Plated.
6. Raghava Raja's Padiyetha Mantapam.
7. Golden Dwajasthambam.
8. Sri Alwar's Sannidhi.
9. Sri Kalyana Sundaravalli Thayar's Sannidhi.
10. Sri Sudarsana's Sannidhi.
11. Sayyadesa "Palliyarai" with Ivory Vimanam and the Golden "Bala Gopalan Thiruppalli Kattil."
12. Sri Yoganarasimha.
13. Sri Godha's Sannidhi.
14. Thiru Malaikkinar.
15. Sri Saraswathi's Sannidhi.
16. Yagasala.
17. Sri Dasavathara Sannidhi.
18. Kovil Pon Meinda Perumal Thirumantapam.
19. Thondaman Gopuram with the Famous Wooden Carved Doors.
20. Sri Rama's Sannidhi.
21. Sri Krishna's Sannidhi.
22. Sri Kalyana Mantapam with its Rich Sculptural Works.
23. Sri Govardhana Fountain.
24. Kodai Thirunal Mantapam (Choultry)
25. Sri Manavala Mamuni Sannidhi-Ruins.
26. Sri Udayavar Sannidhi.
27. Thirumalirunjolai Jeer Mantapam.
28. Kudhirai Vahana Mantapam.
29. Sri Rama Kalanjiyam with Gaja Lakshmi's Shrine.
30. Sri Lakshmana Kalanjiyam.
31. Yathirajan Thirumuttam.
32. Vandivasal.
33. Sri Padinettampadi Gopuram and Shrine.
34. Yanaivahana Mantapam.
35. Pushkarani.
36. Mound where on stand Mudi shed and Sacrificial Altars beneath which is reputed to exist a Siva Temple.
37. Hiranyan (Iravan) Fort Gate.
38. Thiruthther Nilayam.
39. Thirumalai Nayak's Palace.
40. Thirumalai Nayak's Mantapam, housing the Statue of Thirumalai Nayak and Mutthalu Nayak with their consorts.
41. Sri Srinivasan's Sannidhi Ruins.
42. Thiruthther Veedhi.
43. Mayya Veedhi-Central Main Road.
44. Agni Pushkarani.
45. Raya Gopuram.
46. Vijaya Dasami Mantapam.
47. Alangara Vinayagar.
48. Sri Narayana Pushkarani "Perumal Urani."
49. East Fort Gate.
50. South Fort Gate.
51. West Fort Gate.
52. North Fort Gate.
53. Aramaththu Kulam - "Arama Vapi"
54. Periyalwar Nandavanam.
55. Periyalwar's Mantapam.
56. Sadirilamadavar Sannidhi.
57. Thiruchilambaru - Sri Nupura Ganga.
58. Alagiya Manavalan Kinar.
59. Vasantha Mantapam with its famous Mural Paintings.
60. Minor Shrines.
61. Vasantha Agraharam.
62. Upper Ghat Road to Nupura Ganga, Periya Aruvi etc.
63. Lower Ghat Road leading to Hanumar Theertham, Garuda Theertham, Nupura Ganga etc.
64. Lord Alagar's Hills.
65. Staff quarters.
66. Pilgrim's Rest house.

*N. B:*– Space prohibits noticing in detail the Algar's Hills, with their very many Theerthams, Shrines, Mantapams etc. as well as the noticing of the many and numerous minor shrines and various other items and objects of interest such as the Gurukula, the Library, the Museum etc. etc.

சிறப்பான ஒன்று, இக்கோயிலில் சிற்ப சாஸ்திரம், கட்டிட சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், நடனம், சங்கீதம், சித்திரம் முதலிய பலவிதமான கலைகளும்போற்றப்பட்டு வந்தன. ஆனால் இக்கலைகளில் இப்பொழுதும் அழியாமல் தம் புகழ் பரப்பிக்கொண்டிருப்பவை சித்திரமும் சிற்பமும் கட்டிட சாஸ்திரமுமே. மற்றவை காலப் போக்கில் மறைந்துவிட்டன. இவற்றை இப்பொழுது நாம் அநேகமாக எல்லாக் கோயில்களிலும் பார்க்கலாம்,

இக்கோயில் நகரம் அழகாபுரிக் கோட்டை, இரண்யன் கோட்டை என்ற இரண்டு கோட்டைகளையுடையது. இந்த இரண்டும் 100 ஏக்கர் நிலத்தில் இருக்கின்றன. பிரதான கோயில் இரண்யன் கோட்டையில் இருக்கிறது. அழகாபுரிக்கோட்டையில் தான் நகரம் இருந்தது. இக் கோட்டையை முன்பு ஆண்டவள் அல்லி அரசாணி அல்லது சித்திராங்கதை என்று தவறாகச் சொல்லப்படுகிறது. உலூபி என்னும் நாகராணிதான் இதையாண்டாள். இவளை அர்ச்சுனன் கலியாணம் செய்துகொண்டான் என்று பாரதத்தில் இருக்கிறது, இந்த மலை நாகர்கள் வாழ்ந்த மலை என்பதற்கு அடையாளமாக இன்றும் இங்கு நாகர் பூஜை பிரபலமாக நடக்கிறது. மலையில் எங்கும் நாகர் சிலைகள் அதிகமாக இருப்பதை இப்பொழுதும் பார்க்கலாம். நாகநாதர் கோயில் ஒன்றும் இங்கே இருக்கிறது. நாகசர்ப்பங்கள் ஆயிரக் கணக்கில் செதுக்கப்பட்டு இக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. அழகாபுரிக்கோட்டை சிதைந்திருந்தும் இன்றும் அதன் பெருமையைக்காட்டுகின்றது என்றால், முற்காலத்தில் அது நன்றாக இருந்தபோது

எப்படி இருந்திருக்கும் என்று சொல்லவேண்டியதில்லை. அக்காலக் கட்டிடக் கலையின் உறுதிக்கும் பெருமைக்கும் இது ஒரு அபூர்வமான அடையாளம். இந்தக் கோட்டைக்கு நான்கு பிரதான கோபுர வாசல்கள் இருக்கின்றன. தெற்கு மதிலில் உள்ள வாசல்தான் எல்லாவற்றிலும் முக்கியமானது. இதன் வழியாக உள்ளே போய் இடதுபுறத்தில் பார்த்தால், வடக்குக்கோடியில் ஒரு பெரிய அற்புதமான கட்டிடம் தெரியும். அதுதான் திருமலைநாயக்கர் மண்டபம் என்பது. அதில் திருமலை நாயக்கர், அவரது ராணி, அவரது தம்பி முத்தியாலு நாயக்கர் முதலியவர்களுடைய சிலைகள், தூண்களில் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள திருமலை நாயக்கர் சிலைதான், மற்ற கோயில்களில் உள்ள சிலையைவிட மிக அழகானது. இயற்கை உருவமுடையது. சிற்ப சாஸ்திரத்தின் நுட்பமும் அழகும் முழுதும் பொருந்தியது.

இந்த மண்டபத்திற்கு எதிரிலும் பெரிய தேர்நிலைக்கு மேற்கிலும் திருமலை நாயக்கர் அரண்மனை இருக்கிறது. இது இப்பொழுது இடிந்து அழிந்து வருகிறது. இது ஒரு பிரம்மாண்டமான கட்டிடம். அழிந்த நிலையிலும் இது தன் பெருமையைக் காட்டி நிற்கிறது.

அழகாபுரிக்கோட்டையிலிருந்து உள்கோட்டைக்குப் போக ராயகோபுரம் என்றும் இரண்யன் கோட்டை வாசல் என்றும் இரண்டு வழிகள் உண்டு. ராயகோபுரம் என்பது ராய்ராஜ்நாயக்கர், திருமலை நாயக்கர் என்னும் இரண்டு அரசர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தென்னாட்டில் இவர்கள் கட்டத்தொடங்கிய ராயகோபுரங்கள்

மொத்தம் 96 என்று தெரிகிறது. ஆனால் இந்தக் கோபுரங்கள் ஒன்றும் கட்டி முடிக்கப்படவில்லை. இங்குள்ள ராயகோபுரம் மிகவும் சிதைந்த நிலையில் இருக்கிறது. ஆனால் அதிலும் பல அற்புதமான சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்த வாசல் இப்பொழுது மூடப்பட்டுவிட்டது. இரண்யன் கோபுர வாசல்தான் இப்பொழுது போக்குவரத்துக்கு உபயோகப்படுகிறது.

இதன் வழியாக உள்ளே சென்றால், யானை வாகன மண்டபத்தை முதலில் பார்க்கலாம். இது முன் ஒரு காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றிருந்தது. பழையகாலத்தில் இது ஒருவேளை பலதேவன் அல்லது கண்ணன் சந்நிதியாக இருந்திருக்கலாம். வரிசை வரிசையாக உள்ள தூண்களில் மகாவிஷ்ணுவின் லீலைகள் பல இங்கு மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. பிரம்மோத்சவத்தில் யானை வாகனத்தன்று, இங்கு பெருமாளுக்கு மண்டகப்படி நடக்கிறது. இதைத் தாண்டிப் போனால் முதலில் பதினெட்டாம்படி வருகிறது. இதற்கு எதிரில் மேற்குப்புறமாக ஒரு புஷ்கரணியும் பெரியமேடு ஒன்றும் இருக்கின்றன. இம்மேட்டின் அடியில்தான் முன்பிருந்த முருகன் கோயில் அழிந்துகிடப்பதாகச் சொல்லுகிறார்கள். பதினெட்டாம்படியைத் தாண்டி வண்டி வாசல் வழியாக உள்ளே போனால், யதிராஜன் முற்றம் என்னும் ஒரு பெரிய முற்றத்திற்கு வருகிறோம். இதன் பக்கத்தில் ராமகளஞ்சியம், லக்ஷ்மணகளஞ்சியம் என்னும் இரண்டு பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. இவற்றில் முன்காலத்தில் தானியங்களைக் கொட்டிவைப்பார்கள். இப்பொழுது இவை சேதமடைந்துவிட்டன.

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
112076

ஆனல் செப்பனிட்டு இவற்றைத் தண்ணீர்த்தொட்டி களாக இப்பொழுது உபயோகிக்கிருர்கள். எதிராஜன் முற்றத்தில் தெற்கில் கோடைத்திருநாள் மண்டபம் இருக்கிறது. இதில் சித்திரை உத்சவத்தின் முதல்மூன்று நாள் விழாக்கள் நடைபெறும். மற்ற சமயங்களில் அது சத்திரமாக உபயோகிக்கப்படுகிறது.

கோடைத்திருநாள் மண்டபத்தின் மேற்கில் மண வாளமாமுனி சந்நிதி இருக்கிறது. இதன் மேற்கில் உடையவர், திருக்கச்சிநம்பி சந்நிதிகள் இருக்கின்றன. மணமாள்மாமுனி சந்நிதியின் கர்ப்பக்கிரகம் இப்போது சேதமடைந்துவிட்டது. ஆகையால் விக்கிரகங்கள் கோயி லுக்குள் ஆழ்வார்கள் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன.

வண்டி வாசலில் நுழைந்தவுடன், கண்ணைக்கவரும் படியாக எதிரில் தெரிவது கல்யாண மண்டபமே. இது ஒரு மிக அற்புதச் சிற்பச் சிறப்புள்ள இடம். இதில் நாயக்கர் காலத்து சிற்பக்கலையின் உன்னத தன்மையைப் பார்க்கலாம். இதில் கிழக்குப்புறப் படி வழியாக ஏறினல், முதலில் அங்கே இம்மண்டபத்தைக் கட்டிய இரண்டு அரசர்களின் சிலைகள் நம் கண்ணைக் கவரும். இவர் கள் கிருஷ்ணப்பரும், விசுவநாதரும் ஆவர். இதில் உள்ள மற்ற சிலைகளின் அழகு, மதுரை மீனுக்ஷி கோயி லில் உள்ள சிலைகளின் அழகையும் மிஞ்சுவதாக இருக் கிறது. அவற்றுள் முக்கியமாகப் பார்த்து ரசிக்கத்தகுந் தவை நரசிம்மருடைய இரண்டு தோற்றங்கள். ஸ்ரீகிருஷ் ணர், ரதி, மன்மதன், கருடவாகன விஷ்ணு, திரிவிக் கிரமர், லக்ஷிமிவராகர் முதலியவை. இச்சிலைகள் நவ ரசங்களுக்கும் சிறந்த உதாரணங்களாக இருக்கின்றன.

N65

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அவற்றின் அங்கங்கள் துஷ்டர்களால் உடைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மண்டபத்தை பிரிட்டிஷ்காரர்கள் பெயர்த்து எடுத்துக்கொண்டு போய் இங்கிலாந்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டிருந்தார்களாம். ஆனால் அது கைகூடவில்லை.

இம்மண்டபத்திலிருந்து கோயிலுக்குள் தொண்டமான் கோபுர வாசலின் வழியாகப் போகவேண்டும். இந்தக் கோபுர வாசல், நாயக்கர்களுக்கு முந்திய தொண்டமான் ஒருவனால் கட்டப்பட்டது. இதன் இரண்டு பக்கமும் மிகவும் பெரிய அழகான துவார பாலகர்கள் செதுக்கப்பட்டிருக்கிறார்கள். பிறகு உள்ளே போனால் தங்கத்தால் செய்த துவஜஸ்தம்பம் தெரியும். இதனடியில் அளவில்லாத பொக்கிஷம் புதைக்கப்பட்டிருக்கிறதாம். இதன் இடதுபுறமாகத் திரும்பினால், ஆழ்வார்கள் சந்நிதி மண்டபம் இருக்கிறது. இதில் நுழையும்போது வலதுபுறம் மூன்றாவதாக இருப்பது 5½ அடி உயரமுள்ள ஒரு லிங்காயத்தினுடைய சிலை. இவர் அழகருக்குச் செய்த ஒரு பெரிய திருப்பணியின் காரணமாக இங்கு இடம் பெற்றிருக்கிறார் என்று தெரிகிறது. அல்லது முன்பு இருந்த முருகனுடைய சந்நிதியிலிருந்து கொண்டுவந்து இதை பிறகு யாரோ இங்கே வைத்திருக்கலாம்.

இக்கோயிலுக்கு முழுதும் பொன்வேய்ந்த சுந்தர பாண்டியன் என்னும் பாண்டிய அரசன் பெயரால் இங்கே ஒரு மண்டபம் இருக்கிறது. இவன் இங்கு அழகியமணவாளன் மண்டபத்தையும் திருமுத்தின் பந்தலையும் கட்டிப் பொன்வேய்ந்தான். சுந்தரபாண்டியன்

கட்டிய மேட்டுக் கிருஷ்ணன் கோயில் என்று ஒன்றும் உண்டு. சுந்தரபாண்டியன் மண்டபம் தான் இப்பொழுது முக்கிய உத்சவ மண்டபம். இங்கிருந்து தான் அலங்கரிக்கப்பட்ட உத்சவர் புறப்படுவார். துவஜஸ்தம்பத்தைத் தாண்டி நேராக வந்தால் ஆர்யன் மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். இது ஒரு காலத்தில் முழுதும் தங்கத் தகட்டால் வேயப் பட்டது. இம்மண்டபத்தில் ஏறியவுடன் மிக அழகாகச் செதுக்கப்பட்ட தூண்களில் உள்ள அரிய சிலைகளைக் காணலாம். யாளிகளின் வாயில் கற்கள் உருளும் படியாகச் செய்யப்பட்ட அற்புதமான சிற்ப சாஸ்திர சமத்காரத்தையெல்லாம் இங்கே பார்க்கலாம். இம்மண்ட பத்தின் மேல்புறமும் அற்புத்மான வேலைப்பாடுடையது. இதில்தான் வட்டெழுத்து, 'கிரந்தம்' தமிழ் முதலிய எழுத்துக்களில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இது கி. பி. 6, 7, நூற்றுண்டுகளில் கட்டப்பட்ட தென்று தெரிகிறது.

இந்த மண்டபத்திலிருந்து உள்ளே சென்றவுடன், மகாமண்டபம், கோயில் அலங்காரன் திருமண்டபம், முனைய தரையன் திருமண்டபம் என்னும் பெயர்களுடைய ஒரு அழகான மண்டபத்தை அடைகிறோம். இதன் வாசலுக்கு ஆரியன் வாசல் என்று பெயர். முற்காலத்தில் வடநாட்டிலிருந்து வந்த ஆரிய வீரர்கள் காவல் காத்ததால், இதற்குப் இப்பெயர் வந்திருக்கலாம் இந்த மண்டபத்திலிருந்து பிறகு நாம் இரண்டாம் பிராகாரத்தில் நுழைகிறோம். இப்பிராகாரத்தில் வடக்குப்புறத்தில் ஓர் குறிப்பிட்டிருக்கிற இடத்திலிருந்து பார்த்தால், மூலவர் மேலுள்ள சோமச்சந்த விமானத்தின் திவ்விய

தரிசனம் கிடைக்கும். மூலவர் ஸ்தானத்திற்குள் நுழையும்போது, இருபுறமும் பெரிய துவார பாலகர் சிலைகள் இருப்பதைப் பார்க்கலாம். இவையும் மிக அழகானவை. இவைகளைத் தாண்டிச் சென்றால் மூலவர் சந்நிதியில் உள்ள, நங்கள் குன்றம் என்னும் பிரணவாகாரமான பிராகாரத்தில் நின்று ஸ்ரீபரமஸ்வாமியின் திவ்ய தரிசனத்தைக் கண்ணும் மனமும்குளிர, மயிர்கூச்செறிய கண்டு சேவித்தால் மெய்மறந்து நின்றுவிடுவோம். இந்த இடத்தில்தான் தேவர்கள் எல்லாரும் பகவானைச் சுற்றி நின்று சதாசேவித்துக் கொண்டிருந்தார்களாம். சிலா பிம்பங்களாக இன்னும் விமானத்தைச் சுற்றி காணலாம். இந்தப் பிராகாரத்திலும்சிற்பிகள் பிரமிக்கத்தகுந்த கைத்திறமையை காட்டியிருக்கிறார்கள். பிறகு பெருமாளை வலம் வந்து, கலியாணசுந்தரவல்லித்தாயார் சந்நிதி, ஆண்டாள் சந்நிதி முதலியவற்றையும், பிராகாரங்களில் உள்ள பரிவார தெய்வகளையும் தரிசித்து, அவற்றின் சிற்ப நுட்பங்களையும் கண்டு மகிழலாம்.

இக்கோயிலில் மரத்தில் செய்யப்பட்ட செதுக்கு வேலைகளும் மிக உயர்தரமானவை. இவற்றைக் கதவுகளிலும் நிலைகளிலும் பார்க்கலாம். இவற்றில் சில, ஆயிரம் வருஷங்களுக்கு முந்தியவை. இவற்றைப்போல வேறு எங்கும் பார்ப்பது அரிது. வசந்த மண்டபத்தில் சுவர்களில் தீட்டப்பட்டுள்ள வர்ண சித்திரங்களும் மிகவும் பிரமிக்கத்தகுந்தவை. இவை எழுதப்பட்டு பல நூற்றாண்டுகள் ஆயினும், அப்படியே அழியாமல் இருக்கின்றன.

—※—

## 7. மற்றும் பார்க்கத்தகுந்தவை.

—※—

மாதவி மண்டபம்:— நூபுரகங்கைக்குச் செல்லும் வழியில், கனுமண்டபம், தண்டலைக்கோயில் அழிவு பாடுகள் ஆகியவற்றைப் பார்க்கலாம். பிறகு அநுமார் தீர்த்தத்திற்கும் அநுமார் கோயிலுக்கும்போய், கருட-தீர்த்தம், கருடர்கோயில் ஆகியவற்றைக் கண்டு, மாதவி மண்டபத்தில் உள்ள நூபுரகங்கையை அடைகிறோம். இந்த இடத்தில் உள்ள இயற்கைக் காட்சிகள் கண் கொள்ளாத காட்சியாகும். தென் இந்தியாவிலேயே இது ஒரு மிக ரம்மியமான இடம். இந்த மாதவி மண்ட பத்தில் மாதவி (மல்லிகை)க் கொடி முன்பு எங்கும் அழகாகப் படர்ந்திருந்தது. பழைய காலத்தில் அதை மக்கள் விரும்பிப் போற்றியிருக்கவேண்டும். ஸ்தல புராணத்தில் கூட இந்த மண்டபம் மிகவும் அழகாக வருணிக்கப்பட்டு இருக்கிறது. இது மிகவும் பழமை யானது என்பதற்கு இதில் உள்ள விளங்காத கல் வெட்டுகளும் கற்சிலைகளும் போதிய சாட்சியாகும். பிற்காலத்தில் பாண்டியர்களும் நாயக்கர்களும் இதைப் புதுப்பித்ததற்கு அடையாளமாக, அவர்களுடைய சிலை களும் இங்கு உள்ளன.

பஞ்சபாண்டவர் படுக்கை:— அழகர் கோயிலுக்கு அரை மைல் கிழக்கில், மிக அபாயகரமான செங்குத்தான வழியில் சென்று, பஞ்சபாண்டவர் படுக்கை என்னும் குகையைப் பார்க்கலாம். வழியில் சில இடங்களில் படுத்து ஊர்ந்துகொண்டு, அல்லது குனிந்துகொண்டு தான் இக்குகைகளை அடையவேண்டும். இக்குகை மிகப்

பாதுகாவலான ஓர் இடம். இது கழுகுமலை என்னும் குன்றின் உச்சியில் இருக்கிறது. இங்கே அமிர்தம் போன்ற இனிமையான தண்ணீர் இருக்கிறது. இதன் முன்னால் ஒரு பெரிய ஆலமரம் அழகாக நிழலைத்தந்து நிற்கிறது. இங்கேயிருந்து நாம் கீழே காணும் காட்சியும் மிக ரம்மியமானது. இக்குகை ஒரு கூடம் போலவும் அதனுள்ளே 6 அடி முதல் 9 அடி நீளம் இரண்டு மூன்று அடி அகலமும் உள்ள பல கற்படுக்கைகள் இருக்கின்றன. இதில் உள்ள 3-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி லிபி சாசனம், ஜைனர்களும், பௌத்தர்களும் எழுதி வைத்தது. அச்சணந்தி என்னும் ஜைன முனிவர் அதை எழுதினர் என்று தெரிகிறது. ஒரு முனிவரது உருவச் சிலையும் அங்கு செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குகையை ஜைன முனிவர்கள், தாங்கள் வசிப்பதற்காகவும் தவம் செய்வதற்காகவும் ஏற்படுத்திக்கொண்டார்கள். இதற்கும் பஞ்சபாண்டவர் படுக்கை என்று பிற்காலத்தில் எப்படியோ தவருகப் பெயர் வந்துவிட்டது.

**தீர்த்தங்கள்;—** அழகர் கோயிலிலிருந்து வடக்கு வாசல் வழியாக மலைமேல் 2 மைல் தூரம் சென்ருல் நூப்புரகங்கை தீர்த்தத்தை அடையலாம். அதன் உற்பத்தியிடம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதன் தீர்த்தம் யானை துதிக்கை போல பருமனுக, கோமுகியின் வழியாக, மாதவி மண்டபத்தில் வருவதைத்தான் நாம் பார்க்கிருேம். இத்தீர்த்தத்தில் இரும்புச் சத்தும் தாமிரச் சத்தும் அதிகம் இருப்பதாகத் தெரிகிறது. இது சில நோய்களைத் தீர்க்கும் குணமுடையது. இத்தீர்த்தம் தெற்குநோக்கிப் பாயும்போது சிலம்பாறு என்று

பெயர் பெற்று, அழகர் அல்லது சுந்தரராஜரின் அடி களை வருடிக்கொண்டு, கடைசியாக ஏரிகளில் நிறைந்து வயல்களுக்குப் பாய்ச்ச உதவுகிறது. இதன் சுவை மிக இனிமையானது. ஆகையால் இது பழைய நூல்களில் தேன் ஆறு என்றும் சொல்லப்படுகிறது. இதன் மற்ற மகத்துவங்களையும், ஸ்நான பலன்களையும் முன்பே கண்டோம்.

அனுமார் தீர்த்தம் என்பது கோயிலிலிருந்து 1¼ மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கே ஒரு அநுமார் கோயில் இருக்கிறது. இதற்குச் சற்று மேலே, கருட தீர்த்தம், கருடர்கோயில் இரண்டும் இருக்கின்றன. அதன் பக்கத்தில் பாண்டவ தீர்த்தமும் கோயிலும் உள்ளன. மலையில் வடபக்கச்சரிவில், பார்த்த உட னேயே பாபத்தைப் போக்கக்கூடிய பெரிய அருவி என்ற தீர்த்தம் இருக்கிறது. அழகர் கோயிலுக்குச் சிறிது வடக்கே போனால் உத்தரநாராயண வாபி என்னும் தீர்த்தத்தினால் தான் கோயில் பரிவார தேவதைகளுக்கு அபிஷேகமும். சமையலும் செய்யவேண்டும். அழகரு டைய திருமஞ்சனத்திற்குமட்டும் தினந்தோறும் 2 மைல் அப்பால் உள்ள நூபுரகங்கா தீர்த்தமே கொண்டுவர வேண்டும். சைத்ரோத்சவ காலத்தில், அழகர் மதுரைக் கும் வண்டியூருக்கும் போய்த் தங்கியிருக்கும்போது கூட, இந்தத் தீர்த்தமே கொண்டுவரப்படுகிறது. வேறு தீர்த்தத்தில், அழகரை நீராட்டினால், அவர் உருவம் கறுத்துவிடுகிறது என்பதாலேயே, இப்படிச் செய்யப் படுகிறது. இந்த விநோதத்தின் ரகசியம் இன்னும் ஒரு வருக்கும் புலப்படவில்லை.

ஸ்தல விருக்ஷம்:— இந்த கோயிலுக்கு ஸ்தல விருக்ஷம் ஜோதி விருக்ஷமாகும். இதையே அரசமரம் என்கிருர்கள்.

நகைகள்:— இக்கோயிலிலுள்ள நகைகளின் மதிப்பு சுமார் 2, 3 லக்ஷம் ஆகும். அற்புதமான நகைகள். பழமையானவை.

'அரங்கன் சொத்து அழகன் அங்க வடிவுக்கும், காணுது' என்ற மொழியிலிருந்தே விளங்கும்.

வாகனங்கள் நேரில் கண்டு ரசிக்கக்கூடியவை. தங்கம். வெள்ளி, தந்தங்களானவை.

மற்றும் குருகுலம், கணகாட்சிசாலே, மாலேக்கிணறு பார்க்கத்தகுந்தவை.

பிரார்த்தனே:— பலதரப்பட்டவை, அலங்காரத்துடனும் பல வேஷங்களுடனும் பீச்சாங்குழல், நெருப்புப் பந்தம், சாட்டை அடிப்பு முதலியவை நம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்கும். பதினெட்டாம்படியில் நேத்திக்கடனுக்காக தொட்டிலிடுதல், சந்தனக்குடம் எடுத்தல் முதலியவைகள் மிகச் சிறப்பாக நடந்துவருவது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ சுந்தரராஜாய நம:

# 8. திருவிழாக்கள்.

—※—

ஸ்ரீகள்ளழகர் நித்தியோத்ஸவப்பெருமாள். அவருக்குப் பிரதி தினமும் ஏதாவது ஒரு உத்ஸவம் நடந்து கொண்டே இருக்கும். நித்தியோத்ஸவம் அன்றி, சில விசேஷநாட்களில் சிறப்பான திருவிழாக்களும் அவருக்கு நடைபெறுகின்றன. இப்படி நித்திய நைமித்திய வைபவங்களுக்கு உரியவராக ஸ்ரீ அழகர் விளங்குகிறார்.

மிகப் பழைய காலம் தொட்டே ஸ்ரீ அழகருக்கு நடந்து வந்த விழாக்கள் இன்னின்னவையென்றும், அவைகளுக்காகக் கொடுக்கப்பட்ட மானியங்கள், நிபந்தங்கள் அல்லது கட்டளைகள் இன்னின்னவையென்றும், இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களால் நாம் அறியலாம். இக்கட்டளைகளை ஏற்படுத்தியவர்கள் இன்னார் என்றும் அவற்றால் நாம் அறிகிறோம்.

ஸ்ரீகள்ளழகருக்குரிய திருவிழாக்களில் மிகவும் முக்கியமானது சித்திரா பௌர்ணமித் திருநாள் தான். மதுரை ஸ்ரீமீனாக்ஷி கோயிலில் தொடங்கும் சித்திரைத் திருவிழாவும் இவ்விழாவும் ஒரே சமயத்தில் நடக்கின்றன. திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்பு இந்த இரண்டு உற்சவங்களும் வெவ்வேறு மாதங்களில் நடந்தன. அப்பொழுது அழகரின் சைத்ரோத்ஸவம் சித்திரை மாதத்திலும் மீனாக்ஷி கோயில் உற்சவம் மாசி மாதத்திலும் நடந்தன. இதனால்தான் மாசி மாதத்தில் நடக்கும் இத்திருவிழாவில் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்களுடைய ரதம் செல்லும் வீதிகளும் மாசி வீதிகள் என்று

பெயர் ஏற்பட்டது. திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்பு, ஸ்ரீ அழகர் சித்திரை மாதத்தில் அலங்காநல்லூர், தேனூர் முதலிய ஊர்கள் வழியாக வந்து வைகை ஆற்றில் இறங்கி, வண்டியூரில் தங்கியிருந்து, மீண்டும் அழகர் மலையையடைவது வழக்கம். திருமலை நாயக்கர், இந்த இரண்டு விழாக்களையும் ஒன்ருகச் சேர்த்தால், அது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கருதி அப்படியே செய்தார். அவருடைய ஏற்பாட்டின்படியே இப்பொழுது நடந்து வருகிறது.


இப்பொழுது ஸ்ரீ கள்ளழகர் வைகையாற்றில் இறங்கி, வண்டியூர் சென்று, தன் மலைக்குத் திரும்பி விடுவதைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. இக்கதைக்கு சாஸ்திர, புராண ஆதாரம் ஒன்றும் இல்லை. ஆகையால் பொதுவாக சைவ, வைஷ்ணவ மதங்களை ஐக்கியப் படுத்தும் ஒரு முயற்சியாகவே இதைக் கொள்ளவேண்டும். தன் தங்கை ஸ்ரீ மீனுக்ஷிக்கும், ஸ்ரீசுந்தரேஸ்வரருக்கும் கல்யாணம் நடக்கப்போகும் செய்தியைக் கேள்விப் பட்டு, ஸ்ரீ அழகர் கள்ள அழகர் திருக்கோலத்துடன் அந்த வைபவத்தைப் பார்க்க, 12 மைல் தூரத்திலுள்ள தன் இருப்பிடத்தை விட்டுச் சகல கோலாகலங்களுடன் மதுரையை நோக்கி வருகிருர் என்பது இக்கதை. பல்லக்கில் கள்ளர் திருக்கோலத்துடன் வழியில் பல மண்டபங்களில் தங்கி, அவர் தல்லாகுளத்தில் உள்ள பெருமாள் கோயிலை அடைகிருர். இந்தச் சேவையைப் பார்ப்பதற்கும் அழகரை எதிர்கொள்வதற்கும் மதுரை மக்கள் திரண்டுவரும் காட்சி தான் ஸ்ரீ கள்ளழகர் எதிர் சேவை என்று சொல்லப்படும். இரவில் அம்பலகாரர்

மண்டபத்தில் பிரம்மாண்டமான வாணவேடிக்கைகள் கூத்துக்கள், கொட்டுமேளங்கள் முதலியவை நடக்கும். மறுநாள் விடியற்காலே தல்லாகுளம் பெருமாள்கோவிலி லிருந்து (சித்திரா பௌர்ணமியன்று) அழகர் குதிரை வாகனத்தில் புறப்பட்டு, வைகையை நோக்கிச் செல்லு வார். புறப்படும் முன்பு ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சூடிக்கொடுத்த நாச்சியாராகிய ஸ்ரீ ஆண்டாளின் மாலேயைச் சாற்றிக்கொள்கிறுர். இது தவருமல் வருடந் தோறும் நடந்து வருவது விசேஷம். ஸ்ரீ அழகர் ஆற்றுக்குச் செல்லும்பொழுது முதலில் வெட்டிவேர் சப்பரத்திலும், பிறகு மைசூர் மண்டபத்திலிருந்து ஆயிரம்பொன் சப்பரத்திலும் எழுந்து அருளும் காட்சியே கண்கொள்ளாக் காட்சியாகும். ஆற்றில் எழுந்தருளியதும் மதுரை ஸ்ரீ வீரராகவப் பெருமாள் அவரை எதிர்கொண்டு அழைக்கிறுர். இந்த வைபவம் அழகர் ஆற்றில் இறங்குதல் என்று சொல்லப்படும். இதைக் காண லக்ஷக்கணக்கான மக்கள் திரண்டு வருவ தும் கண்கொள்ளாக் காட்சியாகும். மதுரையில் இவ் விழாவே மிகப் பெரிய விழா. வெயில், மழை என்று பாராமல் ஜனங்கள் பகலும் இரவும் ஒரு சிறிய இடத்தை யும் விடாமல் நிறைத்துக்கொண்டு ஆற்றிலும் அதன் கரைகளிலும் மண்டபங்களிலும் கூடியிருப்பார்கள். பின்பு வைகையாற்றின் வழியாகவே நேராக வண்டி யூருக்குப் போகிறுர். அங்கு அன்றிரவு தங்கி இளேப் பாறிச் சைத்யோபசாரம் செய்து கொண்டு மறுநாள் காலே சேஷவாகனத்தில் எழுந்தருளி தேனூர் மண்ட பத்தையடைகிறுர். அங்கு தங்கக் கருட வாகனத்தில் மண்டுக மகரிஷிக்கு மோக்ஷமளிக்கிறுர்; பிறகு அன்றிரவு


ராமாராயர் மண்டபத்திற்கு எழுந்தருளித் தசாவதார சேவை சாதிக்கிறுர். மறுநாள் காலே அழகர் மோகனு வதார சேவையருளி ஆனந்தராயர் பல்லக்கில் ராஜாங்க சேவையுடன் புறப்பட்டு மைசூர் மண்டபத்தில் ஸ்ரீகள்ள ழகர் திருக்கோலத்துடன் புஷ்பப்பல்லக்கு சேவை நடக்கும். மறுநாள் காலேயில் ஸ்ரீ அழகர் அப்பன்திருப்பதிக் குச்சென்று திருமலேயை அடைவார். மறுநாள் அவருக்கு அங்கு சாத்துமுறை நடக்கும்.

இந்த அழகர் திருவிழா மொத்தம் ஒன்பது நாள் நடக்கும். அழகர் மதுரைக்குப் புறப்படும் முன்பே, திருமலேயில் அவருக்குத் திருவிழாக்கள் தொடங்கிவிடும். அந்தத் திருவிழாவின் 4-ம்நாள் மதுரைக்குப் புறப்பட்டு ஒன்பதாம் நாள் மீண்டும் தம்மலேக்குத் திரும்பிடுவார். அழகர் வைகையாற்றில் தங்கியிருக்கும்படியான மூன்று நாட்களிலும்,இரவும் பகலும் அங்கு சேரும் ஜனக்கூட்டம் கணக்கிட முடியாதது. அங்கே அழகர் அருளுகின்ற பலவிதமான சேவைகளேக் கண்டு களிக்கவே மக்கள் கூட்டம் திரண்டிருக்கிறது. அப்போது இரவில் வாண வேடிக்கைகளும் விளேயாட்டுகளும் ஆரவாரங்களும் அளவற்று நடக்கும். இவற்றையெல்லாம் காண, பல மைல் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் மாட்டு வண்டிகளில் வந்து, மூன்று, நான்கு நாட்கள் குடும்பத்துடன் தங்கியிருந்து போவார்கள்.

ஸ்ரீ அழகருக்கு நடக்கும் மற்றத் திருவிழாக்களில் முக்கியமானவை, வைகாசி வசந்த உத்சவ திருநாள், (இது வசந்த மண்டபத்தில் 10 நாள் நடக்கும்), ஆடி



ஹம்ஸத் தெப்பத்தின் விமானம்.



கோவிலின் ஆகாயத் தோற்றம்

பிரம்மோத்சவம் (10 நாள்), அர்ப்பசி தலையருவிஉத்சவம் அல்லது தொட்டி உத்ஸவம் (3 நாள்), கார்த்திகை கைசிகம், மார்கழித்திருநாள், திரு அத்தியயன உத்சவம், மாசி தெப்பம், பங்குனி திருக்கல்யாணம் முதலியன. சித்திரைத் திருவிழாவிற்கு அடுத்தபடி பெரிய திருவிழா ஆடிப் பிரம்மோத்சவமே. இந்தப் பிரம்மோத்சவம் பத்து நாள் நடக்கும். அதில் ஒன்பதாம் நாள் பௌர்ணமியன்று திருத்தேர் நடக்கும். இந்தப் பிரம்மோத்சவத்திற்குக் கிருஷ்ணதேவராயர் இரண்டு கிராமங்களை மானியமாகக் கொடுத்தார். அடுத்த பெரிய உத்சவம் மார்கழித் திருநாள் என்பது. அப்போது ராப்பத்து, பகல்பத்து உத்சவங்கள் முறைப்படி நடக்கும். இதில் 8-ம் நாள் தங்கக்குதிரை வாகன சேவை நடைபெறும். ஸ்ரீஆண்டாள் இங்கு கள்ளழகரைக் கலியாணம் செய்து கொண்டதாக ஐதிக்கியம் உண்டு. ஆகையால் இந்த விழா இங்கு மிகச் சிறப்பாக நடைபெறும். இத் திருக் கல்யாணம் பங்குனி உத்திரத்தில் நடைபெறுகிறது.

பஞ்சபூதங்களுக்குரிய விசேஷ நாட்களில் நடை பெறும் திருவிழாக்களும் இக்கோயிலில் தனிச் சிறப் புடையவை. அவை பிருதிவி (மண்) நாளாகிய விநாயக சதுர்த்தியும், அப்பு (தண்ணீர்) நாளாகிய ஆடிப் பதி னெட்டாம்பெருக்கும், தேஜஸ் (அக்னி) நாளாகிய கார்த் திகைத்தீபமும் வாயு (காற்று) நாளாகிய சரஸ்வதிபூஜை யும், ஆகாச நாளாகிய மகர சங்கராந்தியும் ஆகும்.

ராக்காயி அம்மனுக்கு அமாவாசையன்று கொண் டாடப்படும் திருவிழாவைப்பற்றி முன்பே பார்த்தோம். இந்த அம்மன் அழகர் மலையிலுள்ள ஸ்தலங்களுக்கும்

தீர்த்தங்களுக்கும் அதிதேவதை. வைஷ்ணவ ஆகமத்தின்படி, இவளும் இவள் தங்கை சீனிவளையும் விஷ்ணுவின் பரிவார தேவதைகள். அழகருக்கும் பதினெட்டாம் படியானுக்கும் அடுத்தபடியாக, ராக்காயி அம்மனே இம் மலையிலுள்ள தெய்வங்களுள் முக்கியமானது. இதைச் சேவிக்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் அமாவாசை தோறும் கூடுவார்கள்.

பதினெட்டாம்படிக் கருப்பணசாமிக்கும் சிறப்பான பூஜைகள் நடப்பதை முன்பு கண்டோம். இத்தெய்வத்திற்கு ஆடி அமாவாசையன்றும் பௌர்ணமியன்றும் விசேஷ பூஜைகள் செய்வார்கள். இதற்கு வருஷத்தில் இரண்டு தடவை இப்படி கோலாகலமாகப் பூஜைகள் நடக்கும்,

—*—

## திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் உத்சவங்கள்

—*—

சித்திரை மீ

1. கொட்டகை உத்சவம்.
2. கோடை சைத்திர உத்சவம் (9 நாள் உத்ஸவம்)

வைகாசி மீ

வஸந்த உத்சவம் (10 நாள் உத்ஸவம்)

ஆனி மீ

முப்பழ உத்சவம் (ஒரு நாள்)

ஆடி மீ

1. கருடசேவை.
2. திருவாடிப்பூரம்.
3. பிரம்மோத்ஸவம். (10 நாள் உத்சவம்)

ஆவணி மீ

1. திருப்பவுத்திர உத்சவம். (4 நாள் உத்சவம்)
2. உறியடி உத்சவம்.

புரட்டாசி மீ

1. விநாயக சதுர்த்தி
2. கருட சேவை.
3. நவராத்ரி உத்சவம். (10 நாள் உத்சவம்)

ஐப்பசி மீ

1. வீஜயதசமி—அம்பு போடுதல்.
2. தொட்டி உத்சவம். (3 நாள்)

மார்கழி மீ

1. திருவத்யயன பகல் பத்து உத்சவம்.
2. ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி ராப்பத்து உத்ஸவம்.

தை மீ

1. கனு உத்ஸவம்.
2. தைலக்காப்பு உத்ஸவம்.


மாசி மீ

தெப்ப உத்சவம். (3 நாள்)

பங்குனி மீ

திருக்கல்யாண உத்சவம். (4 நாள்)

ஸ்ரீ



ஸ்ரீஸௌந்தரராஜ பரப்ரஹ்மணே நம:

# பொதுத்தனியன்கள்

அழகிய மணவாளரருளிச்செய்தது.

ஸ்ரீஸைலேஸதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரணவம் வந்தே ரம்யஜாமாதரம் முனிம்.

கூரத்தாழ்வாரருளிச்செய்தது.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்.
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.
யோ நித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம-
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே.
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஸரணம் ப்ரபத்யே.

ஆளவந்தாரருளிச்செய்தது.

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்-
ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா.

பட்டரருளிச்செய்தது.

பூதம்ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலஸேகர யோகிவாஹாந்-
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குஸமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

நாதமுனிகளருளிச்செய்தது.

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்ல்ப்தம் ஸுல்கமாதாதுகாமஹ-
ஸ்வஸுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்யஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம்தம் விஷ்ணுசித்தம்நமாமி.

பாண்டிய பட்டரருளிச்செய்தது.

நேரிசை வெண்பா

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோம்கீழ்மையினில்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.

பாண்டியன் கொண்டாடப்பட்டர்பிரான்வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

தனியன்கள் முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீமத் ஸுந்தர குரவே நம:

# ஆழ்வார் ப்ரபந்தங்கள்

## பெரியாழ்வார் அருளிச்செய்த திருமொழி

(8-ஆம் பாசுரம், 1-ஆம் பத்து, 5-ஆம் பெ-தி.)

1. *உன்னையும் ஒக்கலையில் கொண்டுதமில் மருவி
உன்னோடு தங்கள் கருத்தாயினசெய்துவரும்
கன்னியரும் மகிழக்கண்டவர் கண்குளிரக்
கற்றவர்தெற்றிவரப் பெற்ற எனக்கு அருளி
மன்னு குறுங்குடியாய்! வெள்ளறையாய்! மதிள்சூழ்
சோலைமலைக்கரசே! கண்ணபுரத்தமுதே!
என்னவலம் களைவாய்! ஆடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாய்! ஆடுக ஆடுகவே.

(5-ம் பாசுரம், 3-ம் பத்து, 4-ம் பெ-தி.)

2. சுற்றிநின்று ஆயர்தழைகளிடச்
சுருள்பங்கி நேத்திரத்தால் அணிந்து
பற்றி நின்று ஆயர்கடைத்தலையே
பாடவும் ஆடக்கண்டேன் அன்றிப்பின்
மற்றொருவர்க்கு என்னைப்பேசலொட்டேன்
மாலிருஞ்சோலை எம்மாயற்கல்லால்
கொற்றவனுக்கு இவளாமென்றெண்ணிக்
கொடுமின்கள் கொடீராகில் கோழம்பமே.

## [ திருமாலிருஞ் சோலைமலைச் சிறப்பு. ]

(4-ஆம் பத்து, 2-ஆம் திருமொழி)

அடாணா-ராகம். கலிநிலைத்துறை. ஜம்பை-தாளம்.

3 * அலம்பா வெருட்டாக்கொன்று திரியும் அரக்கரை
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய் நின்றகோன்மலை
சிலம் பார்க்கவந்து தெய்வமகளிர்களாடும் சீர்
சிலம்பாறுபாயும் தென்திருமாலிருஞ்சோலையே.

4 வல்லாளன்தோளும் வாளரக்கன்முடியும் தங்கை
பொல்லாதமூக்கும் போக்குவித்தான்பொருந் தும்மலை
எல்லாவிடத்திலும் எங்கும் பரந்து பல்லாண்டொலி
செல்லாநிற்கும்சீர்த் தென்திருமாலிருஞ்சோலையே.

5 தக்கார்மிக்கார்களைச் சஞ்சலம்செய்யும் சலவரை
தெக்கா நெறியே போக்குவிக்கும் செல்வன்பொன்மலை
எக்காலமும்சென்று சேவித்திருக்கும் அடியரை
அக்கானெறியைமாற்றும் தண்மாலிருஞ்சோலையே.

6 ஆனுயர்கூடி அமைத்த விழவை அமரர்தம்
கோனுர்கோழியக் கோவர்த்தனத்துச்செய்தான்மலை
வானாட்டில்நின்று மாமலர்க்கற்பகத்தொத்திழி
தேனாறுபாயும் தென்திருமாலிருஞ்சோலையே.

7 ஒருவாரணம்பணிகொண்டவன் பொய்கையில்கஞ்சன் தன்
ஒருவாரணம் உயிருண்டவன் சென்றுறையும்மலை
கருவாரணம் தன்பிடி துறந்தோடகடல்வண்ணன்
திருவாணை கூறித்திரியும் தண்திருமாலிருஞ்சோலையே.

8 ஏவிற்றுச்செய்வான் என்றெதிர்த்து வந்தமல்லரை
சாவத்தகர்த்த சாந்தணிதோள் சதுரன்மலை
ஆவத்தனமென்று அமரர்களும் நன்முனிவரும்
சேவித்திருக்கும் தென்திருமாலிருஞ்சோலையே.

9 மன்னர்மறுக மைத்துனன்மார்க்கு ஒருதேரின்மேல்
முன்னங்குநின்றுமோழை யெழுவித்தவன்மலை
கொன்னவில்கூர்வேற்கோன் நெடுமாறன்தென்கூடற்கோன்
தென்னன்கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே.

10 குறுகாத மன்னரைக் கூடுகலக்கி வெங்கானிடைச்
சிறுகால் நெறியே போக்குவிக்கும்செல்வன்பொன்மலை
அறுகால் வரிவண்டுகள் ஆயிரநாமம் சொல்லி
சிறுகாலைப்பாடும் தென்திருமாலிருஞ்சோலையே.

11 சித்தப்புடைத்துச் செங்குருதிகொண்டு பூதங்கள்
அந்திப்பலிகொடுத்து ஆவத்தனம் செய் அப்பன்மலை
இந்திர கோபங்கள் எம்பெருமான் கனிவாயொப்பான்
சிந்தும் புறவில் தென்திருமாலிருஞ்சோலையே.

12 எட்டுத்திசையும் எண்ணிறந்த பெருந்தேவிமார்
விட்டுவிளங்க வீற்றிருந்த விமலன்மலை
பட்டிப்பிடிகள்பகடுரிஞ்சிச் சென்றுமாலைவாய்த்
தெட்டித்திளைக்கும் தென்திருமாலிருஞ்சோலையே

13 *மருதப்பொழிலணி மாலிருஞ்சோலைமலைதன்னை
கருதியுறைகின்ற கார்க்கடல் வண்ணனம்மான் தன்னை
விரதம்கொண்டேத்தும் வில்லிபுத்தூர் விட்டுச்சித்தன்சொல்
கருதியுரைப்பவர் கண்ணன் கழலிணை காண்பர்களே.

## [ திருமாலிருஞ் சோலைமலையின் சிறப்பு ]

(4-ஆம் பத்து, 3-ஆம் திருமொழி)

ஸஹாநா-ராகம். கலிநிலைத்துறை. ரூபக-தாளம்

14 *உருப்பிணி நங்கை தன்னை மீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற
உருப்பனையோட்டிக்கொண்டிட்டு உறைத்திட்ட உறைப்பன்மலை
பொருப்பிடைக்கொன்றை நின்று முறியாழியும் காசும்கொண்டு
விருப்பொடு பொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே.

15 கஞ்சனும் காளியனும் களிறும் மருதும்எருதும்
வஞ்சனையில் மடிய வளர்ந்த மணிவண்ணன்மலை
நஞ்சுமிழ் நாகமெழுந்தணவி நளிர்மாமதியை
செஞ்சுடர் நாவளைக்கும் திருமாலிருஞ்சோலையதே.

46 மன்னுநரகன் தன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து
கன்னி மகளிர்தம்மைக் கவர்ந்த கடல்வண்ணன்மலை
புன்னைசெருந்தியொடு புனவேங்கையும் கோங்கும் நின்று
பொன்னரிமாலைகள்சூழ் பொழில்மாலிருஞ்சோலையதே.

17 மாவலி தன்னுடைய மகன்வாணன் மகளிருந்த
காவலைக்கட்டழித்த தனிக்காளை கருதும்மலை
கோவலர் கோவிந்தனைக் குறமாதர்கள் பண்குறிஞ்சிப்
பாவொலி பாடி நடம்பயில் மாலிருஞ்சோலையதே.

18 * பலபல நாழம் சொல்லிப் பழித்தசிசுபாலன் தன்னை
அலவலைமைதவிர்த்த அழகன் அலங்காரன்மலை
குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை
நீலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலையதே.

19 பாண்டவர் தம்முடைய பாஞ்சாலி மறுக்கமெல்லாம்
ஆண்டுஅங்குநூற்றுவர் தம்பெண்டிர்மேல்வைத்த அப்பன்மலை
பாண்தகு வண்டினங்கள் பண்கள்பாடி மதுப்பருக
தோண்டலுடையமலை தொல்லைமாலிருஞ்சோலையதே.

20 கனங்குழையாள் பொருட்டாக்கணை பாரித்து அரக்கர்தங்கள்
★ இனம்கழுவேற்றுவித்த எழில்தோள் எம்மிராமன்மலை
கனம்கொழி தெள்ளருவிவந்து சூழ்ந்து அகல்ஞாலமெல்லாம்
இனம் குழுவாடும் மலைஎழில் மாலிருஞ்சோலையதே.

21 எரிசிதறும் சரத்தால் இலங்கையினை தன்னுடைய
வரிசிலைவாயில்பெய்து வாய்க்கோட்டம் தவிர்த்துகந்த
அரையனமரும்மலை அமரரோடு கோனும்சென்று
திரிசுடர் சூழும்மலை திருமாலிருஞ்சோலையதே.

22 கோட்டுமண்கொண்டிடந்து குடங்கையில் மண்கொண்டளந்து
மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடுவிமலன்மலை
ஈட்டிய பல்பொருள்கள் எம்பிரானுக்கு அடியுறையென்று
ஓட்டரும்தண் சிலம்பாறுடை மாலிருஞ்சோலையதே.

23 ★ ஆயிரம்தோள் பரப்பி முடியாயிரம் மின்னிலக
ஆயிரம்பைந்தலைய அனந்தசயனம் ஆளும்மலை
ஆயிரமாறுகளும் சுனைகள் பலவாயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே.

24 ★ மாலிருஞ்சோலையென்னும் மலையையுடையமலையை
நாலிருமூர்த்திதன்னை நால்வேதக்கடலமுதை
மேலிருங்கற்பகத்தை வேதாந்த விழுப்பொருளின்
மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன் ★ விரித்தனவே.

---

★ "இனம் கழுகேற்றுவித்த" என்றும் பாடம்.
★ "விரித்தனனே" என்று சிலர் கூறுவர்.

## [ திருமாலிருஞ்சோலை எம்பெருமானைப் போகவொட்டேனென்றுதடுத்தல் ]

(5-ஆம் பத்து, 3-ஆம் திருமொழி)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

[ஸஹானா ராகம்—அடதாளம்]

25 *துக்கச்சுழலையைச் சூழ்ந்துகிடந்த வலையை அறப்பறித்து
புக்கினில் புக்குன்னைக்கண்டுகொண்டேனினிப்போகவிடுவதுண்டோ!
மக்களறுவரைக்கல்லிடைமோத இழந்தவள் தன்வயிற்றில்
சிக்கெனவந்து பிறந்து நின்றாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்!

26 வளைத்துவைத்தேனினிப்போகலொட்டேனுன் தனிந்திரஞாலங்களால்
ஒளித்திடில்நின்திருவாணைகண்டாய்நீ ஒருவர்க்கும்மெய்யனல்லை
அளித்தெங்கும் நாடும் நகரமும் தம்முடைத்தீவினைத்தீர்க்கலுற்று
தெளித்துவலஞ்செய்யும் தீர்த்தமுடைத் திருமாலிருஞ்சோலையெந்தாய்!

27 *உனக்குப் பணிசெய்திருக்கும் தவமுடையேன், இனிப்போய் ஒருவன்
தனக்குப்பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை யழிவுகண்டாய்
புனத்தினைகிள்ளிப்புதுவவிகாட்டிஉன் பொன்னடிவாழ்கவென்று
இனக்குறவர் புதியதுண்ணும் எழில்மாலிருஞ்சோலையெந்தாய்!

28 காதம்பலவும் திரிந்துழன்றேற்குஅங்கோர் நிழலில்லைநீருமில்லை-உன்
பாதநிழலல்லால் மற்றோருயிர்ப்பிடம் நான்எங்குங்காண்கின்றிலேன்
தூதுசென்றாய்! குருபாண்டவர்க்காயங்கோர்பொய்ச்சுற்றம் பேசிச்சென்று
பேதஞ்செய்துஎங்கும் பிணம்படுத்தாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்!

29 காலுமெழாகண்ண நீரும்நில்லாஉடல் சோர்ந்துநடுங்கிகுரல்
மேலுமெழாமயிர்க்கூச்சுமறா எனத்தோள்களும் வீழ்வொழியா
மாலுகளாநிற்கும் என்மனனே!உன்னைவாழத்தலைப்பெய்திட்டேன்
சேலுகளாநிற்கும் நீள்சுனைசூழ் திருமாலிருஞ்சோலையெந்தாய்!

30 எருத்துக்கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் மற்றும்
ஒருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை
மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா! மறுபிறவி தவிரத்
திருத்தி உன்கோயிற் கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலையெந்தாய்!

31 அக்கரை யென்னு மனத்தக்கடலுளழுந்தி உன்பேரருளால்
இக்கரையேறி யிளைத்திருந்தேனை யஞ்சேலென்று கைகவியாய்
சக்கரமும் தடக்கைகளும் கண்களும் பீதகவாடையொடும்
செக்கர் நிறத்துச்சிவப்புடையாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்!

32 எத்தனை காலமும் எத்தனையூழியும் இன்றொடுநாளையென்றே
இத்தனைகாலமும் போய்க்கிறிப்பட்டேன் இனிஉன்னைப்போகலொட்டேன்
மைத்துனன்மார்களை வாழ்வித்துமாற்றலர் நூற்றுவரைக்கெடுத்தாய்!
சித்தம் நின்பாலதறி தியன்றே திருமாலிருஞ்சோலையெந்தாய்!

33 அன்றுவயிற்றில் கிடந்திருந்தே அடிமை செய்யலுற்றிருப்பன்
இன்றுவந்து இங்குஉன்னைக்கண்டுகொண்டேன்.இனிப்போகவிடுவதுண்டோ
சென்றங்குவாணனை ஆயிரந்தோளும் திருச்சக்கரமதனால்
தென்றித்திசைதிசைவீழச்செற்றாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்!

34 *சென்றுலகம் குடைந்தாடும் சுனைத்திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் அடிமேல் அடிமைத்திறம்நேர்படவிண்ணப்பஞ்செய்
பொன்திகழ்மாடம்பொலிந்துதோன்றும் புதுவைக்கோன்விட்டுசித்தன்
ஒன்றினோடொன்பதும் பாடவல்லார் உலகமளந்தான் தமரே.

---

ஸ்ரீ:

ஸ்ரீ பரமஸ்வாமி குரவே நம:

# நாச்சியார் அருளிச்செய்த திருமொழி.

## [திருமாலிருஞ்சோலை யெம்பெருமானை வழிபடுதல்]

(9-ஆம் திருமொழி)

கல்யாணி - ராகம். கலிநிலைத்துறை. ரூபக—தாளம்

35 *சிந்துரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும்
இந்திரகோபங்களே எழுந்தும்பரந்திட்டன வால்
மந்தரம்நாட்டி அன்று மதுரக்கொழுஞ்சாறுகொண்ட
ஸுந்தரத்தோளுடையான் சுழலையில்நின்றுஉய்துங்கொலோ!

36 போர்க்களிறுபொரும் மாலிருஞ்சோலையம்பூம்புறவில்
தார்க்கொடிமுல்லைகளும் தவளநகைகாட்டுகின்ற
கார்க்கொள்*பிடாக்கள் நின்று கழறிச்சிரிக்கத்தரியேன்
ஆர்க்கு இடுகோ! தோழி! அவன்தார்செய்த பூசலையே!

37 கருவிளையொண்மலர்காள்! காயாமலர்காள்! திருமால்
உருவொளிகாட்டுகின்றீர் எனக்கு உய்வழக்கொன்று உரையீர்
திருவிளையாடுதிண்தோள் திருமாலிருஞ்சோலைநம்பி
வரிவளையில்புகுத்துவந்தி பற்றும் வழக்குளதே.

38 பைம்பொழில்வாழ்குயில்காள்! மயில்காள்! ஒண்கருவிளைகாள்!
வம்பக்களங்கனிகாள்! வண்ணப்பூவை நறுமலர்காள்!
ஐம்பெரும்பாதகர்காள்! அணிமாலிருஞ்சோலைநின்ற
எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என்செய்வதே!

39 துங்கமலர்ப்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற
செங்கண் கருமுகிலின் திருவுருப்போல்மலர்மேல்
தொங்கியவண்டினங்காள்! தொகுபூஞ்சுனைகாள்! சுனையில்
தங்கு செந்தாமரைகாள்! எனக்கு ஓர் சரண்சாற்றுமினே.

---

*“படாக்கள்” என்று வழங்குவர்.

40 நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலைநம்பிக்கு நான்
நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன்
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையான் இன்றுவந்து இவைகொள்ளுங்கொலோ!

41 இன்றுவந்து இத்தனையும் அமுது செய்திடப்பெறில் நான்
ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப்பின்னும் ஆளும்செய்வன்
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தேவந்து நேர்படிலே.

42 காலையெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள்
மாலின்வரவுசொல்லி மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ!
சோலைமலைப்பெருமான் துவராபதி யெம்பெருமான்
ஆலினிலைப்பெருமான் அவன் வார்த்தை யுரைக்கின்றதே.

43 கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில் கொன்றைகள்மேல்
தூங்குபொன்மாலைகளோடு உடனாய்நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில்நாணொலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்றுகொலோ.

44 *சந்தொடு காரகிலும் சுமந்து தடங்கள்பொருது
வந்திழியும் சிலம்பாறுடை மாலிருஞ்சோலைநின்ற
சுந்தரனை சுரும்பார்குழல் கோதை தொகுத்துரைத்த
செந்தமிழ் பத்தும்வல்லார் திருமாலடி சேர்வர்களே.

(10-ஆம் திருமொழி, 8-வது பாசுரம்)

45 மழையே! மழையே! மண்புறம்பூசி உள்ளாய்நின்று
மெழுகூற்றினாற்போல் ஊற்றுநல் வேங்கடத்துள்நின்ற
அழகப் பிரானார்தம்மை என்னெஞ்சத்தகப்படத்
தழுவிநின்று என்னைத்ததைத்துக்கொண்டு ஊற்றவும்வல்லையே!

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# பெரிய திருமொழி

(7-வது பாசுரம், 2-ஆம் பத்து, 7-ஆம் திருமொழி)

46 உளங்கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும்
உனக்கன்றி எனக்கு அன்பொன்றிலளால்
வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ்சோலை
மாயனே! என்று வாய்வெருவும்
களங்கனி முறுவல் காரிகை பெரிது
கவலையோடு அவலம் சேர்ந்திருந்த
இளங்கனி யிவளுக்கு என் நினைந்திருந்தாய்!
இடவெந்தை எந்தை பிரானே!

(6-வது பாசுரம், 7-ஆம் பத்து, 3-ஆம் திருமொழி)

47 எட்டனைப்பொழுதாகிலும் என்றும்
என்மனத்தகலா திருக்கும்புகழ்
தட்டலர்த்த பொன்னேயலர் கோங்கின்
தாழ்பொழில் திருமாலிருஞ்சோலையங்
கட்டியை கரும்பீன்ற இன்சாற்றைக்
கர்தலால்மறைநான்கும் முன்னோதிய
பட்டனை பரவைத்துயிலேற்றை என்
பண்பனையன்றிப் பாடல் செய்யேனே.

(7-வது பாசுரம், 7-ஆம் பத்து, 9-ஆம் திருமொழி)

48 சேயோங்கு தண் திருமாலிருஞ்சோலைமலைஉறையும்
மாயா! எனக்குரையாய் இதுமறைநான்கினுளாயே!
தீயோம்புகை மறையோர் சிறுபுலியூர்ச்சலசயனத்
தாயோ! உனதடியார் மனத்தாயோ! அறியேனே.

(8-வது பாசுரம், 9-ஆம் பத்து, 2-ஆம் திருமொழி)

49 மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட
மாலிருஞ்சோலை மணாளர் வந்து என்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார்
நீர்மலையார் கொல்! நினைக்கமாட்டேன்
மஞ்சுயர்பொன் மலைமேலெழுந்த
மாமுகில் போன்றுளர் வந்துகாணீர்
அஞ்சிறைப்புள்ளுமொன்று ஏறிவந்தார்
அச்சோஒருவரழகியவா!

## திருமாலிருஞ் சோலை (1)

(9-ஆம் பத்து, 8-ஆம் திருமொழி)

சுருட்டிராகம். எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.
அடதாளம்

50 *முந்துற உரைக்கேன்விரைக்குழல் மடவார்
கலவியை விடுதடுமாறல்
அந்தரமேழும் அலைகடலேழும்
ஆயஎம்மடிகள் தம்கோயில்
சந்தொடுமணியும் அணிமயில்தழையும்
தழுவிவந்து அருவிகள் நிரந்து
வந்திழிசாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் மடநெஞ்சே!

51 இண்டையும் புனலும் கொண்டிடையின்றி
எழுமினோ தொழுதுமென்று இமையோர்
அண்டரும் பரவ அரவணைத்துயின்ற
சுடர்முடிக்கடவுள் தம் கோயில்
விண்டலர்தூளிவேய்வளர் புறவில்
விரைமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன்
வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே.

52 பிணிவளராக்கை நீங்க நின்றேத்தப்
பெருநில மருளின் முன்னருளி
அணிவளர் குறளாய் அகலிட முழுதும்
அளந்த எம் அடிகள் தம் கோயில்
கணிவளர்வேங்கை நெடு நில மதனில்
குறவர்தம் கவணிடைத்துரந்த
மணிவளர் சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

53 சூர்மையிலாய பேய்முலைசுவைத்துச்
சுடுசரமடுசிலைத்துரந்து
நீர்மையிலாத தாடகைமாள
நினைந்தவர் மனம் கொண்டகோயில்
கார்மலி வேங்கை கோங்கலர் புறவில்
கடிமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன்
வார்புனல் சூழ்தண் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

54 வணங்கலி லரக்கன் செருக்களத்தவிய
மணிமுடி ஒருபதும் புரள
அணங்கெழுந்தவன் தன் கவந்தம் நின்றாட
அமர் செய்த அடிகள்தம் கோயில்
பிணங்கலில் நெடுவேய் நுதிமுகம் கிழிப்பப்
பிரசம் வந்திழிதர பெருந்தேன்
மணங்கமழ் சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

55 விடங்கலந்தமர்ந்த அரவணைத்துயின்று
விளங்கனிக்கு இளங்கன்று விசிறி
குடங்கலந்தாடிக்குரவைமுன்கோத்த
கூத்தஎம் அடிகள்தம் கோயில்
தடங்கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத்
தடவரைக் களிறென்று முனிந்து
மடங்கல் நின்றதிரும் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

56 தேனுகனு விபோயுக அங்கு ஓர்
செழுந்திரள் பனங்கனியுதிர
தானுகந்தெறிந்த தடங்கடல் வண்ணர்
எண்ணிமுன் இடங்கொண்ட கோயில்
வானகச்சோலை மரகதச்சாயல்
மாமணிக்கல்லதர் நிறைந்து
மானுகர் சாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

57 புதமிகு விசும்பில் புணரிசென்றணவப்
பொருகடல் அரவணைத் துயின்று
பதமிகு பரியின் மிகுசினம் தவிர்த்த
பனிமுகில் வண்ணர்தம் கோயில்
கதமிகு சினத்தகட தடக்களிற்றின்
கவுள்வழிக்களிவண்டு பருக
மதமிகுசாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

58 புந்தியில் சமணர் புத்திரென்றிவர்கள்
ஒத்தனபேசவும் உகந்திட்டு
எந்தை பெம்மானுர் இமையவர் தலைவர்
எண்ணிமுன் இடங்கொண்ட கோயில்
சந்தனப்பொழிலின் தாழ்சினை நீழல்
தாழ்வரை மகளிர்கள் நாளும்
மந்திரத்திறைஞ்சும் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

59 *வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை
மாமணி வண்ணரை வணங்கும்
தொண்டரைப் பரவும் சுடரொளி நெடுவேல்
சூல்வயலாலி நன்னுடன்
கண்டல் நல்வேலி மங்கையர் தலைவன்
கலியன்வாயொலி செய்தபனுவல்
கொண்டு இவைபாடும் தவமுடையார்கள்
ஆள்வர் இக்குரை கடலுலகே.

## திருமாலிருஞ்சோலை (2)

[ பிரிவாற்ருது தலைவனை நாடிச்சென்ற தலைவியின் நிலையைக்குறித்துத் தாய் இரங்கிச்கூறிய பாசுரம் ]

ராகம்—கமாஸ். கலிநிலைத்துறை தாளம்—ரூபகம்

60 *மூவரில் முன்முதல்வன் முழங்கார் கடலுள்கிடந்து
பூவலருந்தி தன்னுள் புவனம் படைத்துண்டுமிழ்ந்த
தேவர்கள் நாயகனைத் திருமாலிருஞ் சோலைநின்ற
கோவலர் கோவிந்தனைக் கொடியேரிடை கூடுங்கொலோ !

61 *புனைவளர் பூம்பொழிலார் பொன்னிசூழரங்க நகருள்
முனைவனை மூவுலகும் படைத்த முதல் மூர்த்திதன்னை !
சினைவளர் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை நின்ருன்
கனைகழல்காணுங்கொலோ ! கயற்கண்ணி எம்காரிகையே.

62 உண்டுஉலகேழினையும் ஒரு பாலகன் ஆலிலைமேல்
கண் துயில் கொண்டுகந்த கருமாணிக்க மாமலையை
திண்திறல் மாகரிசேர் திருமாலிருஞ்சோலை நின்ற
அண்டர்தம் கோவினை இன்று அணுகுங்கொல்! என்னுயிழையே.

63 சிங்கமதாய் அவுணன் திறலாகம் முன்கீண்டுகந்த
பங்கயமாமலர்கண பரனைஎம் பரஞ்சுடரை
திங்கள் நன்மாமுகில்சேர் திருமாலிருஞ் சோலைநின்ற
நங்கள்பிரானை இன்று நணுகுங்கொல்! என் நன்னுதலே.

64 தானவன் வேள்வி தன்னில் தனியே குறளாய் நிமிர்ந்து
வானமும் மண்ணகமும் அளந்த திரிவிக்கிரமன்
தேனமர் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ் சோலைநின்ற
வானவர்கோனை இன்றுவணங்கித் தொழவல்லன்கொலோ!

65 *நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்கும் அரியான்
வாசமலர்ப் பொழில்சூழ் வடமதுரைப் பிறந்தான்
தேசமெல்லாம் வணங்கும் திருமாலிருஞ்சோலை நின்ற
கேசவநம்பிதன்னைக் கெண்டையொண்கண்ணிகாணுங்கொலோ.

66 புள்ளினைவாய் பிளந்து பொருமாகரிகொம்பொசித்து
கள்ளச்சகடுதைத்த கருமாணிக்க மாமலையை
தெள்ளருவி கொழிக்கும் திருமாலிருஞ் சோலை நின்ற
வள்ளலை வாணுதலாள் வணங்கித்தொழ வள்ளல்கொலோ!

67 *பார்த்தனுக்கு அன்றருளிப் பாரதத்து ஒரு தேர்முன்நின்று
காத்தவன் தன்னை விண்ணோர் கருமாணிக்க மாமலையை
தீர்த்தனைப்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை நின்ற
மூர்த்தியைக் கைதொழவும் முடியுங்கொல்! என்மொய்குழற்கே.

68 *வலம்புரியாழியனை வரையார் திரள்தோளன்தன்னை
புலம்புரி நூலவனைப் பொழில் வேங்கடவேதியனை
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ் சோலை நின்ற
நலந்திகழ் நாரணனை நணுகுங்கொல்! என் நன்னுதலே.

69 *தேடற்கரியவனைத் திருமாலிருஞ்சோலை நின்ற
ஆடற்பறவையனை அணியாயிழை காணுமென்று
மாடக்கொடி மதிள்சூழ் மங்கையார் கலிகன்றிசொன்ன
பாடல்பனுவல் பத்தும் பயில்வார்க்கு இல்லை பாவங்களே.

(1-ஆம் பெரியதிருமொழி, 10-ஆம் பத்து, 8-வது பாசுரம்)

70 பத்தராவியைப்பால் மதியை அணித்
தொத்தைமாலிருஞ்சோலைத் தொழுதுபோய்
முத்தினைமணியை மணிமாணிக்க
வித்தினைசென்று விண்ணகர்க்காண்டுமே.

(11-ஆம் பத்து, 2-ஆம் திருமொழி 8வது பாசுரம்)

71 மஞ்சுறு மாலிருஞ்சோலை நின்றமணாளனார்
நெஞ்சம் நிறைகொண்டு போயினார் நினைக்கின்றிலர்
வெஞ்சுடர்போய் விடியாமல் எவ்விடம்புக்கதோ!
நஞ்சு உடலம் துயின்றால் நமக்கு இனி நல்லதே.

(11-ஆம் பத்து, 7-ம் திருமொழி. 9-வது பாசுரம்)

72 தேனொடு வண்டாலும் திருமாலிருஞ்சோலை
தானிடமாக்கொண்டான் தடமலர்க்கண்ணிக்காய்
ஆன்விடையேழன்றடர்த்தாற்கு ஆளானாரல்லாதார்
மானிட வரல்ல ரென்று என்மனத்தே வைத்தேனே.

(திருக்குறுந்தாண்டகம் 3-வது பாசுரம்)

73 பாயிரும் பரவை தன்னுள் பருவரை திரித்துவானோர்க்
காயிருந்து அமுதம்கொண்ட அப்பனை எம்பிரானை
வேயிருஞ்சோலை சூழ்ந்து விரிகதிரிரியநின்ற
மாயிருஞ்சோலை மேய மைந்தனை வணங்கினேனே.

(இயற்பா. சிறியதிருமடல் 74-வது பாசுரம்)

74 சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர்—
பாரோர் புகழும்வதரி வடமதுரை

(இயற்பா பெரியதிருமடல் 125-வது பாசுரம்)

மன்னனை மாலிருஞ்சோலைமணாளனை
கொல்நவிலும் ஆழிப்படையானை—கோட்டியூர்

---

# பூதத்தாழ்வார் அருளிச்செய்த இயற்பா.

## இரண்டாம் திருவந்தாதி.

(இரண்டாந்திருவந்தாதி, இயற்பா 46-வது பாசுரம்)

75 பயின்றது அரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள் பயின்றது
அணிதிகழும்சோலை அணிநீர் மலையே
மணிதிகழும் வண் தடக்கைமால்

(48-வது பாசுரம்)

76 உணர்ந்தாய் மறைநான்கும் ஓதினாய் நீதி
மணந்தாய் மலர்மகள் தோள்மாலே! மணந்தாய்போய்
வேயிருஞ்சாரல் வியலிருஞாலம் சூழ்
மாயிருஞ்சோலைமலை.

(54-வது பாசுரம்)

77 வெற்பென்றிருஞ்சோலை வேங்கடமென்றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல்—நிற்பென்று
உளங்கோயில் உள்ளம் வைத்துள்ளினேன் வெள்ளத்
திளங்கோயில் கைவிடேலென்று.

---

## பேயாழ்வார் அருளிச்செய்த இயற்பா.

### மூன்றாந் திருவந்தாதி.

(61-வது பாசுரம்)

78 *பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் தன்விண்ணகர்.

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி.

கீழ் நிஷ்கர்ஷித்த புருஷார்த்தத்தைப் பெறும் பொருட்டுத் திருமாலிருஞ்சோலைமலையை ஆச்ரயிக்கும்படி பரோபதேசஞ் செய்தல்.

பண்—நாட்டம், தாளம்-ஏழொத்து. கேதாரகௌள ராகம்—ஆதிதாளம்.

கலிவிருத்தம்-

(2-ஆம் பத்து, 10-ஆம் திருவாய்மொழி)

79 *கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவியகோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளர்விலராகில் சார்வது சதிரே.

80 சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியாது
அதிர்குரல் சங்கத்து அழகர்தம் கோயில்
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை
பதியதுஏத்தி யெழுவது பயனே.

81 பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே!
புயல் மழைவண்ணர் புரிந்துறை கோயில்
மயல்மிகு பொழில்சூழ் மாலிருஞ்சோலை
அயல் மலையடைவது அது கருமமே.

82 கருமவன் பாசம் கழித்துழன்றுய்யவே
பெருமலை யெடுத்தான் பீடுறை கோயில்
வருமழை தவழும் மாலிருஞ்சோலை
திருமலை யதுவே அடைவது திறமே.

83 திறமுடை வலத்தால் தீவினை பெருக்காது
அறமுயலாழிப் படையவன் கோயில்
மறுவில் வண் சுனைசூழ் மாலிருஞ்சோலை
புறமலை சாரப்போவதுகிறியே.

84 கிறியென நினைமின் கீழ்மைசெய்யாதே
உறியமர் வெண்ணெய் உண்டவன்கோயில்
மறியொடு பிணைசேர் மாலிருஞ்சோலை
நெறிபட அதுவே நினைவது நலமே.

85 நலமென நினைமின் நரகழுந்தாதே
நிலமுனமிடந்தான் நீடுறைகோயில்
மலமறு மதிசேர் மாலிருஞ்சோலை
வலமுறை யெய்தி மருவுதல் வலமே.

86 வலஞ்செய்து வைகல் வழங்கழியாதே
வலஞ்செய்யும் ஆயமாயவன் கோயில்
வலஞ்செய்யும் வானோர் மாலிருஞ்சோலை
வலம்செய்து நாளும் மருவுதல் வழக்கே.

87 வழக்கென நினைமின் வல்வினை மூழ்காது
அழக்கொடியட்டான் அமர்பெருங்கோயில்
மழக்களிற்றினம் சேர் மாலிருஞ்சோலை
தொழக்கருதுவதே துணிவது சூதே.

88 சூதென்று களவும் சூதும் செய்யாதே
வேதமுன் விரித்தான் விரும்பிய கோயில்
மாதுறு மயில்சேர் மாலிருஞ்சோலை
போதவிழ் மலையே புகுவது பொருளே.

89 பொருளென்று இவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல்
மருளில் வண்குருகூர் வண்சடகோபன்
தெருள்கொள்ளச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து
அருளுடையவன்தாள் அணைவிக்கும் முடித்தே

[இப்பதினொன்று பாசுரத்தின் ஸாராம்சமான மணவாள
மாமுனிவர் அருளிச்செய்த திருவாய்மொழி நூற்றந்தாதி]

90 (கிளரொளிசேர் கீழுரைத்தபேறுகிடைக்க
வளரொளிமால் சோலைமலைக்கே—தளர்வறவே
நெஞ்சைவைத்துச் சேருமெனும் நீடுபுகழ்மாறன்தாள்
முன்செலுத்துவோம் எம்முடி—(20).

## [திருமாலிருஞ்சோலை அழகரது திவ்யசௌந்தர்யத்தை அனுபவித்தல்.]

கைங்கர்யஸ்வரூபம், பாகவதஸேஷத்வ பர்யந்தமான

பகவத் கைங்கர்ய மென்னுதல்.

தரவு கொச்சகக்கலிப்பா.

பண் இந்தளம், தாளம்-நடையொத்து, குண்டக்கிரிகை ராகம் ரூபக தாளம்

(1-ஆம் திருவாய்மொழி, 3-ஆம் பத்து,

91 முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ !
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ !
படிச்சோதியாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ ! திருமாலே ! கட்டுரையே.

92 கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம் கையொவ்வா
சுட்டுரைத்த நன்பொன்உன்திருமேனியொளி யொவ்வாது
ஒட்டுரைத்து இவ்வுலகு உன்னைப்புகழ்வெல்லாம் பெரும்பாலும்
பட்டுரையாய்ப் புற்கென்ற காட்டுமால் பரஞ்சோதீ !

93 பரஞ்சோதிநீ பரமாய் தின்னிகழ்ந்து பின்மற்றோர்
பரஞ்சோதி யின்மையின் படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படருலகம் படைத்தஎம்
பரஞ்சோதி ! கோவிந்தா ! பண்புரைக்க மாட்டேனே.

94 மாட்டாதேயாகிலும் இம் மலர்தலைமா ஞாலம் நின்
மாட்டாய மலர் புரையும் திருவுருவம் மனம்வைக்க
மாட்டாத பலசமய மதிகொடுத்தாய் மலர்த்துழாய்
மாட்டே நீ மனம் ★ வைத்தாய் மாஞாலம் வருந்தாதே !

---

★ வைத்தால் என்று உரையின் பாடம்.

95 வருந்தாத அருந்தவத்த மலர்கதிரின் சுடருடம்பாய்
வருந்தாத ஞானமாய் வரம்பின்றி முழுதியன்ருய் !
வருங்காலம் நிகழ்காலம் கழிகாலமாய் உலகை
ஒருங்காக அளிப்பாய் ! சீர்எங்கு உலக்க ஓதுவனே !

96 ஓதுவாரோத்தெல்லாம் எவ்வுலகத்து எவ்வெவையும்
சாதுவாய் நின் புகழின் தகையல்லால் பிறிதில்லை
போதுவாழ் புனந்துழாய் முடியினுய் ! பூவின்மேல்
மாது வாழ்மார்பினுய் ! என்சொல்லியான் வாழ்த்துவனே !

97 வாழ்த்துவார் பலராக நின்னுள்ளே நான்முகனை
மூழ்த்த நீருலகெல்லாம் படையென்று முதல்படைத்தாய் !
கேழ்த்த சீர்அரன்முதலாக் கிளர் தெய்வ மாய்க்கிளர்ந்து
சூழ்த்தமரர் துதித்தால் உன்தொல் புகழ் மாசூணுதே !

98 மாசூணுச் சுடருடம்பாய் மலராது குவியாது
மாசூணுஞானமாய் முழுதுமாய் முழுதியன்ருய் !
மாசூணு வான்கோலத்து அமரர்கோன் வழிபட்டால்
மாசூணு உன்பாதம் மலர்சோதிமழுங்காதே !

99 மழுங்காத வைந்நுதிய சக்கரநல்வலத்தையாய்
தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினயே
மழுங்காத ஞானமே படையாக மலருலகில்
தொழும்பாயார்க்கு அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே !

100 மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே !
முறையால் இவ்வுலகெல்லாம் படைத்திடந்துண்டுமிழ்ந்
தளந்தாய் !
பிறையேறு சடையானும் நான்முகனும் இந்திரனும்
இறையாதல் அறிந்தேத்த வீற்றிருத்தல் இது வியப்பே.

101 ★வியப்பாய வியப்பில்லா மெய்ஞ்ஞான வேதியனை
சயப்புகழார் பலர்வாழும் தடங்குருகூர்ச்சடகோபன்
துயக்கின்றித் தொழுதுரைத்த ஆயிரத்துள் இப்பத்தும்
உயக்கொண்டு பிறப்பறுக்கும் ஒலி முந்நீர்ஞாலத்தே.

(இப்பதினொன்று பாசுரத்தின் ஸாராம்சமான நூற்றந்தாதி).

102 முடியார் திருமலையில் மூண்டுநின்ற மாறன்
அடிவாரந் தன்னில் அழகர்—வடிவழகைப்
பற்றி முடியும் அடியும் படிகலனும்
முற்றும் அனுபவித்தான் முன்.—(21)

---

[ஆழ்வார் அழகரைப் பூர்ணாநுபவம் பண்ணமுடியாமல் வருந்த, எம்பெருமான் இவரது கலக்கத்தைத் தீர்த்தல்]

கலிவிருத்தம்.

பண்-சிகாமரம், தாளம்-ஏழொத்து, முகாரி ராகம், அடதாளம்

(2-ஆம் திருவாய்மொழி, 3-ஆம் பத்து)

103 முந்நீர் ஞாலம் படைத்த எம்முகில் வண்ணனே!
அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழிஉழல்வேன்
வெந்நாள் நோய் வீய வினைகளை வேரறப்பாய்ந்து
எந்நாள் யான் உன்னை இனிவந்து கூடுவனே!

104 வன்மாவையமளந்த எம் வாமனா! நின்
மன்மாமாயப் பல் பிறவியில் படிகின்றயான்
தொன்மாவல் வினைத் தொடர்களை முதலரிந்து
நின்மாதாள் சேர்ந்து நிற்பது எஞ்ஞான்று கொலோ!

105 கொல்லாமாக்கோல் கொலைசெய்து பாரதப்போர்
எல்லாச் சேனையும் இருநிலத்து அவித்தஎந்தாய்!
பொல்லா வாக்கையின் புணர்வினை யறுக்கலறு
சொல்லாய் யான் உன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே!

106 சூழ்ச்சிஞானச் சுடரொளியாகி என்றும்
ஏழ்ச்சிக் கேடின்றி எங்கணும் நிறைந்த எந்தாய்!
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து நின்தாளிணைக்கீழ்
வாழ்ச்சியான் சேரும் வகை அருளாய் வந்தே.

107 வந்தாய்போலே வந்தும் என் மனத்தினை நீ
சிந்தாமல் செய்யாய் இதுவே இதுவாகில்.
கொந்தார் காயாவின் கொழுமலர்த் திருநிறத்த
எந்தாய்! யான் உன்னை எங்குவந்தணுகிற்பனே.

108 கிற்பன்கில்லேனென்றிலன் முனநாளால்
அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்
பற்பல்லாயிரம் உயிர்செய்த பரமா! நின்
நற்பொற்சோதித்தாள் நணுகுவது எஞ்ஞான்றே!

109 எஞ்ஞான்று நாம்இருந்திருந்து இரங்கிநெஞ்சே!
மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி
எஞ்ஞான்று மெங்கும் ஒழிவறநிறைந்து நின்ற
மெய்ஞ்ஞானச் சோதிக்கண்ணனை மேவுதுமே.

110 மேவுதுவபவினைகளை விடுத்துமிலேன்
ஓவுதலின்றி உன்கழல் வணங்கிற்றிலேன்
பாவுதொல் சீர்கண்ணா! என்பரஞ்சுடரே!
கூவுகின்றேன் காண்பான் எங்கெய்தக் கூவுவனே!

111 கூவிக்கூவிக் கொடுவினைத் தூற்றுள் நின்று
பாவியேன் பலகாலம்வழிதிகைத்து அலமர்கின்றேன்
மேவியன்றா நிரைகாத்தவன் உலகமெல்லாம்
தாவிய அம்மானை எங்கு இனித்தலைப் பெய்வனே!

112 தலைப்பெய்காலம் நமன்தமர் பாசம்விட்டால்
அலைப்பூணுண்ணும் அவ்வல்லலெல்லாம் அகல
கலைப்பல் ஞானத்து என்கண்ணனைக் கண்டுகொண்டு
நிலைப்பெற்று என்னெஞ்சம் பெற்றது நீடுயிரே.

113 உயிர்களெல்லா வுலகமு முடையவனை
குயில்கொள் சோலைத் தென்குரு கூர்ச்சடகோபன்
செயிரில் சொல்லிசைமாலை ஆயிரத்துள் இப்பத்தும்
உயிரின்மேலாக்கை ஊனிடையொழிவிக்குமே.

114 முன்னமழகரெழில் மூழ்கும் குருகையர்கோன்
இன்னவள வென்ன எனக்கரித்தாய்த்—தென்ன
காணக்குறையின் கலக்கத்தை சுண்ணன்
ஒருமைப் படுத்தான் ஒழித்து.—(22)

---

தம்முடமபில் எம்பெருமான் மிகுதியாக வைத்துள்ள வாஞ்சையை ஆழ்வார்களால் கட்டி விடுவித்துக்கொண்டு அவனது குணத்தைப் பாராட்டிப் பேசியருளுதல்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பண்-தக்கேசி, தாளம்-ஏழொத்து, தன்யாசிராகம், ஆதிதாளம்.

(7-ஆம் திருவாய்மொழி, 10-ஆம் பத்து)

115 *செஞ்சொற்கவிகாள்! உயிர்காத்தாட்செய்ம்மின் திருமாலிருஞ்
வஞ்சக் கள்வன்மாமாயன் மாயக்கவியாய் வந்து என் (சோலை)
நெஞ்சும் உயிரும் உள்கலந்து நின்றார் அறியாவண்ணம் என்
நெஞ்சுமுயிருமவை யுண்டு தானேயாகி நிறைந்தானே.

116 தானேயாகி நிறைந்து எல்லாவுலகும் உயிரும்தானேயாய்
தானேயானென்பானாகித் தன்னைத்தானே துதித்து எனக்குத்
தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலை
கோனேயாகி நின்றொழிந்தான் என்னைமுற்றும் உயிருண்டே-

117 என்னைமுற்றுமுயிருண்டு என்மாயவாக்கையிதனுள்புக்கு
என்னைமுற்றும் தானேயாய் நின்ற மாய அம்மான்சேர்
தென்னன் திருமாலிருஞ்சோலைத் திசைகைகூப்பிச்சேர்ந்தயான்
இன்னும்போவேனே கொலோ! என்கொல் அம்மான்
திருவருளே!

118 என்கொல் அம்மான் திருவருள்கள்! உலகும் உயிரும் தானேயாய்
நன்கென்னுடலம் கைவிடான் ஞாலத்தூடே நடந்துழக்கி
தென்கொள் திசைக்குத்திலதமாய் நின்ற திருமாலிருஞ்சோலை
நங்கள் குன்றம் கைவிடான் நண்ணா அசுரர் ★ நலியவே.

119 நண்ணா அசுரர் ★ நலிவெய்த நல்ல அமரர் பொலிவெய்த
எண்ணா தனகளெண்ணும் நன்முனிவர் இன்பம் தலைசிறப்ப
பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த்தன்னைத்தான்பாடி
தென்னாவென்னும் என்னம்மான் திருமாலிருஞ்சோலைவானே.

120 திருமாலிருஞ்சோலை யானேயாகிச் செழுமூவுலகும் தன்
ஒருமா வயிற்றினுள்ளே வைத்து ஊழியூழிதலையளிக்கும்
திருமால் என்னையாளுமால் சிவனும் பிரமனும் காணாது
அருமாவெய்தி அடிபரவ அருளையீந்த அம்மானே.

121 அருளையீ என்னம்மானே! என்னும்முக்கணம்மானும்
தெருள்கொள் பிரமனம்மானும் தேவர் கோனும் தேவரும்
இருள்கள்கடியும் முனிவரும் ஏத்தும் அம்மான் திருமலை
மருள்கள்கடியும் மணிமலை திருமாலிருஞ்சோலைமலையே.

122 *திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே என்தலையே
திருமால் வைகுந்தமே தண்திருவேங்கடமே எனதுடலே
அருமாமாயத்து எனதுயிரே மனமே வாக்கே கருமமே
ஒருமா நொடியும் பிரியான் என் ஊழிமுதல்வன் ஒருவனே.

---

★ 'நவியவே' என்றும் பாடம், ★ 'நவிவெய்த' என்றும் பாடம்.

123 ஊழிமுதல்வன் ஒருவனேயென்னும் ஒருவன் உலகெல்லாம்
ஊழிதோறும் தன்னுள்ளே படைத்துக்காத்துக் கெடுத்துழலும்
ஆழிவண்ணன் என்னம்மான் அந்தண் திருமாலிருஞ்சோலை
வாழிமனமே! கைவிடேல் உடலும்உயிரும் மங்கவொட்டே.

124 மங்கவொட்டு உன்மாமாயை திருமாலிருஞ்சோலைமேய
நங்கள்கோனே! யானே நீயாகி என்னை யளித்தானே!
பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம்
இங்கு இவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே.

125 *மானாங்கார மனங்கெட ஐவர்வன்கையர் மங்க
தானாங்கார மாய்ப்புக்குத்தானே தானேயானானை
தேனாங்காரப் பொழில் குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள்
மானாங்காரத்திவைபத்தும் திருமாலிருஞ்சோலைமலைக்கே.

(இப்பதினொன்று பாசுரத்தின் ஸாராம்சமான நூற்றந்தாதி)

126 செஞ்சொற்பரன் தனது சீராரும் மேனிதனில்
வஞ்சிந்துச் செய்கின்ற வாஞ்சைதனின்—விஞ்ச
தலைக்கண்டவனைக்கால் கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட
திண்திறல் மாறன் நம் திரு.

---

## தம்மிடத்து எம்பெருமான் விசேஷமாக விருப்பஞ்செய்வது கண்ட ஆழ்வார், முன்பு தம்மை அகல்வித்து இப்போது இப்படியிருத்தற்குக் காரணம் கூறமாட்டாது நிற்கும் அவனது திறத்தை விஸ்மிதமாய்ப் பேசுதல்

கலிவிருத்தம்.

பண்-இந்தளம், தாளம்-ஏழொத்து, மோஹந ராகம், ஆதி-

(8-ஆம் திருவாய்மொழி, 10-ஆம் பத்து)

1-வது பாசுரம்.

127 *திருமாலிருஞ்சோலைமலையென்றேன். என்ன
திருமால்வந்து என்னெஞ்சு நிறையப்புகுந்தான்
குருமாமணியுந்து புனம் பொன்னித் தென்பால்
திருமால் சென்று சேர்விடம் தென்திருப்பேரே.

128 திருப்பேர் நகரான் திருமாலிருஞ்சோலை
பொருப்பேயுறைகின்ற பிரான் இன்றுவந்து
இருப்பேனென்று என்னெஞ்சு நிறையப் புகுந்தான்
விருப்பேபெற்று அமுதமுண்டு நளித்தேனே.

### இராமாநுச நூற்றந்தாதி.

(மோஹந ராகம்–ரூபக தாளம்)

(106–வது பாசுரம்)

129 *இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் அவை தம்மொடும் வந்து
இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து இன்று அவன் வந்து
இருப்பிடம் என் தனிதயத்துள்ளே தனக்கின்புறவே.

பாசுரங்கள் முற்றுப்பெற்றன.

ஸ்ரீமத் ஸுந்தரராஜார்ப்பணமஸ்து

* "தன்னெடும்" என்று வழங்குவர்.

## ஹனுமார் துதி.

அஞ்சிலே யொன்று பெற்றன் அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றுருக வாரியர்க் காகவேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைகண் டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தானவனெம்மை யளித்துகாப்பான்.

சுபமஸ்து.

---

போகமுனிவர்

அருளிச்செய்த

# ஜெனன சாகரம்

---

காணப்பா வழுகண்ணிச் சித்தருண்டு
கமண்டலநீர் தொட்டியிலே வந்து பாயும்
தோணப்பா பிள்ளைகளொன்பது பேருண்டு
துலங்கிடவே கன்னியொன்றுவவர் பாலுண்டு.

பூணப்பா வதனடியிற் றெப்பமுண்டு
புகழான திரவியங்களேகமுண்டு
மாணப்பா வழகர்மலையென்று பேருமாச்சரியம்
நீலகிரிக்கதிகம்பாரே.

---

# அழகர் மலைவளங்கூறல்.

1. பாரென் றேனம்மலையினுயரஞ் சென்றால்
பதிவான கருப்பானுட கோவிலொன்று
நீரென்றேன் கோவிலுக்குத் தெற்கேசென்றால்
நெடியதொரு பாரையொன்றுஞ் சுனையொன்றுண்டு
பேரென்றேன்வனம் வொன்று பெருந்துக்காணும்
பெரிதாக குகையொன்று கதவுந்தோணும்
சேரென்ற குகையுள்ளே சென்றயாணுச்
செயமானவைகப்பாசித்த ரிருப்பார்தானே.

2. தானென்ற சப்தரிஷி சப்தகன்னி
தற்பரமாந் திருமாலும் மதனிலுண்டாம்
கோனென்ற பச்சைவர்ணக் குதிரையுண்டு
கோடிதான வாகரசப் புரவியுண்டு
மானென்ற நீலவர்ணக் கல்லுமுண்டு
மாணிக்கமேவுமடா சுனையிலப்பா
தேனென்ற தேவைகளநேகமுண்டு
ஜெயமான கமண்டல நீராருண்டாமே.

3. உண்டடா நீலஞ்சோதி மரமுமுண்டு
வுயர்ந்ததொரு மூலிகையு மதிலேயுண்டு.

---

தேவஸ்தானத்தில் நடைமுறையில் உள்ளபடி.

| | | | ரூ. நபை |
|---|---|---|---|
| 1 | சம்பா | ... | 1—25 |
| 2 | தோசை | ... | 1—50 |
| 3 | ச. பொங்கல் | ... | 1—50 |
| 4 | வெ. பொங்கல் ($\frac{1}{8}$ படி) | ... | 0—75 |
| 5 | புளியோதரை ($\frac{1}{8}$ படி) | ... | 0—75 |
| 6 | முடி | ... | 1—00 |
| 7 | சகஸ்ர நாமம் | ... | 1—00 |
| 8 | அர்ச்சனை | ... | 0—25 |
| 9 | ச. மாலை | ... | 0—10 |
| 10 | படித்தேங்காய் | ... | 0—10 |
| 11 | ப. மாலை | ... | 0—10 |
| 12 | கற்பூர ஆரத்தி | ... | 0—08 |
| 13 | பன்னீர் பாட்டில் சாத்த | ... | 0—75 |
| 14 | கர்ண பூஷணம் | ... | 1—06 |
| 15 | விவாஹம் | ... | 10—00 |
| 16 | உபநயனம் | ... | 5—00 |
| 17 | நரஸிம்மன் மாலை | ... | 1—06 |
| 18 | இதர மூலவர் மாலை | ... | 0—25 |
| 19 | மாடு உபயம் செய்ய | ... | 0—75 |
| 20 | வடமாலை | ... | 1—06 |
| 21 | ஷஷ்டி அப்த பூர்த்தி | ... | 10—00 |
| 22 | ஸ்ரீ பெருமாளுக்கு உபய நாச்சிமாருடன் திருமஞ்சனம் செய்ய | ... | 10—00 |
| 23 | பிரமாணம் வாதி | ... | 3—00 |
| | ஷை பிரதிவாதி | ... | 3—00 |
| 24 | படியில் சந்தனம் சாத்த | ... | 2—12 |
| 25 | நாமகரணம் | ... | 2—12 |
| 26 | சேர்க்கை வாக்கு | ... | 2—12 |

# ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்களும் அவர்கள் காலமும்.

| நிர். | ஆழ்வார்கள் | காலம் | | நக்ஷத்திரம் | திதி | பாசுரம் எண் | திருமாலிருஞ் சோலைமலையைப் பற்றிய பாசுரம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொய்கையாழ்வார் | துவாபரயுகம் | 861902 ஞ் B.C. 4202 | திருவோ. | சு. அஷ்டமி | 100 | — |
| 2 | பூதத்தாழ்வார் | டி | டி டி | அவிட்டம் | சு. நவமி | 100 | 2 |
| 3 | பேயாழ்வார் | டி | டி டி | சதயம் | சு. தசமி | 100 | 1 |
| 4 | திருமழிசையாழ்வார் | டி | 862982 ஞ் B- G. 3122 | மகம் | கி. பிரதமை | 216 | — |
| 5 | மதுரகவியாழ்வார் | டி | 863879 ஞ் B. C. 2225 | சித்திரை | பௌர்ணமி | 11 | — |
| 6 | நம்மாழ்வார் | கலியுகம் | 43-ம் நாள் B.C. 3102 | விசாகம் | டி | 1296 | 46 |
| 7 | குலசேகராழ்வார் | டி | 28 ஞ் B. C. 3074 | புனர்பூசம் | சு. துவாதசி | 105 | — |
| 8 | பெரியாழ்வார் | டி | 47 ஞ் B. C. 3055 | சுவாதி | சு. ஏகாதசி | 473 | 34 |
| 9 | ஆண்டாள் | டி | 97 ஞ் B. C 3005 | பூரம் | க. சதுர்த்தி | 173 | 10 |
| 10 | தொண்டரடிப்பொடியாழ்வார் | டி | 289 ஞ் B. C. 2813 | கேட்டை | கி. சதுர்த்தசி | 55 | — |
| 11 | திருப்பாணாழ்வார் | டி | 342 ஞ் B. C. 2760 | ரோகணி | கி. துதியை | 10 | — |
| 12 | திருமங்கையாழ்வார் | டி | 397 ஞ் B. C. 2705 | கார்த்திகை | பௌர்ணமி | 1361 | 30 |



வைகையாற்றில் ஸ்ரீ கள்ளழகர்

எம். வி. எஸ். பிரிண்டர்ஸ். மதுரை-1.